www.padippakam.com

16-28 பிப். '93

ரூ.3.00

# புதிய ஜனநாயகம்

## ரஷ்யாவில் மீண்டும் கம்யூனிச எழுச்சி




படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ சனவரி 6 முதல் 18 முடிய நடந்த பம்பாய் மதக் கலவரத்தில் பலியானதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள 458 பேரில், முஸ்லீம்களின் எண்ணிக்கை மட்டும் 288 ஆகும். இதில் போலீஸ் துப்பாக்கி சூட்டில் இறந்த முஸ்லீம்களின் எண்ணிக்கை மட்டும் 75. பம்பாய் காவல்துறை மதவெறி கொண்டு ஒருதலைப்பட்சமாக நடந்துள்ளது என்றும், கலவரத்தின் போது பயன்படுத்தப்பட்ட அனைத்து ஒலிநாடாக்களையும் பறிமுதல் செய்து பரிசீலிக்க வேண்டும் என்று சனநாயக உரிமைகள் பாதுகாப்பு கமிட்டி கொடுத்திருந்த மனுவை பம்பாய் உயர்நீதி மன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுவிட்டது. 'பாதிக்கப்பட்ட முஸ்லீம்களுக்கு பால் வழங்காதே', கைது செய்த முஸ்லீகளை சுட்டுத் தள்ளு', 'மசூதியை இடித்து நொறுக்கு' என்றவாறு காவல்துறை கட்டுப்பாடு நிலையத்திலிருந்து உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளதை பத்திரிகையாளர்கள் தற்பொழுது அம்பலப் படுத்தியுள்ளனர்.

★ தமிழகத்தில் 1981 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1,000 ஆண்களுக்கு 977-ஆக இருந்த பெண்களின் தொகை, 1991 கணக்கெடுப்பின்படி 974 என்றவாறு குறைந்துள்ளது. 'விகிதாச்சார வீழ்ச்சி குறைவானதுதான் என இதனை ஒதுக்க முடியாது' எனக் கூறும் ஆய்வாளர்கள், பெண் சிசுக் கொலைதான் இதற்கான அடிப்படைக் காரணம் என்கின்றனர். மேலும், மக்கள் தொகை கணக்கெடுப்பு, உயிரோடு இருப்பவர்களை மட்டும்தான் எண்ணிக்கையாகக் கொள்வதும், பிறப்பு - இறப்பு பதிவுகளில், இறப்பிற்கான காரணம் ஆராயப்படாததும், பெண் சிசுக் கொலையின் தீவிரத்தை' உணரவிடாமல் செய்கின்றன எனவும் தெளிவுபடுத்தியுள்ளனர். கிராமங்களில் விவசாயக் குடும்பங்களிலும் பரவிவரும் வரதட்சணை வாங்கும் கொடுமையும், சீர்திருத்த இயக்கங்கள் மக்கள் மத்தியில் பலமாக இல்லாததும் பெண் சிசுக் கொலைக்கு மிக முக்கிய காரணங்களாகின்றன. தொட்டிலைக் கட்டியுள்ள ஜெயா அரசு, இதற்கு எதுவும் நடவடிக்கை எடுக்குமா?

★ தனியார் கல்வி நிலையங்களில் வசூலிக்கப்படும் நன்கொடைக்கு எதிரான வழக்கில், நன்கொடை வசூலிப்பதைக் கண்டித்தும், கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பை மாநில அரசுகளிடம் ஒப்படைத்தும் தீர்ப்பு வழங்கியுள்ளது உச்சநீதி மன்றம். அதே பொழுதில், 'செலவுகளை ஈடுகட்ட கட்டணங்களை தனியார் கல்வி நிறுவனங்கள் அதிகப்படுத்திக் கொள்ளலாம்' என்று கல்வி வியாபாரிகளுக்கு ஏற்றவாறும் தீர்ப்பில் கூறியுள்ளது. மேலும், '14 வயது வரை ஆரம்ப கல்வி அளிப்பது அடிப்படை உரிமை. ஆனால், இது அரசின் பொருளாதார பலத்தையும், வளர்ச்சி நிலையையும் பொருத்தது' என்றும் அதே தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளது. மொத்த மக்கள் தொகையில் 52 சதவீதம் பேர் கல்வியறிவு அற்றும், பல்கலைக் கழகங்கள் தங்கள் நிதியை ஈடு கட்ட வளாகத்தினுள் படப்பிடிப்பு நடத்த அனுமதியளித்தும் வரும் நிலையில் வந்துள்ள இத்தீர்ப்பு, 'பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல்' என்பதைத்தான் நினைவுபடுத்துகிறது!

★ உலக வங்கி விதித்துள்ள கெடு தேதிக்குள் - (31.03.93) நர்மதா அணைக்கட்டு பகுதியிலுள்ள அஞ்ஜன்வாடா கிராமத்தைச் சேர்ந்த மக்களை ஊரைவிட்டு வெளியேற உத்தரவிட்டது ம.பி. அரசு. கிராம மக்கள் கீழ்ப்படிய மறுத்ததுடன், அமைதியான முறையில் மறியலில் ஈடுபட்டுள்ளனர். ஆத்திரமடைந்த அதிகார வர்க்கம், போலீசின் துணையுடன் இரண்டு நாட்கள் அச்சிறு கிராமத்தை துவம்சம் செய்ததுடன், மக்கள் மீது துப்பாக்கி சூடும் நடத்தியுள்ளது. மறுபுறம் குஜராத் அரசு, தனது மாநிலத்தில் மதக் கலவரத்தினால் இறந்து போனவர்களின் உறவினர்களுக்கு வழங்கவுள்ள ஈட்டுத் தொகை ரூ.2 லட்சத்தில் 60 சதவீதத்தை இந்த அணை கட்டுவதற்காக பொது மக்களிடம் நிதி வசூலிக்கும் பொருட்டு வெளியிடப்பட்டுள்ள நர்மதா விகாஸ் பத்திரமாக தரவுள்ளது. 20 வருடங்கள் கழித்தே இப் பத்திரங்களின் மூலம் கிடைக்கும் தொகை என்ன மதிப்பைத் தரப் போகிறது? அதனுடன் மக்களைத் தங்களுக்குள் எதிரெதிராக நிறுத்தும் இவ்வரசுகளின் சதிச் செயல்களை என்னவென்று உரைப்பது?



★ உ.பி. கல்யாண் சிங் அரசு தான் ஆட்சியிலிருந்து இறக்கப்படும் சில நாட்களுக்கு முன்னதாக, மதுராவுக்கு அருகிலுள்ள அரசுக்கு சொந்தமான 43 ஏக்கர் நிலத்தை 33 வருடங்களுக்கு குத்தகைக்கு விட்டுள்ளது. குத்தகை தொகை எவ்வளவு தெரியுமா? வருடத்திற்கு ரூ.1 வீதம், 33 ரூபாய் மட்டுமே. அதிகாரிகள் இதற்கு ஆட்சேபனை தெரிவித்தும்கூட, இதற்கான உத்தரவை கல்யாண் சிங் தானே வழங்கியுள்ளார். மசூதி இடிப்புக்கு மூன்று நாள் முன்பாக, பி.ஜே.பி.-யின் ஆபாச மேடை பேச்சாளரான ரிதம்பரா இரகசியமாக உ.பி.க்கு வந்து, மொத்தமாக பணத்தை கருவூலத்தில் கட்டி பத்திரத்தை வாங்கியுள்ளார். மசூதியை இடித்த பின்பு தனது அரசு பதவியில் இருக்க வாய்ப்பில்லை என்பதை அறிந்தே, இச்சுருட்டலை அவசரமாக செய்து முடித்துள்ளனர் இந்து மதவெறியர்கள்!

★ மசூதி இடிப்பு சம்மந்தமான மத்திய அரசின் வெள்ளை அறிக்கை வந்தால் பி.ஜே.பி.-யின் சாயம் முழுதும் வெளுத்துப் போகும் என சவடால் அடித்துக் கொண்டிருந்தது ராவ் அரசு. விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வெள்ளை அறிக்கையை, பிரச்சனையே டிச.1-லிருந்துதான் ஆரம்பித்தது போலவும், கல்யாண் சிங் அரசு மட்டுமே முழுப்பொறுப்பு என்பதாகவும் - இந்து மத வெறியர்களின் பிற அமைப்புகளும் பொறுப்பானவை என்பது குறிப்பிடப்படவில்லை. — தயாரித்துள்ளது. ஜோஷி, அத்வானி ஆகியோரின் மதவெறிப் பேச்சுகளைக் குறிப்பிடும் இவ்வறிக்கை, இதனை ஆதாரமாகக் கொண்டு தான் நடவடிக்கை எடுக்காததற்கான காரணங்களையோ, தனது தலைமையில் நடந்த மத அமைப்புகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தை விவரங்களையோ குறிப்பிடவில்லை. இதனைவிட ஒரு படி மேலே சென்று, மசூதியினுள் இருந்த 14 தூண்களின் வடிவமைப்பு இஸ்லாமிய கட்டிடக் கலையினைச் சேர்ந்தது அல்ல எனக் கூறி, தனது துரோகத்தனத்தை வெளிக்காட்டியுள்ளது!

★ இந்து மதவெறியர்கள், தங்களின் பிற்போக்கு, மதவெறி கருத்துக்களை நாடு முழுவதும் ஒரே சமயத்தில் மிகவும் பலமான முறையில் பரப்புவதற்கு ஏற்றவாறு செயற்கைகோள் தொலைக் காட்சி நிலையத்தை அமைக்க முடிவெடுத்துள்ளனர். இந்நிலையம், மொரீஷியஸ் தீவுகளை — இக்கும்பலின் மேல்தட்டு புரவலர்கள் அதிகமாக வாழும் நாடு — தலைமையாகக் கொண்டு செயல்பட திட்டம் தீட்டியுள்ளனர். கடந்த தேர்தலின் பொழுதே பாபர் மசூதி இருந்த இடம்தான் இராமன் பிறந்த இடம் என்றவாறு 'வீடியோ' படம் எடுத்து வெளியிட்ட பாரதீய ஜனதாவின் ராஜ்ய சபை உறுப்பினரான ஜெயின், இந்த ஒளிபரப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். ஏற்கனவே, பன்னாட்டு தொலைக் காட்சி நிலையங்கள் தங்கள் நிகழ்ச்சிகளை செயற்கை கோள் மூலம் நாட்டினுள் ஒளிபரப்ப அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், பி.ஜே.பி.-யின் இத்திட்டத்தை எப்படி முறியடிப்பது எனத் தெரியாமல் விழிபிதுங்கி நிற்கிறது ராவ் அரசு!

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

எட்டாம் ஆண்டு

7

16 — 28 பிப். '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# ஆந்திரா: அரசு பயங்கரவாதத்துக்கு பதிலடி

ஆந்திரப் பிரதேசத்தில் தடை செய்யப்பட்டுள்ள இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் — லெனினிஸ்ட்) மக்கள் யுத்தக் குழுவின் இரண்டு அதிரடி நடவடிக்கைகள், அங்கு தொடர்ந்து நீடித்துவரும் அரசு பயங்கரவாதத்தின் மீது அனைவரது கவனத்தையும் திருப்பி இருக்கின்றன. கடந்த ஜனவரி 27-ந் தேதி, ஆந்திரத் தலைநகர் ஐதராபாத் லால்பகதூர் விளையாட்டு மைதானத்தில் தனது மனைவியுடன் உடற்பயிற்சி ஓட்டம் போய்க் கொண்டிருந்த போலீசு துணை பொது இன்ஸ்பெக்டர் (டி.ஐ.ஜி) கோட்டா சீனிவாச வியாஸ் மக்கள் யுத்தக் குழுவின் போராளிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். கூடவே ஓடிக் கொண்டிருந்த இன்னொரு டி.ஐ.ஜி. தினேஷ் ரெட்டியோ, வியாசின் துப்பாக்கிக் காவலனோ தடுக்க முடியாததோடு, காரியத்தை முடித்துக் கொண்டு போராளிகள் அனைவரும் தப்பிவிட்டனர்.

இந்த வியாஸ் ஒரு சாதாரண போலீசு அதிகாரி அல்ல. 1980-களின் துவக்கத்தில் நல்கொண்டா மாவட்ட போலீசு சூப்பிரண்டென்டென்டாக இருந்தபோது "நக்சலைட்டுகளுடன் மோதல்" என்கிற பெயரில் பல போலிச் சண்டைகளை நடத்தி புரட்சியாளர்களைப் படுகொலை செய்து பிரபலமடைந்தவர். அதற்காகவே பதவி உயர்வு தரப்பட்டு, டி.ஐ.ஜி. ஆக்கப்பட்டு நக்சலைட்டுகளை ஒழிக்கும் தனிப் பிரிவிற்கு பொறுப்பளிக்கப்பட்டார். புரட்சியாளர்களை வேட்டையாடிக் கொல்வதற்கு என்றே "கிரே கவுண்டஸ்" (முயல் வேட்டை நாய்கள்) எனப்பட்ட தனியான கொலைப் படையை உருவாக்கினார். இதற்காக இரத்த வெறிபிடித்த போலீசுக்காரன்களைத் தானே தெரிவு செய்து பயிற்சியளித்து ஏவிவிட்டார். இது இப்போது சிறப்புப் பணிப் படை (எஸ்.டி.எஃப்) என்கிற கொலைப் படையாகச் செயல்பட்டு வருகிறது. கிராமங்களில், குறிப்பாக ஆதிவாசிக் குடியிருப்புகளில் புகுந்து சூறையாடுவது, தீயிடுவது, கற்பழிப்பது, சரணடைந்த நக்சலைட்டுகள் என்று கூறி அப்பாவி மக்களை இழுத்துப் போய் சிறையிலடைப்பது, போலீசுடன் மோதல் என்கிற பெயரில் இளைஞர்களைச் சுட்டுக் கொல்வது — இவைதான் அந்தக் கொலைப்படையின் சிறப்புப் பணிகள். இந்தச் சம்பவங்களில் போலீசில் ஒருவருக்குக் கூட சிறுகாயமும் ஏற்பட்டதாகச் செய்தி கிடையாது என்பதே இவர்களின் பயங்கரவாதச் செயலை காட்டுகிறது. இதற்கெல்லாம் மூலகர்த்தாவாக இருந்ததினால்தான் வியாஸ் அழித்தொழிக்கப்பட்டிருக்கிறார். வடக்கு தெலிங்கானா பிராந்தியச் செயலாளரும், வாராங்கல் மாவட்டச் செயலாளரும் போலீசாரால் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கும் முகமாக வியாஸ் சுட்டுக் கொல்லப்பட்டதாக போலீசே கருதுகிறது.


அடுத்து, ஜனவரி 30-ந் தேதி ஆந்திரா, சிந்தாபள்ளி, காங்கிரசு எம்.எல்.ஏ. பி.பாலராஜுவும், ஐ.ஏ.எஸ். அதிகாரி தாசரி சீனிவாசுவும் உட்பட 10 பேரை மக்கள் யுத்தக் குழு போராளிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துள்ளனர். பின்னர் ஏழு பேரை விடுவித்தனர். எம்.எல்.ஏ. உட்பட மூன்று அதிகாரிகளை விடுதலை செய்வதற்கு ஈடாக வாராங்கல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மக்கள் யுத்தக் குழுவின் வனப்பகுதிச் செயலாளர் கிராந்தி ரனதேவை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரினர். இதேமாதிரியான ஒரு சம்பவத்தில் முன்னாள் மத்திய மந்திரி சிவசங்கரின் மகனும், எம்.எல்.ஏ.வுமான சுதிர் குமார் பணயக் கைதியாக வைக்கப்பட்ட போது, புரட்சியாளர்களின் கோரிக்கைகளை ஏற்று சில சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், இப்போது பணயக் கையதியாக உள்ள பாலராஜு ஒரு கிரிஜன ஆதிவாசி என்பதாலும், வியாஸ் அழித்தொழிப்புக்குப் பின் பழிவாங்கத் துடிக்கும் போலீசு வெறியர்களின் நிர்பந்தத்தாலும் பாலராஜுவைப் பலியிடவும் அரசு தயாரானது. சில கிரிஜனப் "பிரமுகர்"களைத் தூண்டிவிட்டும், பணயக் கைதிகளின் உறவினர்களை உண்ணாவிரதம் இருக்கச் செய்தும், புரட்சியாளர்களுக்கு எதிராக அனுதாபத்தையும் ஆத்திரத்தையும் கிளப்ப முயன்றது. கிராந்தி ரனதேவ் விடுதலையாகி மக்கள் யுத்தக் குழுவில் இணைவதில் அவரும் அவரது தாயுமே ஏற்கவில்லை என்று மோசடியாக வானொலியில் அவர்களது "குரலை" ஒலி பரப்பியது. ஒரு தெலுங்கு கவிஞர் நேரிலே விசாரித்த போது இந்த மோசடி அம்பலமானது.

பாலராஜுவைப் பலியிட மேல்சாதி ஆட்சியாளர்கள் தயாராகி வருவதற்கு எதிராக ஆதிவாசி எம்.எல்.ஏ., எம்.பி.க்கள் ஆத்திரமடைந்து, பதவி விலகுவதாக அறிவித்து நிர்பந்தம் கொடுக்கவே போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக் கொண்டது. அரசு. ஆனாலும், அதிகார வர்க்க - சட்டச் சிக்கல்களை முன்னிறுத்தி கிராந்தி ரனதேவின் விடுதலைக்குக் காலம் கடத்தியதோடு பணயக் கைதிகள் வைக்கப்பட்டுள்ள மலைப்பகுதியில் ஏராளமான நவீன ஆயுதமேந்திய அதிரடிப் போலீசுப் படையைக் குவித்துத் தாக்குதல் நடத்தத் தயாரித்தது. பொதுமக்களின் நிர்பந்தம், புரட்சியாளர்களின் உறுதி காரணமாக இறுதியில் அடிபணிந்து கிராந்தி ரனதேவை விடுவிக்க ஒப்புக் கொண்டது.

ஆனால், உடனடியாகவே அரசு பயங்கரவாதத்தைத் தீவிரப்படுத்திப் புரட்சியாளர்கள் மீதும், விவசாயிகள், குறிப்பாக ஆதிவாசிகள் மீதும் மூர்க்கமான கொலை வெறியாட்டத்தை இந்த அரசு கட்டவிழ்த்துவிடும் என்பதில் சந்தேகமே இல்லை. சாத்தியமான அளவு பரந்துபட்ட மக்களைத் திரட்டியே அதை இறுதியில் முறியடிக்க முடியும். தனிநபர் பயங்கரவாதம் ஒரு போராட்ட முறை என்கிற வகையில் வெற்றி பெறாது. என்றாலும் அரசு பயங்கரவாதம் கோரத் தாண்டவமாடும் போது அதற்குப் பதிலடி கொடுக்கும் முகமான புரட்சிகர பயங்கரவாதச் செயல்கள் தவிர்க்க முடியாது என்பதையே சமீபகால ஆந்திர நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



## புலி கப்பல் மீது தாக்குதல்:

# ஆழ்கடல் ஆதிக்கம்

**சர்வதேச கடற்பரப்பு விதிமுறைகளுக்கு விரோதமாக எல்லைமீறி நுழைந்து புலிகளின் ''அகத்'' கப்பலைத் தாக்கி கொலை கிரிமினல் குற்றம் புரிந்த இந்திய அரசுக்கு, உள்நாட்டில் அரசு விதிமுறையை - தடையை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்க என்ன தகுதியிருக்கிறது? அல்லது பிறநாடுகள், ஒப்பந்தங்களையோ சர்வதேச விதிகளையோ மீறும்போது கண்டிப்பதற்குத்தான் என்ன அருகதையுள்ளது? மேலும் இந்திய கடற்படை அதிகாரிகள் உதவியுடனே மாஃபியாக்கள் தங்கம், வெள்ளி, போதை பொருள் முதலானவற்றைக் கடற்பரப்புகளில் கடத்தி ஆட்டம் போடுகையில் புலிகளின் ஆயுதக் கடத்தலை மட்டும் தடுப்பதற்கு அப்படி என்ன அக்கறை? எனவே, புலி கப்பல் மீதான தாக்குதல் ஜனநாயகம், உரிமை பறிக்கும் அடாவடி - அராஜக செயலன்றி பிராந்திய ரௌடித்தனமன்றி வேறெதுவுமில்லை.**

விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டுவின் மரணமும், விடுதலைப் புலிகளின் ''அகத்'' கப்பல் தீப்பிடித்து கடலில் மூழ்கியதும் இந்திய அரசின் தெற்காசிய பிராந்திய வெறிகொண்ட கோரமுகத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. கடற்பரப்பில் நாடுகளின் எல்லைகள் போக, எஞ்சியுள்ள பரந்த பகுதி சர்வதேச விதிகளுக்குட்பட்டவையாகும். எந்த நாட்டவரும் எத்தரப்பினரும் சர்வதேச கடற்பரப்பில் பயணம் செய்யலாம். இவ்வுரிமையை எந்தநாடும் பறித்து நடவடிக்கையில் இறங்குவது சர்வதேச விதிக்கு முரணானது; அடாவடித்தனமானது; ஆனால் அமெரிக்கா முதல் இந்தியா வரை ஆதிக்க வெறிபிடித்த எல்லா நாடுகளும் சர்வதேச விதிகளை மீறுகின்றன; தமது ஆதிக்க நலனுக்காக அவ்வுரிமைகளை காலில் போட்டு மிதிக்கின்றன.

தெற்காசிய பிராந்தியத்தில் தனி வல்லரசு நாடாகத் திகழ வேண்டும் என்பது இந்தியாவின் நெடு நாளைய கனவு. பிராந்திய மேலாதிக்க வெறி பிடித்து இந்தியா அண்டை நாடுகளில் நாட்டாண்மைக்காரனாக தானாக மூக்கை நுழைப்பதும் பாகிஸ்தானுடன் மோதிக் கொண்டிருப்பதும் இதற்காகத்தான். இலங்கையில் நடக்கும் இன விடுதலைப் போரைச் சாதகமாக்கிக் கொண்டு மூக்கை நுழைத்து இலங்கை இந்திய ஒப்பந்தம் போட்டதும், இந்திய ராணுவத்தை அனுப்பி தமிழர்களை, போராளிகளை வேட்டையாடியதும் இவற்றிற்கு சிறந்த உதாரணங்கள். இந்த வரிசையில் ஒன்றுதான் புலிகளின் கப்பல்கள் மீதான அத்துமீறிய தாக்குதல்.

''அகத்'' கப்பல் மீதான இந்திய அரசின் அத்துமீறிய தாக்குதல் இரண்டாவது சம்பவமாகும். இதற்கு முன்பு விடுதலைப் புலிகளின் இன்னொரு வாடகை கப்பலான ''டாங்னோவா'' விற்கும் ஏறக்குறைய இதே கதிதான் நேர்ந்தது. பாசிச ராஜீவ் கொலைக்குப் பின் புலிகளை இந்தியாவிலிருந்து துடைத்தொழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நேரத்தில் 1991 நவம்பர் 6-ந்தேதி இந்தியக் கரையிலிருந்து 140 மைல் தொலைவில் சர்வதேச எல்லையில் சென்ற அக்கப்பலையும் ஒரு படகையும் அடாவடித்தனமாகப் பிடித்ததோடு தடயங்கள் இல்லாத வண்ணம் படகை சுட்டு கடலில் மூழ்கடித்துள்ளது என்பதுதான் உண்மை. இதிலும் கூட முதலில் இரண்டு கப்பல் என்று கூறிய இந்திய அரசு பிறகு ஒரு கப்பல் என்றதும் இன்னும் விளங்காத புதிராகவே உள்ளது.

இதேபோன்ற நடவடிக்கைதான் ''அகத்'' கப்பல் மீதும் எடுக்கப்பட்டுள்ளது. இந்திய கடற்கரையிலிருந்து 440 கி.மீ. தொலைவில் சர்வதேச கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்த ''அகத்'' என்கிற கப்பல், சிங்கப்பூரில் இருந்து கிட்டுவும் பலரும் வரும் புலிகளின் கப்பல் என்பதை

**விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு: இந்திய ஆதிக்க வெறிக்குப் பலி**



தமது உளவுத்துறை (RAW - ''ரா'') மூலம் தகவலறிந்து அத்துமீறி போய் சுற்றி வளைத்தது, இந்தியக் கடற்படை. இச்சம்பவம் 13-1-93 அன்றே நிகழ்ந்ததாகவும் கப்பலிருந்த கிட்டுவை இந்திய அரசு கைது செய்துள்ளதாகவும் ப.நெடுமாறன் மதுரையில் 15-ந் தேதி மாலை பத்திரிக்கைகள் மூலம் அறிவித்தார். ''அகத்'' கப்பலில் இருந்த சக்தி வாய்ந்த தகவல் ஒளிபரப்பு சாதனம் மூலம் லண்டனில் உள்ள புலிகளின் செய்தித் தொடர்பாளர் அறிந்து, தொலைபேசியில் தெரிவித்ததாக நெடுமாறன் கூறினார். பிறகு கப்பலிலிருந்த தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டதாகவும், இந்தியப் படை கிட்டுவை இந்திய கடல் எல்லைக்குள் இழுத்து வர - கைது செய்ய முயன்றதால் சயனைடு அருந்தி கிட்டு முதலானோர் தற்கொலை செய்து கொண்டதாகவும் புலிகள் செய்தி கொடுத்தனர்.

இதற்குப் பிறகே இந்திய அரசு இச்செய்தியை மெள்ள மெள்ள வெளியிட்டது. கப்பல் திடீரென்று தீப்பிடித்து எரிந்ததாகவும் இந்திய மீட்புப்படை நெருங்கியபோது கப்பல் மூழ்கிக் கொண்டிருந்ததாகவும் கப்பலில் எரிந்து கருகிய சில உடல்கள் இருந்ததாகவும் கடலில் குதித்து தப்பமுயன்ற 9 பேரை கைது செய்துள்ளதாகவும் அறிவித்தது. இந்திய தரப்பிலிருந்து எவ்வித ஆயுத பிரயோகமும் செய்யவில்லை, ஆயுதங்கள், வெடிமருந்துகள், பெட்ரோல் - டீசல்கள் முதலியவைகளை இந்திய எல்லை வழியாக கடத்திக் கொண்டு போனதால்தான் மடக்கிப் பிடித்தோம் என்பது இந்தியாவின் வாதம்.

இது அப்பட்டமான பொய்; சர்வதேச எல்லைக்குள் சென்ற அகத் கப்பலை அத்துமீறி - அடாவடித்தனமாக வளைத்துப் பிடித்ததோடு தடயங்கள் இல்லாத வண்ணம் தாக்கி அழித்து மூழ்கடித்துவிட்டது என்பது தான் உண்மையாக இருக்கக்கூடும். ''டாங்னோவா'' கப்பலின் மூலம் இந்திய அரசு புகட்டிய பாடமும் இதுவே! புலிகளை



படிப்பகம்

www.padippakam.com

ஒடுக்குவதில் அதன் இலக்கு. இந்திய எல்லை மட்டுமல்ல; சர்வதேச கடற்பரப்பு தெற்காசிய நாடுகளும் கூடத்தான் என்பதையே இதன்மூலம் நிரூபித்துள்ளது.

அதேசமயம் தனது ஆதிக்க வெறிக்கு எதிராக உள்நாட்டில் குரல் கொடுப்பவர்களை அடக்குவதற்கும் ராவ் அரசு தயங்குவதில்லை. தனது பங்காளி 'ஜெ' அரசு மூலம் பாய்ந்து குதறுகிறது. கிட்டு மரணத்திற்கு இரங்கல் தெரிவித்தும் இந்தியாவின் அத்துமீறிய நடவடிக்கையைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றியதற்காக ப.நெடுமாறன், சுப.வீரபாண்டியன், புலமைப்பித்தன். ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பின்னர் போலி சாட்சிகள் - ஆதாரங்களைக் கொண்டு ப.நெடுமாறன் முதலானோரை 'தடா' வின் கீழ் சிறை வைத்தது தமிழக போலீசு. ஜாமீன் மனு விசாரணையின் போது பொய் குற்றச்சாட்டுகள் அம்பலமாகி போலீசும் நீதிமன்றமும் மூக்குடைப்பட்டன. கிட்டுவிற்கு வீரவணக்கம் தெரிவித்து ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை மேய்ந்தது. போலீசு. காங்கிரசு அரசைக் கண்டித்து காந்தி சிலைக்கும் காங்கிரசு அலுவலகத்திற்கும் குண்டு வைத்ததைக் சாக்கிட்டு தனது அடக்குமுறைக் கரங்களை மேலும் நீட்டி வருகின்றனர். இத்தகைய ஒடுக்குமுறைக்கு புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட இயக்கம் என்றும் எனவே புலிகளும், புலிகளை ஆதரிப்பவர்களும் இந்திய ஒருமைப்பாட்டிற்கு எதிரானவர்கள் என்றும் கூறி நியாயம் கற்பிக்க முனைகிறார்கள்.

இதோடு தமது அத்துமீறிய செயலை மூடிமறைப்பதற்காகத்தான் புலிகள் பற்றிய கிசுகிசுக்களை பரப்பி வருகிறார்கள், ஆட்சியாளர்கள். கிசுகிசு ப்த்திரிக்கைகளும். ஒட்டுப் பொறுக்கி கழிசடை அரசியல்வாதிகளான ''சோ''; சுப்பிரமணியசாமி, மூப்பனார், வாழப்பாடி கோஷ்டியினர் முதலியோரும் தமது இஷ்டத்திற்கு கதை கட்டி ''சேவை'' செய்து வருகிறார்கள்.

''மாத்தையாவுக்கும் கிட்டுவுக்கும் மோதல்; மாத்தையாவுக்குப் பதில் கிட்டு பொறுப்போற்கத்தான் யாழ்ப்பாணம் நோக்கிப் போனார்'', ''மாத்தையாவுக்கும் பிரபாகரனுக்கும் மோதல், மாத்தையாவை ஓரங்கட்டிவிட்டு கிட்டுவை உயர்த்துவதே பிரபாகரனின் திட்டம்'', ''அதனாலேயே கிட்டு போனார்'', ''கிட்டு வந்தது, நேரு விளையாட்டரங்கத்தை குண்டு வைத்து தகர்க்கத்தான்'' ''ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் சேலத்திலிருந்து சென்னைக்கு மாற்றப்படும் போது அவர்களை மீட்கும் திட்டத்தோடுதான் கிட்டு வந்தார்'' ''உட்கட்சி சண்டையால் கிட்டுவை தீர்த்துக்கட்ட புலிகள் நடத்திய நாடகம்தான் இது''. - இவையே அவர்களின் கீழ்த்தரமான பிரச்சாரங்கள். ஆனால் இத்தகைய பிரச்சாரங்கள் - திசைதிருப்பல்கள் எல்லாம் அப்பட்டமான பொய்! அவதூறு! இதன் மூலம் இந்திய அரசின் தெற்காசிய பிராந்திய மேலாதிக்க வெறியும், ஜனநாயக - உரிமை பறிப்பு நடவடிக்கைகளும்தான் மேலும் நிரூபணமாகியுள்ளது.

# சவடால்கள்



☐ இரண்டொரு நாளில் பம்பாயில் அமைதி திரும்பிடவும் படுகொலைகள் நின்றிடவும் பொறுப்பு உள்ளவர்கள் ஆவண செய்யத் தவறினால் அவர்கள் கொண்டாட இருக்கும் ''குடியரசு விழா'' நாளே நம்மவர்கள் மீதான கொலைத் தடுப்புக் கிளர்ச்சி நாளாக மாறலாம்.

— 13-1-93 அன்று பா.ம.க. தலைவர் ராமதாஸ் அறிக்கை.

☐ நாம் கண் சிமிட்டினால், சம்பவங்கள் நம்மை குருடாக்கி விடும் போலிருக்கிறது.

— காங்கிரஸ் பார்லிமெண்ட் கட்சி கூட்டத்தில் நரசிம்மராவ்.

☐ என்றென்றும் எதிர்க்கட்சியாக இருக்கத் தயார் என்று பீட்டர் அல்போன்ஸ் கூறியுள்ளார். எதிர்க்கட்சியாக இருப்பதற்கும் ஜெயலலிதாவின் ஆதரவு இருந்தால்தான் முடியும்.

— அ.தி.மு.க., எம்.பி.சீனிவாசன்

☐ மசூதி இடிக்கப்பட்டதற்காக ஏன் நாடு வீழ்ந்துவிட்டது; ஒரு சிறிய விசயத்திற்கெல்லாம் வீழ்ந்துவிடும் அளவிற்கு இந்தியா பலவீனமாகாவா உள்ளது?

— ராஜஸ்தான் முன்னாள் முதல்வர் பெய்ரான் சிங் செகாவாட்

☐ இந்துமதத் தலைவர்கள் அன்பு காட்டவே போதித்துள்ளனர். பகவத்கீதையும் அதையே போதித்துள்ளது. ஆனால் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் திரித்துக் கூறி போலி இந்துத்துவத்தைப் பின்பற்றி வருகின்றன.

— 'மார்க்கிஸ்டு' கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் சீதாராம் எச்சூரி.

☐ ஜெயலலிதாவை மதிக்கத் தவறியவர்கள் எங்களைப் பொறுத்தவரை பிச்சைக்காரர்கள்தான்.

— சென்னை பொதுக்கூட்டத்தில் அமைச்சர் மதுசூதனன்.

☐ 'எனக்கு பேரும் புகழும் இருந்தபோது காங்கிரசுக்காரன் பயன்படுத்திக் கொண்டான். வாலிபப் பருவத்தில் கட்சிக்காக தமிழகத்தைச் சுற்றி வந்தேன். இப்போது எனக்கு வயதும் வாலிபமும் வருமானமும் போய்விட்டது' என்னை காங்கிரசுக்காரன் விரட்டி விட்டான்.

— காஞ்சிபுரம் பொதுக்கூட்டத்தில் ஜனதா தளம் தலைவர் சிவாஜிகணேசன்.

☐ நாட்டின் ஜனநாயகத் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கு குந்தகம் விளைவிக்கும் சக்திகளை எதிர்த்து நாங்கள் போராடுவோம். இது எங்களுடைய பொறுப்பும்கூட.

— மே.வங்க. முதல்வர் ஜோதிபாசு.

☐ மத அடிப்படை விசயத்தில், காங்கிரசு கட்சி மிதவாத முடிவுகள் எடுக்குமானால், பிறகு அது வீழ்ந்துவிடும்.

— ''எக்னாமிக் டைம்ஸ்'' பத்திரிக்கையில் அர்ஜுன்சிங்.

படிப்பகம்

www.padippakam.com

# "கட் அவுட்" நாயகியின் ஆட்சியில் "ரேஷன்" அட்டைக்குப் பரிதவிப்பு!

பிப்ரவரி, மார்ச் மாதங்கள் நெருங்கியதுமே, மத்திய - மாநில அரசுகளின் வரவு - செலவு தாக்கலில் எந்தெந்த அத்தியாவசியப் பொருட்கள், எப்படியெல்லாம் விலை ஏறுமோ என்ற நினைப்புதான், அன்றாட உழைக்கும் மக்களையும், நடுத்தர வர்க்கத்தினரையும் சுற்றி சுற்றி வரும். நடப்பு ஆண்டுக்கான வரவு - செலவு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டும் முன்பே, ஜெயா அரசு தனது பொருளாதார தாக்குதலை நேரடியாக மக்களின் மீது ஏவி விட்டுள்ளது.

எதன் மீது விலையேற்றினால் தனது கஜானாவை நிரப்பிக் கொள்ள முடியும் என நன்கு அறிந்தே, ரேஷன் கடைகளின் மூலம் விநியோகிக்கப்படும் முக்கியமான அத்தியாவசியப் பொருளான அரிசியின் விலையை உயர்த்தியுள்ளது. இதன் முன் ஆட்சியிலிருந்த எல்லா அரசுகளுமே இந்தப் பாதையில் சென்றவைதான். ஆனால், ஜெயா அரசோ அடி மடியையே அறுக்கும் அளவுக்குத் துணிந்திருக்கிறது. இதுவரை இருந்த மாநில அரசுகளையெல்லாம் தூக்கி சாப்பிட்டுவிடும் அளவிற்கு, கிலோவுக்கு 75 பைசா என அரிசியின் விலையை உயர்த்தியுள்ளது.

"மத்திய அரசிடமிருந்து பெறும் அரிசியின் விலை செப்டம்பர் முதல் கிலோவுக்கு 60 காசு உயர்ந்துள்ளது. மாநில அரசு அதே பழைய விலையில் மக்களுக்கு அரிசியின்னை விநியோகம் செய்தால் ரூ. 100 கோடி வரை இழப்பு ஏற்படும். இந்த விலையேற்றத்தினைத் தவிர்க்க வேறு எதுவும் வழிகள் இருக்கின்றதா என கடந்த 5 மாதங்களாக அரசு தீவிர ஆலோசனை செய்தது. வேறு வாய்ப்புகளே இல்லாதபட்சத்தில், இந்த விலையேற்றம் தவிர்க்க முடியாததாகியுள்ளது" என தனது செயலுக்கு நியாயம் கற்பித்துள்ளது.

'மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு அதிக உரிமைகள் பெற்றுத் தர போராடுவோம்' என சமீபத்தில் சவடால் அடித்தார் ஜெயா. மத்திய அரசு உயர்த்திய விலையை ஈடுகட்ட கூடுதல் மானிய உதவி கேட்டு போராடவில்லை இவர். அதற்குப் பதிலாக, பிற மாநிலங்களில் நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகிக்கப் படும் அரிசியின் விலையைவிட தமிழ்நாட்டில் குறைவாகத்தான் உள்ளது என ஒப்பீடு செய்து பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்கிறார்.

'வேறு வாய்ப்புகளே இல்லாத பட்சத்தில்....' என்னே ஒரு செப்படி வித்தை. பாசிச ஜெயா தனது விலை மதிப்பற்ற உயிரை துப்பாக்கி கலாச்சாரத்திலிருந்து (!) தற்காத்து கொள்வதற்கும், தான் சுற்றுப் பயணம் செய்யும் இடங்களிலெல்லாம் நடத்தப்படும் ஆடம்பர வக்கிர கேலிக்கூத்துகளுக்கும், அவ்விடங்களில் அவரின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும், யானையை கட்டி தீனி போடுவது போல அதிகார வர்க்க ஊதாரித்தனங்களுக்கும் - இவற்றுக்கெல்லாம் செலவு செய்யப்படும் மக்களின் வரிப்பணத்தை கணக்கிட்டாலே போதும். ஒரு பெரும் கணிசமான தொகையை ஆள்வோரும், அதிகார பிரமுகர்களும், அடிவருடி மந்திரி பிரதானிகளும் முழுங்குவது உள்ளங்கை நெல்லிக் கனியாக தெரியவரும்.

இந்த அநாவசிய, ஆடம்பர செலவுகளையெல்லாம் தவிர்ப்பதற்கு தயாராயில்லை இக்கும்பல். ஆயின், அதனை விடுத்து விலையேற்றத்திற்கு மற்றொரு காரணமாக, விவசாயிகளிடமிருந்து பெறப்படும் நெல்லின் கொள்முதல் விலை மத்திய அரசு உயர்த்தியிருப்பதையும் சுட்டிக் காட்டுகிறது. இதன் மூலம் தனது பொறுப்பை தட்டிக் கழிக்க முயற்சிக்கிறது.

விலையை உயர்த்த மட்டும் தனிக் கவனம் கொடுத்து, நடவடிக்கை எடுக்கும் அரசு, நியாயவிலைக் கடைகளின் மூலம் விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்கு தட்டுப்பாடின்றியும் உரிய நாட்களிலும் கிடைக்க ஏற்பாடு செய்வதில்லை. உதாரணமாக, மண்ணெண்ணெய், பெரிய, நடுத்தர, சிறிய நகரங்களில் வசிக்கும் நடுத்தர வர்க்கத்தினர் மட்டுமின்றி, அதற்கும் கீழ்தட்டுகளில் வசிப்போருக்கும் கிராமப்புறங்களில், மின் விளக்கு வசதி இல்லாத வீடுகளில் விளக்கு எரிப்பதற்கும் பயன்படும் முக்கிய பொருளாயுள்ளது. ஒரு குடும்ப அட்டைக்கு 10 லிட்டர் என அறிவித்திருந்தாலும், பொதுவாகவே அதற்கும் குறைவாக 5 முதல் 6 லிட்டர் வரைதான் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சமீப இரண்டு மாதங்களில் சென்னையை அடுத்த அரக்கோணம் பகுதியில் மண்ணெண்ணெய் விநியோகமே கிடையாது; 'இருப்பு இல்லை' என்ற ஒரே பதில் தான். ஆனால், அதே பொழுதில், வெளிசந்தையில் ஒரு லிட்டர் ரூ. 15/- வரைகூட விற்கப்பட்டு வருகிறது. இது பற்றி பொது மக்கள் நியாயவிலைக் கடைகளில் விசாரிக்கும் பொழுது தங்கள் மேலதிகாரிகளைத் தான் கேட்க வேண்டும் எனக் கூறி தப்பித்துக் கொள்கின்றனர். சென்ற மாத இறுதியிலிருந்து சென்னையிலும் மண்ணெண்ணெய் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

நியாய நிலைக் கடைகள் என்றாலே, பொருட்களின் இருப்புப் பட்டியலை பொது மக்கள் பார்வைக்கு வைக்காமல் இருப்பது, குறைந்தபட்ச குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும் விநியோகித்து விட்டு 'இருப்பு இல்லை' என்பது. போலி அட்டைகளைத் தயாரித்துக் கொண்டு, அவ்வட்டைகளுக்கு கொடுத்திருப்பதாக கணக்கு எழுதிக் கொள்வது. வெளிச் சந்தை வியாபாரிகளுக்கு கள்ளத்தனமாக பொருட்களைக் கடத்துவது, மட்டரகமான, நாட்பட்ட பொருள்களைக்கூட விநியோகிப்பது. எடை அளவில் தில்லுமுல்லு செய்வது போன்ற நிர்வாக முறைகேடுகளும், மக்களை மதியாத அதிகார திமிர்த்தனங்களும் தான் நம் அனைவருக்கும் நினைவு வரும்.

இச் சீர்கேடுகளைப் போக்குவதற்கு அவ்வப்போது கண்துடைப்பாக சில நடவடிக்கைகளை எடுப்பதோடு சரி; ஒரு முறையான திட்டத்திற்கான முன் முயற்சிகளை அரசு மேற்கொள்ளவே விரும்புவதில்லை. காரணம், அந்தளவிற்கு இத்துறை பொன் முட்டையிடும் வாத்தாக, ஊழல்மயமான அதிகாரிகளுக்கும் மந்திரிமார்களுக்கும், இவர்கள் தொடர்பு கொண்டுள்ள கள்ள வியாபாரிகளுக்குமுள்ளது. கடைநிலை ஊழியர்களை பழிவாங்கி தங்களை தற்காத்துக் கொள்வதுதான் இவர்கள் இத்துறையை சீர் செய்யும் ஒரே முறை.

மக்களைப் பொருத்தவரையில் மிக கேந்திரமான துறையாக இருந்தும், இத்துறையினை எந்த அளவு அலட்சியத்துடன்

ரேசன் அட்டைக்கு காத்திருக்கும் மக்கள்; உதாசீனப்படுத்தும் 'ஜெ' அரசு





படிப்பகம்

www.padippakam.com

நிர்வகிக்கின்றார்கள் என்பதற்கு புது குடும்ப அட்டைகள் விநியோகம் நல்ல எடுத்துக்காட்டு. தமிழ்நாடு முழுவதுமுள்ள ஒரு கோடியே இருபது லட்சம் அட்டைகளை நான்கு நாட்களில், அலுவல் நேரத்தில் மட்டும் புதுப்பிப்பது என திட்டம் தீட்டியுள்ளனர். நகரம், கிராமம், பகுதி வாரியாக குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு திட்டம் தீட்டிக் கொள்ளாதது, குறைபாடுகள் இருப்பின் அதனை நிவர்த்தி செய்ய உரிய வழிமுறைகளைக் கூறாதது, பழைய அட்டைகளைக் கொண்டே பொருட்களை வாங்கிக் கொள்ளலாம் என எடுத்த முடிவை உடனே மாநிலம் முழுவதும் தெரிவிக்காதது போன்றவை நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்த மக்களை வெறுங்கையுடன் திருப்பியனுப்பியதுடன் அவர்களின் ஒரு நாள் உழைப்பையும் பறித்துக் கொள்வதாகவே இருந்தது. மேலும், சென்னையில் பொருட்களை வாங்க வந்தவர்களின் மீதே தடியடி நடத்தி தங்களின் குரூர புத்தியையும் காட்டிக் கொண்டனர் அதிகாரிகள்.

இதுவரை குடும்ப அட்டைகள் பெறாதவர்கள் ஒரு வெள்ளைத் தாளில் விண்ணப்பித்தால் போதுமானது என அறிவித்துள்ளது அரசு. ஆனால், விண்ணப்பித்தவர்களுக்கெல்லாம் அட்டை வழங்கப்படும் என்ற உத்திரவாதம் கிடையாது. காரணம், விண்ணப்பம் பெற்றுக் கொண்டதற்கான எந்தவிதமான அத்தாட்சியையும் அதிகாரிகள் வழங்குவது கிடையாது. இது மேலும் போலி குடும்ப அட்டைகள் மற்றும் இடைத்தரகர்கள் பெருகவுமே வாய்ப்பளிக்கும்.

புதுப்பிப்பவர்களின் மாத வருமானத்தை பழைய அட்டையில் கொடுத்துள்ளதைவிட இரண்டு, மூன்று மடங்கு கூட்டி அரசு தானே எழுதிக் கொண்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் வெளிசந்தையில் தாறுமாறாக ஏறியிருப்பதால் அன்றாடம் உழைக்கும் மக்கள் மட்டுமின்றி நடுத்தர மக்கள் கூட நியாய விலைக் கடைகளை நம்பியிருக்கும் இச்சூழலில் - பல குடும்பங்கள் அத்தியாவசியப் பண்டங்களை நியாய விலைக் கடைகளின் மூலம் பெறுவதை இதன் மூலம் தடுத்திருக்கிறது. அட்டைகளைப் புதுப்பிப்பதற்குக்கூட கட்டணம் என்ற பெயரில் ஐந்து ரூபாயை மக்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டுள்ளது. இது தவிர, அட்டைகள் அச்சடிப்பதிலும் முறைகேடுகள் செய்து தங்களின் சொந்த பணப் பெட்டியை நிரப்பிக் கொண்டுள்ளனர் ஆள்வோர்கள்.

தங்களின் கொள்ளை நோக்கங்களுக்கு மட்டுமன்றி, சுய விளம்பரத்திற்காகவும் இத்துறையைப் பயன்படுத்துவதுதான் ஆட்சியைப் பிடிப்பவர்களின் நோக்கம். 'சேம நல அரசுகள்' எனத் தங்களை அழைத்துக் கொள்வதால், இத்துறையை அவர்களால் கைகழுவி விட முடியாது. முறை வைத்து பொருட்களில் விலையினைக் கூட்டுவது, பொருட்களின் வரத்தைக் குறைத்து வெளிச் சந்தைக்கு மக்களை நெட்டித் தள்ளுவது இவைதான் இனி அரசின் தந்திரங்களாக அமையும்.

● ரஹீம்

# பஞ்சாப்: பாசிசமயமானது பஞ்சாயத்துத் தேர்தல்

பயங்கரவாதத்தால் பீடிக்கப்பட்ட பஞ்சாபில், கடந்த ஆண்டு நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலில் வெறும் 10% வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த காங்கிரசுக் கட்சி, தற்போது நடந்து முடிந்த பஞ்சாயத்துத் தேர்தலில் 80% வாக்குகளைப் பெற்று உலக மகா சாதனையை நிகழ்த்தியுள்ளது! கடந்த ஜனவரி 16-ந் தேதி முதல் 22-ந் தேதி வரை நான்கு கட்டங்களில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தேர்தலில் காங்கிரசுக் கட்சியும் அதன் ஆதரவு பெற்ற சுயேட்சைகளும் பெருவாரியான வாக்குகளுடன் வெற்றி பெற்றுள்ளனர். ''கிராமப் புறங்கள் அகாலி கட்சிகளின் கோட்டையாக கருதப்பட்டு வந்த பிரமை தகர்ந்து விட்டது; பஞ்சாப் விவசாயிகள் தேசியக் கட்சிகளின் மீது உறுதியான நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதை இத்தேர்தல் நிரூபித்து விட்டது'' என்று ''தேசியப்'' பத்திரிகைகள் பெருமிதம் கொள்கின்றன.

காங்கிரசு கயவாளிகளுக்கு மோசடித் தேர்தல் நடத்தி ஜனநாயக நாடகமாடுவதென்பது கைவந்த கலை. வேட்பாளர்களை விலை பேசுவது, வாக்குச் சாவடிகளைச் சூறையாடுவது, கள்ள ஓட்டுப் போடுவது முதலான வழக்கமான தில்லுமுல்லுகள் போதாதென்று, இப்போது எதிர்க்கட்சி வேட்பாளர்களைச் சட்ட விரோதமாகக் கைது செய்து சிறையிலடைத்துவிட்டு, மோசடித் தேர்தல் நடத்தி வெற்றியையும் சாதித்துள்ளனர்.

அகாலி கட்சிகளின் வேட்பாளர்களை மட்டுமே போட்டியின்றி பொது வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்குமாறும் காங்கிரசு ஆதரவு வேட்பாளர்களைப் புறக்கணிக்குமாறும் மதக் கட்டளையாக சீக்கிய தீவிரவாதிகள் அறிவித்திருந்தனர். இதன்படி 70% கிராமங்களில் அகாலி கட்சிகளின் வேட்பாளர்கள் கிராம மக்களால் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர். இதனால் ஆத்திரமடைந்த காங்கிரசு பொம்மை அரசு, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டோரை போலீசை ஏவி கைது செய்து சிறையிலடைத்துள்ளது. ரோபர், பதேபூர் சாகிப், பாட்டியாலா மாவட்டங்களில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அனைவரும் தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் என்று அரசு குற்றம் சாட்டுகிறது. 'தேசிய' பத்திரிகைகள் மூலம் அவர்களைப் பற்றி அவதூறு பரப்பி வருகிறது.

பதேபூர் சாகிப் மாவட்டத்திலுள்ள ரத்தன்காட் கிராமத்தில் அகாலிதள மான் பிரிவைச் சேர்ந்த ஜெகஜித்சிங், கிராம மக்களால் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த சில நாட்களில், அவர் தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர் என்று குற்றம் சாட்டி போலீசார் அவரைக் கைது செய்து சிறையிலடைத்தனர். அதே சமயம் காங்கிரசு ஆதரவு பெற்ற ஒரு சுயேட்சை வேட்பாளரை நிறுத்தி அவருக்கு வாக்களிக்கும்படி போலீசார் கிராம மக்களை நிர்பந்தித்தனர். இப்படிப் பல கிராமங்களில் போலீசார் பொது வேட்பாளர்களைக் கைது செய்யத் துவங்கியதும், ஜவாண்டா கிராம மக்கள் தாங்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுத்த பஞ்சாயத்துத் தலைவரை போலீசார் கண்ணில் படாமல் மறைந்து வைத்துக் கொண்டனர்!

பஞ்சாப்: துப்பாக்கி முனையில் குறைவான ஓட்டுப் பதிவு,



படிப்பகம்

www.padippakam.com

ரோபார் மாவட்டத்திலுள்ள கோட்டா எனும் கிராமத்தில் நிர்மல்சிங் என்கிற முன்னாள் பஞ்சாயத்துத் தலைவர், கிராம மக்களால் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவர் போலீசாரால் கைது செய்யப்பட்டார். ''பஞ்சாயத்துத் தலைவரை விடுவிக்காதவரை தேர்தல் நடந்து முடிந்ததாக கருதவே முடியாது. ஜனவரி 16-ந் தேதியன்று நாங்கள் வாக்களிக்காமல் தேர்தலைப் புறக்கணிப்போம்'' என்று கிராம மக்கள் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு போராட்டத்தை நடத்தினர். போலீசாரைக் கொண்டு அவர்கள் மீது தாக்குதல் நடத்திய காங்கிரசு ஆட்சியாளர்கள், நடந்து முடிந்த தேர்தலில் அக்கிராம பஞ்சாயத்துக்குப் போட்டியிட்ட காங்கிரசு ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளதாக வெட்கமின்றி அறிவித்துள்ளனர்.

பாப்ராலி கிராமத்தில் லாபாசிங் என்கிற பொது வேட்பாளர் போலீசாரால் கைது செய்யப்பட்டுவிட்ட நிலையில், அவர் சார்பில் அவரது சகோதரரும், பஞ்சாப் பல்கலைக் கழக பேராசிரியருமான சரூப்சிங் வேட்பு மனு தாக்கல் செய்தார். பெருந்திரளான கிராம மக்களுடன் ஊர்வலமாக வந்து வேட்பு மனுவைச் சமர்ப்பித்த அவர், ''கிராமப்புற மக்களின் உணர்வை காங்கிரசு அரசு புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. மக்களின் விருப்பத்துக்கு எதிராகச் செயல்படும் காங்கிரசு அரசினால் ஜனநாயகத்தை ஒருக்காலும் நிலைநாட்ட முடியாது. அவர்கள் காங்கிரசின் வெற்றிக்காக அலைகிறார்கள். ஆனால் அதற்காக அவர்கள் செய்யும் மோசடிகள், ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்கிவிட்டது'' என்கிறார்.

வேறு ஒரு பொது வேட்பாளரை நிறுத்தலாமே என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது, ''அப்படி ஆயிரம் பேரை எங்களால் நிறுத்த முடியும். ஆனால் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர் மீது போலீசார் பொய்க் குற்றம் சாட்டி கைது செய்ததை இது நியாயப்படுத்துவதாகிவிடும்'' என்று இடித்துரைத்தார் அவர்.

சுக்பால் சிங் என்பவர் தற்போது பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட்டதும் போலீசு அவரைப் பிடித்துச் சென்றது. பின்னர் அவர், தான் முன்னாள் நாடாளுமன்றச் சபாநாயகரான குர்தியால்சிங் தில்லான் என்பவரது உறவினர் என்பதை நிரூபிக்க குடும்ப போட்டோவைக் காட்டி தப்பிக்க வேண்டியதாயிற்று.

இப்படி, அகாலி கட்சிகளின் ஆதரவுடன் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் அனைவரும் தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்று தேர்தலுக்கு முன்பே கைது செய்யப்பட்டனர். அல்லது போலீசாரால் கடத்திச் செல்லப்பட்டனர். பல கிராமங்களில் போலீசாரின் எடுபிடிகளே காங்கிரசு ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்களாக தேர்தலில் நிறுத்தப்பட்டனர். தேர்தலுக்கு முன்னர், அரசு விதிகளை மீறி ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்கும் ரூ 2 லட்சம் வரை வளர்ச்சி நிதியாக ஒதுக்கப்பட்டது. இது தவிர காங்கிரசு கட்சி சார்பில் ஒவ்வொரு வேட்பாளரின் வெற்றிக்காகவும் லட்சக் கணக்கில் வாரியிறைக்கப்பட்டது. ஆனாலும் பஞ்சாப் மக்கள் இத்தகைய கவர்ச்சி வாத மாய்மாலங்களுக்கு மயங்காததால், தேர்தலில் அதிக அளவில் வாக்களிக்கும் பஞ்சாயத்துகளுக்கு சிறப்புப் பரிசு அறிவிக்கப்பட்டது. அதுவும் பலனளிக்காது என்பதை அறிந்த காங்கிரசு கயவாளிகள் போலீசாரைக் கொண்டு கிராமங்களில் இலவச சாராய விநியோகம் செய்தனர். கடைசியில் போலீசாரையும் குண்டர்களையும் வைத்து கள்ள ஓட்டுப் போடவைத்து 'ஜனநாயக'த்தை நிலை நாட்டியுள்ளனர்.

நாளும் தொடரும் இந்த அரசு பயங்கரவாதப் படுகொலைகளை மறைத்து, பஞ்சாபில் ஜனநாயகம் பூத்துக் குலுங்குவதாக நாட்டையும் மக்களையும் ஏய்க்கக் கிளம்பிவிட்டனர். இனி பஞ்சாப் காங்கிரசு முதல்வர் பியந்த் சிங்குக்கு 'ஜனநாயகக் காவலர்' என்று பாராட்டு தெரிவித்து 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டியதுதான் பாக்கியிருக்கிறது.

● செல்வம்

## பகத்சிங்கின் உறவினருக்கு நேர்ந்த கதி

பஞ்சாப் சிங்கம், தூக்குக் கயிற்றை முத்தமிட்ட இளம் புரட்சியாளன் என்றெல்லாம் நாட்டு மக்களால் பெருமையுடன் நினைவு கூறப்படும் தியாகத் தோழர் பகத்சிங்கின் உறவினரைக் கூட பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு காங்கிரசு பயங்கரவாதிகள் தொல்லை கொடுத்து வருகின்றனர்.

பகத்சிங்கின் சகோதரி பர்காஷ் கவுரின் மகள் குர்ஜித் கவுர்; அவரைத் திருமணம் செய்துள்ள ஹர்பஜன்சிங் தாட் என்பவர் காங்கிரசு வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட கிராம மக்களால் நிறுத்தப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த காங்கிரசு கயவாளிகள் போலீசை ஏவி, ஜனவரி 12-ந் தேதியன்று ஹர்பஜன்சிங்கை சட்ட விரோதமாகக் கைது செய்து, ஹோஷியாபூர் மாவட்டத்திலுள்ள தாண்டா போலீசு நிலையக் கொட்டடியில் தள்ளினர்.

அரசு பயங்கரவாதத்திற்கு சிக்குண்ட பகத்சிங்கின் உறவினர்கள்



இச்செய்தியைக் கேட்டதும் கிராம மக்கள் வெகுண்டெழுந்து தாண்டா போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு கெரோ போராட்டம் நடத்தினர். பீதியடைந்த போலீசு, வேறு வழியின்றி ஹர்பஜன்சிங்கை விடுதலை செய்தது.

அதன்பிறகு வேட்பு மனு தாக்கல் செய்யும் இறுதி நாளான ஜனவரி 21-ந் தேதியன்று போலீசும் துணை ராணுவப் படைகளும் கிராமத்தைச் சூழ்ந்து சுற்றி வளைத்துக் கொண்டு பீதியூட்டி அவரை வேட்பு மனு தாக்கல் செய்யவிடாமல் தடுத்தனர். ஆனாலும் போலீசு கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, கிராம மக்கள் உதவியுடன் ஹர்பஜன்சிங் கடைசி நேரத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

காங்கிரசு பெருச்சாளிகள் திட்டம் தோல்வியடைந்த எரிச்சலில், அக்கிராம பஞ்சாயத்துத் தேர்தலையே தள்ளி வைக்க உத்திரவிட்டுள்ளனர். கிராமத்தில் மோதலும் வன்முறையும் நிகழும் அபாயம் உள்ளது என்று கூறி அதிகாரிகள் இதை அறிவித்துள்ளனர். ''உண்மையில் மோதலுக்கான எந்த அறிகுறியும் எங்கள் கிராமத்தில் கிடையாது. தியாகி பகத்சிங்கின் குடும்பம் இப்பகுதியில் பெருமையாக மதிக்கப்படும் கௌரவமான குடும்பமாகும். அவரது உறவினரைத் தவிர எங்கள் கிராமத்தில் வேறுயாருக்கும் ஓட்டுப் போட மாட்டோம். காங்கிரசுக்காரன்களின் சூழ்ச்சி எங்களிடம் பலிக்காது'' என்று தாண்டா கிராமத்து மக்கள் எச்சரித்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# ஐ.எம்.எப். — உலக வங்கி அடுத்த தவணை அடகு வைப்பு

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் வந்துவிட்டால், பட்ஜெட் பீதி நடுத்தர வர்க்கத்தினரை பிடித்தாட்டத் தொடங்கிவிடும். எந்தெந்த இனங்களுக்கு வரிபோடலாம், எவற்றுக்கு வரி குறைப்பு செய்யலாம் என குடும்பத் தலைவிகளிடமும், பொருளாதார நிபுணர்களிடமும் பேட்டி கண்டு பத்திரிகைகள் வழக்கமாக பரபரப்பூட்டும். ஆனால் இந்த ஆண்டு அதற்கான அவசியம் ஏதும் இல்லாமல் செய்துவிட்டார் நிதியமைச்சர். ஏனெனில் பட்ஜெட்டுக்கு முன்னரே விலையேற்றம், வரிச்சுமை, கட்டண உயர்வு முதலானவற்றை உலக வங்கியின் உத்தரவுப்படி செயல்படுத்தத் தொடங்கிவிட்டார். பட்ஜெட்டில் சம்பிரதாய முறைப்படி இவை அரசின் கொள்கைகளாக அறிவிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

ஆட்சிக்கு வந்ததுமே பொருளாதாரச் சீர்திருத்தம், தேக்க நிலையை உடைப்பது, மறு சீரமைப்பு என்ற பெயரில் உலக வங்கியிடமும், சர்வதேச நாணய நிதியத்திடமும் (ஐ.எம்.எப்) காங்கிரசு ஆட்சியாளர்கள் நாட்டை முற்றாக அடகு வைத்துவிட்டனர். அதன் பிறகு, அடுத்தடுத்து ஐ.எம்.எப்.பின் கட்டளைகளை ஏற்று நாட்டை மீண்டும் மறுகாலனியாக்கி வருகின்றனர்.

பதவி ஏற்ற சில நாட்களிலேயே ரூபாயின் மதிப்பை இரு தவணைகளில் 20% குறைத்து செல்லாக் காசாக்கினார் நிதியமைச்சர். அன்னியச் செலாவணி நெறிமுறைச் சட்டம் (FERA) முடக்கப்பட்டு, நேரடியாக 51% அளவுக்கு அன்னிய நிறுவனங்கள் முதலீடு செய்ய உரிமை அளித்தார். அதன் பிறகு, ஏகபோக தடுப்புச் சட்டம் (MRTP) குப்பைக் கூடையில் வீசப்பட்டு, தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் தமது சொத்து மதிப்பை உயர்த்திக் கொள்ள சலுகை காட்டப்பட்டது. இதுதவிர 100% அன்னிய முதலீட்டிற்கும், உற்பத்தியானவற்றை நேரடியாக ஏற்றுமதி செய்து கொள்ளவும் வசதிகள் செய்து தரப்பட்டன.

உலக வங்கியிடம் அடுத்தடுத்து கடன் வாங்கி, நாட்டைத் திவாலாக்கும் அதன் நிப்ந்தனைகளைக் கட்டம் கட்டமாக நிறைவேற்றிவந்த காங்கிரசு துரோகிகளுக்கு அயோத்தி விவகாரம் மேலும் சாதகமாகி விட்டது. அயோத்தி மசூதி இடிப்பைத் தொடர்ந்து நாடெங்கும் நடந்த மதவெறிக் கலவரங்களால் பேரிழப்பு ஏற்பட்டுள்ளதைக் காட்டி, இதனால் பொருளாதாரமே நிலைகுலைந்து போய்விட்டது என்றும் இதைச் சீரமைக்க மீண்டும் உலக வங்கியிடம் கையேந்துவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் தமது துரோகத்தை நியாயப்படுத்தி வருகின்றனர்.

இதன்படி மீண்டும் ஐ.எம்.எப்.பிடம் இடைக்கால கடன் வாங்கியுள்ள ஆட்சியாளர்கள். அன்னியச் செலாவணி நெறிமுறைச் சட்டத்தை மேலும் தளர்த்தியுள்ளனர். இதன்படி இந்தியப் பெருமுதலாளிகளும் கிரிமினல் பேர்வழிகளும் தமது கருப்புப் பணத்தை வெளிநாடுகளில் பதுக்கிக் கொள்ள சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர ரூபாயின் மதிப்பைக் குறைக்கச் சொல்லி உலக வங்கி அதிகாரிகளே நேரில் வந்து பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். கடந்த ஜனவரியில், நிதியமைச்சர் அனைத்து பொருட்களின் விலையையும் ஒரு சுற்று உயர்த்தியுள்ளார். தற்போது அன்னிய ஏகபோக நிறுவனங்களின் பகற்கொள்ளைக்காக சுங்கத் தீர்வையைக் குறைத்துள்ளார். இத்தகைய சீர்திருத்தங்களால் பொருளாதாரத்தை முன்னேற்றிவிட முடியும் என்று ஆளும் கும்பல் காதில் பூ சுற்றுகிறது. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக மேற்கொள்ளப்படும் இத்தகைய உலக வங்கியின் திட்டங்களால் ஏற்பட்ட விளைவுகள் மிகக் கொடூரமானவை. நாட்டின் முதுகெலும்பான கோடானு கோடி விவசாயிகளையும் தொழிலாளர்களையும் இப்புதிய பொருளாதாரக் கொள்கை வேலையிலிருந்து விரட்டியடித்து, அவர்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளியுள்ளது. அதே சமயம் உலக வங்கியின் இரும்புப் பிடி மேலும் இறுகி நாடு மறுகாலனியாக்கப்பட்டு வருகிறது.

### தொழிலாளர்களை காவு கேட்கும் புதிய தொழிற் கொள்கை

உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் கட்டளைப்படி புதிய தொழிற்கொள்கை எனும் சுருக்குக் கயிறு கோடிக்கணக்கான தொழிலாளர்களின் கழுத்தில் மாட்டப்பட்டுள்ளது. பன்னாட்டு பகாசுர கம்பெனிகளின் பகற்கொள்ளைக்கு கதவை அகலத் திறப்பது. தரகு - அதிகார முதலாளிகளின் நலனுக்காக ஆலைகளை மறுசீரமைத்து நவீனப்படுத்துவது, அரசுத் துறை நிறுவனங்களை ஏகபோக தடுப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்து அவற்றைத் தனியாரிடம் தாரை வார்ப்பது; பொது விநியோகம், போக்குவரத்து, சாலைகளைக்கூட தனியார் முதலாளிகளிடம் ஒப்படைப்பது என்கிற கொள்கையை கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நரசிம்மராவ் அரசு செயல்படுத்தி வருகிறது.

> நடுத்தர மற்றும் மேட்டுக் குடியினரைக் கணக்கில் கொண்டே, பட்ஜெட்டும் பொருளாதாரத் திட்டங்களும் போடப்படுகின்றன. சுருக்கமாகச் சொன்னால், கோடிக்கணக்கான கூலி-ஏழை விவசாயிகள் இந்தியப் பொருளாதாரத்தில் 'தீண்டத்தகாதவர்கள்' ஆகிவிட்டார்கள்.

இதன் விளைவாக கடந்த ஆண்டு ஜூன் மாதம் முடிய 1042 தனியார் துறை நிறுவனங்களும், 98 அரசுத் துறை நிறுவனங்களும் நலிவடைந்து நட்டத்தில் இயங்குவதாக அரசு அறிவித்துள்ளது. இவை எப்போது வேண்டுமானாலும் மூடப்படலாம் என்கிற அபாயமே நிலவுகிறது. குறிப்பாக, துணி ஆலைகளில் மூன்றில் ஒரு பங்கு தொழிலாளர்கள் வேலையிலிருந்து விரட்டப்பட உள்ளனர். அரசுத் துறை மற்றும் தனியார் துறைகளில் ஏறத்தாழ 50 முதல் 80 லட்சம் தொழிலாளர்கள் அடுத்த மூன்றாண்டுகளில் இப்புதிய தொழிற் கொள்கையால் வேலை இழப்பார்கள்.

தொழிலாளர்களை வேலையிலிருந்து விசிறியடிக்கும் இக் கொள்கைக்கு வரும் எதிர்ப்பைத் தணிப்பதற்காக தேசிய புனர்வாழ்வு நிதி (NRF) எனும் வடிகால் அமைப்பையும் உலக வங்கி உருவாக்கியுள்ளது. இதன்படி பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்போவதாகவும் அது பசப்புகிறது. ஆனால் பத்தாண்டுகளுக்கு முன்பு பொலிவியாவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு தோல்வி அடைந்ததோடு, பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் எந்த நிவாரணமுமின்றி வேலையிலிருந்து விரப்பட்டப்பட்டனர். உண்மையில், தொழிலாளர்கள் - தொழிற் சங்கங்களின் எதிர்ப்பை மட்டுப்படுத்தி அவர்களை விலைபேசுவதற்காகத்தான் இந்த நிதி உருவாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டுவது மட்டுமல்ல; தற்போதுள்ள தொழிற்சங்க உரிமைகளைப் பறித்துக் கொள்வது; தொழிற்தகராறு சட்டங்களை முதலாளிகளின் நலனுக்கேற்ப மாற்றியமைப்பது; ஆலை மூடல், ஆட்குறைப்பு, ஊதிய முடக்கம், வேலைப்பளு அதிகரிப்பு முதலானவற்றை தொழிலாளர்கள் மீது திணிப்பது என்கிற நோக்கத்தோடுதான் புதிய தொழிற் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக, பன்னாட்டுச் செருப்புத் தொழில் நிறுவனமான பாட்டா, இந்தியாவிலுள்ள தனது ஆலைத் தொழிலாளிக்கு நாளொன்று 80 ரூபாய் தருகிறது; தற்போதைய புதிய தொழிற் கொள்கையின் விளைவாக இத் தொழிலாளர்கள் பலர் வேலையிலிருந்து விரட்டப்பட்டுள்ளனர். மேலும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு லே-ஆப் கொடுக்கப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com




அதேசமயம் பாட்டா நிறுவனம், சிறுவீத செருப்பு பட்டறைகளில் தனது செருப்புகளை ஒப்பந்த முறையில் தயாரித்து அதில் பாட்டா முத்திரையைக் குத்தி விற்பனை செய்கிறது. இத்தகைய சிறு பட்டறைகளில் வேலை செய்யும் தொழிலாளிக்கு 25 ரூபாய்தான் ஒரு நாளைய கூலியாகத் தரப்படுகிறது. இப்படி பாட்டா நிறுவனம் புதிய தொழிற் கொள்கையால் மூன்று மடங்குக்கும் மேலாக லாபமடைகிறது. இதேபோல பிவாண்டியிலுள்ள விசைத்தறிகளில் மில் துணிகளை உற்பத்தி செய்து அதில் தனது 'லேபிளை' ஒட்டி ''விமல்'' துணி நிறுவனம் கொள்ளை லாபமடித்து வருகிறது.

இப்படி, சணல், என்ஜினியரிங், மோட்டார் வாகனங்கள், ஆடை தயாரிப்பு முதலான பல்வேறு தொழில் நிறுவனங்கள். தொழிலாளர்களை விரட்டுவதிலேயே குறியாக உள்ளன. இதே வேகத்தில் போனால் ஆண்டுக்கு 70 லட்சம் பேர் வேலையிழப்பார்கள்; கி.பி. 2000-வது ஆண்டில் நகர்ப்புற வேலையற்றவர்களின் எண்ணிக்கை 10 கோடிப் பேராகிவிடும் என்று புள்ளி விபரங்கள் எச்சரிக்கின்றன.

**உலக வங்கியின் திட்டத்தால்**
**ஓட்டாண்டிகளான விவசாயிகள்**

இந்தியாவின் கிராமப்புறங்களில் வாழும் 40 கோடிக்கும் மேற்பட்டவர்கள் சிறிய, நடுத்தர, கூலி-ஏழை விவசாயிகளாவர். பாசன வசதியுள்ள பகுதிகளில் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மட்டுமே இவர்களுக்கு வேலை கிடைக்கிறது. மழையை நம்பியுள்ள வறண்ட பகுதிகளில் ஆண்டுக்கு 100 நாட்களுக்கு மட்டுமே வேலை கிடைக்கிறது.

இப்போது ஐ.எம்.எப்.பின் உத்திரவுப்படி உரவிலையேற்றம், விவசாய இடுபொருட்களின் விலை உயர்வு, பெட்ரோல் - டீசல் விலையேற்றம், விவசாய பம்பு செட்டுகளுக்கான மின்கட்டண உயர்வு, உணவு தானியக் கொள்முதல் விலைக் குறைப்பு, உரத்திற்கான மானியம் ரத்து முதலான நடவடிக்கைகளால் சிறிய - நடுத்தர விவசாயிகள் ஓட்டாண்டி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கூலி-ஏழை விவசாயிகளோ வேலை கிடைக்காமல் அரைப்பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் இவர்களை மன்மோகன் சிங்கின் புதிய பொருளாதாரக் கொள்கை கவனத்தில் எடுத்துக் கொள்வதேயில்லை. ஐ.எம்.எப்.பின் உத்திரவுப்படி, வாங்கும் சக்தி கொண்ட நடுத்தர மற்றும் மேட்டுக் குடியினரைக் கணக்கில் கொண்டே, பட்ஜெட்டும் பொருளாதாரத் திட்டங்களும் போடப்படுகின்றன. சுருக்கமாகச் சொன்னால், கோடிக்கணக்கான கூலி-ஏழை விவசாயிகள் இந்தியப் பொருளாதரத்தில் 'தீண்டத்தகாதவர்கள்' ஆகிவிட்டார்கள்.

> உண்மையில், உலக வங்கிதான் இந்தியாவில் இணையான அரசாங்கத்தை நடத்துகிறது. நாடாளுமன்றத்தில் விவாதிக்காமலேயே, மந்திரிகளுக்கேகூட தெரியாமல் ஐ.எம்.எப். விதிக்கும் நிபந்தனைகள், அடுத்த நிமிடமே அரசின் கொள்கை முடிவுகளாக அறிவிக்கப்படுகின்றன.

அமைப்பு ரீதியில் திரட்டப்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட ஆலைத் துறையில், அவர்களை வேலையிலிருந்து விரட்டியடிக்க வெளியேற்றும் கொள்கையும், தேசிய புனர்வாழ்வு நிதியும் ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், விவசாயிகளைப் பொருத்தவரை இப்படியொரு கொள்கையோ, நிதியோ அவசியமில்லாமல், ஐ.எம்.எப்.பின் நிர்பந்தங்களே அவர்களை வேலையிலிருந்து விரட்ட ஆரம்பித்துவிட்டது. கிராமப்புற சிறுதொழில் நிலையங்களில் கிடைக்கும் அரைகுறையான வேலையைக்கூட, மிக அற்பக் கூலிக்குச் செய்யுமளவுக்கு அங்கே போட்டி நிலவுகிறது. ஆண்டுக்கு அதிகபட்சம் 60 நாட்களுக்கு மட்டுமே கிடைக்கும் இந்த வேலைக்காவது சென்றால்தான் அரைவயிற்றுக் கஞ்சியாவது கிடைக்கும். ஐ.எம்.எப்.பின் விசுவாச நிதிமந்திரியான மன்மோகன் சிங்குக்கு இத்தகைய நிலைமைகள் வேதனையளிக்கவில்லை. பொருளாதாரச் சீர்திருத்தங்கள் படிப்படியாக முன்னேறி வருவதாக அவர் பெருமிதம் கொள்கிறார். ''கிராமப்புற சிறுதொழில்களைப் பற்றி பிரச்சினையில்லை; ஏனெனில் அங்கே சம்பளம் குறைந்து கொண்டே வருகிறது'' என்று மகிழ்ச்சியடைகிறார் அவர்.

**பட்டினியில் விவசாயிகள்**
**ஏற்றுமதியாகிறது அரிசி**

உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் உத்திரவுப்படி பொருளாதார சீர்திருத்தங்கள் செய்யப்பட்ட தென் அமெரிக்க நாடுகள் ஏற்கனவே திவாலாகிவிட்டன. ஆனால், அவற்றைவிட ஏழை நாடான இந்தியாவில் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகள் நாட்டை திவாலாக்குவது மட்டுமல்ல; கோடானுகோடி உழைக்கும் மக்களை பஞ்சத்துக்கும் பட்டினிச் சாவுக்கும் தள்ளிவிட்டுள்ளது.

இந்தியாவில் கிராமப்புற மக்களின் ஒரு நாளைய சராசரி வருமானம் ரூ.15-க்கும் கீழாக உள்ளது என்று முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களே ஒப்புக் கொள்கின்றனர். ஆனால், அதே சமயம் ஏகாதிபத்திய நாடுகளில் நிலவும் அளவுக்கு நுகர் பொருட்களின் விலை உயர்ந்து கொண்டே போகிறது. 1991 ஜூலை மாதத்திலிருந்து கொண்டு வரப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக அரிசியும் கோதுமையும் 50%-க்கு மேல் விலையேறி விட்டது. இந்நிலையில், வேலையின்மையும் சேர்ந்து கொண்டு விட்டால் கூலி-ஏழை விவசாயிகள் என்ன செய்ய முடியும்? அவர்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டு கொத்துக் கொத்தாக மடிந்து வருகிறார்கள்.

1940-களில் வங்கத்தைப் பிடித்தாட்டிய கொடிய பஞ்சத்தைப் போன்றதொரு நிலைமை நாட்டைச் சூழ்ந்துள்ளது என்று முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களே எச்சரித்தபோதிலும், உலக வங்கியின் பாதந்தாங்கும் இந்திய ஆட்சியாளர்கள் அதற்கு கொஞ்சமும் செவி சாய்க்கவே இல்லை. மாறாக, மக்களின் வாங்கும் சக்தி குறைந்து போயுள்ளதைச் சாதகமாக்கிக் கொண்டு, உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்து புதிய சாதனை படைத்துள்ளதாகப் பெருமிதம் கொள்கிறார்கள். நாட்டு மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிட்டு, உணவும் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையால் யார் ஆதாயம் அடைந்தார்கள் என்பதை டாட்டா ஏற்றுமதி நிறுவனத்தின் உயர் அதிகாரியின் வாக்குமூலமே தெளிவுபடுத்தும். ''அரிசி ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கமும், ரூபாயின் மதிப்புக் குறைப்பும் எங்களுக்கு மிகவும் சாதகமாக உள்ளது. உலகச்


படிப்பகம்

www.padippakam.com

சந்தையில் அரிசி வியாபாரத்தில் நாங்கள் 60%-ஐ எட்டிவிட்டோம்'' என்கிறார் அவர்.

**வறியர்களை ஒழிக்கும் திட்டம்**

விவசாயத்துக்கு அடுத்தபடியாக, பெருமளவிலான கிராமப்புற மக்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஏறத்தாழ 17 கோடி மக்களுக்கு 3.5 கோடி கைத்தறிகள் வாழ்வளிக்கின்றன. உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் கட்டளைகளால் விவசாயிகளைத் தொடர்ந்து இன்று கைத்தறி நெசவாளர்களும் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஐ.எம்.எப்.பின் கட்டளைகள் அமுல்படுத்தப்பட்ட ஆறு மாதங்களுக்குள்ளாகவே கைத்தறி நெசவாளர்களின் உண்மை ஊதியம் 60% குறைந்தது. நூலிழை ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதாலும், ரூபாயின் மதிப்பு குறைந்ததாலும் உள்நாட்டு நூலிழை விலை கிடுகிடுவென உயர்ந்தது. அதன் விளைவாக கைத்தறி துறையே நசிந்து போனது. கூடவே விலைவாசி உயர்வும் சேர்ந்து தாக்கத் தொடங்கியதும், ஆந்திராவின் குண்டூர் நெசவாளர்கள் பலர் கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்டனர். மற்றவர்கள் பட்டினியால் மாண்டனர். 1991-ம் ஆண்டு செப்டம்பரிலிருந்து நவம்பர் முடிய ஆந்திராவின் இரு மாவட்டங்களில் மட்டும் 73 பேர் பட்டினியால் மாண்டு போயுள்ளனர். காங்கிரசுக் கயவாளிகளின் வறுமை ஒழிப்புத் திட்டம், உலக வங்கியின் உத்திரவால் வறியவர்களை ஒழித்துக் கட்டும் திட்டமாக மாறியுள்ளதைத்தான் இது நிரூபிக்கிறது.

**இந்திய அரசை இயக்குவது உலக வங்கியின் பாதந்தாங்கிகள்**

எங்கோ தொலை தூரத்திலிருந்து கொண்டு உலக வங்கியும் ஐ.எம்.எப்.பும் இந்தியாவை நிர்பந்திப்பதாகக் கருதினால் அது அவரது அறியாமையேயாகும். பிறப்பால் இந்தியனாக இருந்தாலும் ஏகாதிபத்தியங்களின், உலக வங்கியின் விசுவாச எடுபிடிகள்தான் இந்திய நிதியமைச்சகத்திலும் திட்டக் கமிஷனிலும் விரவியுள்ளனர். உலக வங்கியின் கைக்கூலிகளான இப்பொருளாதாரவாதிகளின் ஆலோசனைப்படிதான் நிதிக் கொள்கைகளும் திட்டங்களும் தீட்டப்படுகின்றன. உலக வங்கியின் உத்திரவுப்படிதான், இத்தகைய எடுபிடிகள் இந்திய அரசின் முக்கிய பொறுப்புகளில் அமர்த்தப்படுகிறார்கள்.

1980-ல் பாசிச இந்திரா பதவிக்கு வந்தபோது, உலக வங்கி மற்றும் ஐ.எம்.எப். நிறுவனத்தில் பணியாற்றிய முன்னாள் அதிகாரிகளே முக்கியமான நிதித்துறை அமைச்சகப் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். பிரதமருக்கு முன்பாக இத்தகைய எடுபிடி கும்பலுக்கே உலக வங்கியின் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. "இந்தியா: வர்த்தக சீர்திருத்தங்களுக்கான திட்டம்'' எனும் உலக வங்கியின் அறிக்கையின்படியே பொருளாதார மாற்றங்கள் அப்போது மேற்கொள்ளப்பட்டன. இன்று நேரடியாக உலக வங்கி அதிகாரிகளின் மேற்பார்வையில் பட்ஜெட்டும், பொருளாதாரத் திட்டங்களும் தயாரிக்கப்படும் அளவுக்கு நிலைமை முன்னேறி விட்டது.



பன்னாட்டு கம்பெனிக்கு முன் அமெரிக்க கொடியை கொளுத்தும் கர்நாடக விவசாயிகள்

உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் கட்டளைகள் ஒழுங்காக நிறைவேற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க டெல்லியிலேயே ரகசிய அலுவலகம் இயங்கி வருகிறது. "மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இந்தியப் பொருளாதார நிலைமையைப் பற்றி ஆழமாக ஆய்வு செய்யப்படும். பொய்யான தகவல் கொடுத்து எந்த அரசாங்கமும் எங்களை ஏமாற்றிவிட முடியாது'' என்கிறார், டெல்லியிலுள்ள உலக வங்கியின் தலைமை அதிகாரி.

உண்மையில், உலக வங்கிதான் இந்தியாவில் இணையான அரசாங்கத்தை நடத்துகிறது. நாடாளுமன்றத்தில் விவாதிக்காமலேயே, மந்திரிகளுக்கேகூட தெரியாமல் ஐ.எம்.எப். விதிக்கும் நிபந்தனைகள், அடுத்த நிமிடமே அரசின் கொள்கை முடிவுகளாக அறிவிக்கப்படுகின்றன. இப்படித்தான் மன்மோகன் சிங்கின் 1992-ம் ஆண்டுக்கான பட்ஜெட் உலக வங்கியின் ஆலோசனைப்படியே தயாரிக்கப்பட்டது. தற்போது 1993-ம் ஆண்டுக்கான பட்ஜெட் பற்றி இப்போது உலக வங்கி அதிகாரிகள் நிதியமைச்சகத்துடன் விவாதித்து உத்திரவுகள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். உலக வங்கியும் ஐ.எம்.எப்.பும் இந்திய அரசாங்கத்தை திரைமறைவிலிருந்து கொண்டு ஆட்டுவிக்கும் போது, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா என்று முதலாளித்துவவாதிகள் வெட்கமின்றி பசப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

● மணி

படிப்பகம்

www.padippakam.com

# திவாலானது காங்கிரசு

அயோத்தியில் பாபர் மசூதி இடிப்பு - அதன் பிறகு நாடெங்கும் நடந்த மதக் கலவரங்களின் போது தனது கையாலாகாத்தனத்தை நிரூபித்து, மக்கள் ஆதரவை முற்றாக இழந்துவிட்ட காங்கிரசுக் கட்சி எப்படியாவது தொடர்ந்து பதவியில் நீடிக்க நாயாய் அலைகிறது. இதற்காக பிரதமர் நரசிம்மராவ் கடந்த ஜனவரி 18-ம் தேதியன்று தனது அமைச்சரவையில் மாற்றங்களைக் கொண்டு வந்து தனது அரசுக்குப் புதுத் தோற்றம் அளிக்க முயற்சி செய்தார். ஆனால் அது கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக, காங்கிரசுக் கட்சிக்குள் நிலவும் கோஷ்டித் தகராறுகளையும் பதவிக்கான நாய்ச் சண்டையையும் மேலும் தீவிரப்படுத்தி விட்டது.

காங்கிரசிலுள்ள எல்லா அதிருப்தி கோஷ்டிகளையும் சரிகட்ட வேண்டும்; அதேசமயம் கோஷ்டிகளுக்கிடையே மோதலை ஏற்படுத்தி குளிர்காய்ந்து கொண்டு தன்னை எதிர்க்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; கட்சிக்குள் தனது கோஷ்டியின் கை மேலோங்கியிருக்குமாறு செய்து எப்படியாவது பதவியில் நீடிக்க வேண்டும்; இந்து வெறியர்களின் சவாலை எதிர்கொண்டு முறியடிக்கும் வகையில் காங்கிரசுக் கட்சி ஐக்கியப்பட்டு புது வேகத்துடன் செயல்படுவதாக ஒரு மாயத் தோற்றத்தை மக்களிடம் நிலைநாட்ட வேண்டும் — இந்த நரித்தனமான உத்திகளுடன்தான் நரசிம்மராவ் இப்போதைய அமைச்சரவை மாற்றங்களைச் செய்துள்ளார்.

### புதிய 'மொந்தை பழைய கள்ளு

நரசிம்மராவுக்குச் சவாலாக வளர்ந்துவிட்ட அர்ஜுன்சிங்கை மட்டம் தட்ட வேண்டும் என்பதற்காக அவரது கோஷ்டியைச் சேர்ந்த தல்பீர் சிங் அமைச்சரவையிலிருந்து கழித்துக் கட்டப்பட்டுள்ளார். அர்ஜுன்சிங், தாக்கூர் சாதிக்காரர் என்பதால் அதே சாதிக்காரரான தினேஷ்சிங் அவருக்குப் போட்டியாக அமைச்சரவையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளார். பிரதமருக்கு எதிரான மற்றொரு கோஷ்டியான சரத்பவார் கோஷ்டியும் அர்ஜுன்சிங் கோஷ்டியும் ஒன்று சேர்ந்து கலகம் செய்வதைத் தடுக்கும் நோக்கத்தோடு, சரத்பவார் கோஷ்டிக்கு சலுகை காட்டப்பட்டுள்ளது. அவரது கோஷ்டியைச் சேர்ந்த பழம் பெருச்சாளி என்.கே.பி. சால்வேயும், முகுல்.வாஸ்னிக்கும் புதிய அமைச்சர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். அதே சமயம் கட்சியில் சரத்பவார் கோஷ்டியின் செல்வாக்கைக் குறைக்க, ஓரங்கட்டப்பட்ட ஊழல் பெருச்சாளி அந்துலேவை கட்சியின் முக்கிய பொறுப்பில் ராவ் நியமித்துள்ளார். காங்கிரசு கோஷ்டிகளின் பலத்திற்கேற்ப கிருஷ்ணகுமார், பொட்டேதார், கிரிஜா வியாஸ் முதலான பொம்மை மந்திரிகள் கழித்துக் கட்டப்பட்டுள்ளனர். அஜித் குமார் பாஞ்சா முதலானோர் முக்கியத்துவம் இல்லாத துறைக்கு விரட்டப்பட்டுள்ளனர்.

அதே சமயம் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் சுமையாகிவிட்ட பழம் பெருச்சாளிகளை பிரதமரால் நீக்கவும் முடியவில்லை. வங்கி - பங்குச் சந்தை ஊழலில் சிக்கி அம்பலப்பட்டுப் போயுள்ள சங்கரானந்த், ரமேஷ்வர் தாக்கூர் ஆகியோர் தற்போதைய அமைச்சரவையிலும் தொடர்ந்து நீடிக்கின்றனர். பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாடெங்கும் இந்து வெறியர்கள் கோரத் தாண்டவமாடிய போதும், அண்மையில் பம்பாய் நகரமே பற்றி எரிந்த போதும் செயலற்று வேடிக்கை பார்த்த உள்துறை அமைச்சர் சவான் மீது பிரதமர் கைவைக்க முடியவில்லை. ரயில்வே என்ஜின் பேரத்தில் கோடிகோடியாய்க் கொள்ளையடித்து அம்பலப்பட்டுப் போயுள்ள ஜாபர்ஷெரீபை விரட்டவும் இயலவில்லை.

அதைவிட, ராஜீவின் நெருங்கிய கூட்டாளி என்பதைத் தவிர வேறெந்தத் தகுதியுமில்லாத சதீஷ்சர்மாவுக்கு மந்திரி பதவி அளிக்கப்பட்டுள்ளது. ராஜீவ் குடும்ப விசுவாசிகளும், டூன் பள்ளியில் படித்த மேட்டுக்குடி கும்பலும் அடங்கிய கோஷ்டியினர் கலகம் செய்யாமல் இருக்கவே இந்த ஏற்பாடு. இதற்காக பேரம் நடத்துவதற்காக சோனியாவைப் பிரதமர் சந்தித்தது அதைவிட வெட்கக் கேடானது.

முதலாளித்துவ விமர்சகர்களால் குறிப்பிடப்படும், 'நிர்வாகத் திறனோ', 'சாதுரியமோ' அறவே இல்லாத வடிகட்டிய களிமண்களும், முன்னாள் இந்நாள் ஊழல் பெருச்சாளிகளும் அடங்கிய ஒரு கும்பலைத்தான் புதிய அமைச்சரவையாக ராவ் நிறுவியுள்ளார். இத்தகைய 30-40 கழிசடைப் பேர்வழிகளை விட்டால் வேறு நாதியில்லை என்கிற அளவுக்கு காங்கிரசுக் கட்சி குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறது. ஆனாலும், இத்தகைய சரிக்கட்டல்கள் பேரங்களுக்குப் பின்னரும் கோஷ்டிப் பூசல்கள் ஓயவில்லை.

### தீரவில்லை; தீவிரமாகிவிட்டது

மந்திரி பதவி கிடைக்காதவர்களும், பதவி பறிக்கப்பட்டவர்களும், ஓரங்கட்டப்பட்டவர்களும் ராவுக்கு எதிராக கலகக் கொடி தூக்கி அச்சுறுத்துகின்றனர். மந்திரிசபையை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளது; அப்போது உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன் என்றும், பதவி நீக்கப்பட்டவர்களுக்கு கவர்னர் பதவியும் தூதர் பதவியும் காத்திருக்கிறது என்றும் பிரதமர் ஆசை காட்டியும்கூட அதிருப்தியாளர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

கே.என்.சிங், பொட்டேதார், சிவசங்கர், ஷீலாதீட்சித் முதலான முன்னாள் அமைச்சர்கள் வெளிப்படையாகவே நரசிம்மராவை எதிர்க்கின்றனர். உ.பி.யில் அதிருப்தி கோஷ்டிகள் கலகம் செய்வதைத் தடுக்க, என்.டி.திவாரியை காரியக் கமிட்டி உறுப்பினராக பிரதமர் வளைத்துப் போட்டுள்ள போதிலும், அமைச்சரவையில் உ.பி. மாநிலத்துக்கு கூடுதல் பிரதிநிதித்துவம் அளித்துள்ள போதிலும் கோஷ்டிச் சண்டைகள் ஓயவில்லை. தனக்கு மந்திரி பதவி கிடைக்காத ஆத்திரத்தில், "ஒருவருக்கு ஒரு பதவிதான் தரப்பட வேண்டும் என்பது காங்கிரசு மாநாட்டின் முடிவாகும்; அதற்கு மாறாக ஒரே நேரத்தில் கட்சிப் பதவியும் மந்திரி பதவியும் நிர்வகிக்க அனுமதிக்கக் கூடாது" என்று நரசிம்மராவுக்கு எதிராக உ.பி. கோஷ்டிகளைச் சேர்த்துக் கொண்டு கலகம் செய்கிறார் திவாரி. அர்ஜுன் சிங் கோஷ்டியோ, ராவ் அரசு மதச்சார்பின்மையைக் கைவிட்டுவிட்டு, மென்மையான இந்துத்துவத்தைப் பின்பற்றுவதாக பகிரங்கமாகக் குற்றம் சாட்டி, நரசிம்ம

**சில நரித்தனமான உத்திகளுடன்தான் நரசிம்மராவ் இப்போதைய அமைச்சரவை மாற்றங்களை செய்துள்ளார்.**



படிப்பகம்

www.padippakam.com

ராவை மிரட்டி காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறது. காங்கிரசுக் கட்சிக்குள் நிலவும் அதிருப்தியாளர்களின் கலகம், நிர்பந்தம் காரணமாக மார்ச் மாதத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்ட ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைக்கு ராவ் தள்ளப்பட்டுள்ளார். ஆனாலும், பட்ஜெட்டுக்கு முன்னரே கூட்டப்பட வேண்டும்; இல்லையேல் ராவ் கோஷ்டியின் கை பலமாகிவிடும் என்று புதிய நெருக்கடிகளை அதிருப்தியாளர்கள் கொடுத்து வருகின்றனர்.

### திவாலான காங்கிரசு கையாலாகாத அரசு

காங்கிரசு கட்சிக்குள் நடக்கும் கோஷ்டித் தகராறுகளை மட்டுமல்ல, நாட்டை அச்சுறுத்தும் இந்து வெறியர்களின் சவால்களை முறியடிக்கக் கூட அது தகுதி இழந்து விட்டது. பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு, வகுப்புவாத சக்திகளை முறியடிப்பதே எங்களது உடனடிக் கடமை என்று சவால் அடித்த காங்கிரசு, இந்து வெறியர்களுக்கு எதிராக ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை. ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிஷத் மீதான தடை கூட பெயரளவில்தான் உள்ளது என்பதை முதலாளித்துவ பத்திரிகைகளே அம்பலப்படுத்துகின்றன. தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்குப் பதிலாக புதிய அமைப்புகளைத் தொடங்கி இந்து வெறியர்கள் பதுங்கிக் கொண்ட போதும், தமது துணை அமைப்புகளின் மூலம் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திய போதும் காங்கிரசு அரசு கைகட்டி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

கடந்த பிப்ரவரி 6-ம் தேதியன்று, தடை செய்யப்பட்ட விசுவ இந்து பரிஷத்தின் கூட்டுப் பொதுச் செயலாளரான கிரிராஜ் கிஷோர், டெல்லியிலுள்ள தலைமை நிலையத்தில் பதுங்கியிருப்பதாக அறிந்து உ.பி.மாநில போலீசார் அவரைக் கைது செய்யச் சென்றனர். ஆனால், தலைமை அலுவலகத்தில் காவலுக்கு நின்ற டெல்லி போலீசாரும், எல்லை பாதுகாப்புப் படையினரும் கைது உத்திரவு முறைப்படி இல்லை என்று உ.பி. போலீசாரை திருப்பி அனுப்பியுள்ளனர்.

அண்மையில் பம்பாயில் நடந்த மத வெறி - இன வெறிக் கலவரம் - படுகொலைகளை இந்துவெறி சிவசேனா தலைமையேற்று நடத்தியதை நாடே நன்கறிந்த போதும், இன்னமும் சிவசேனா மீது கைவைக்க காங்கிரசு அஞ்சுகிறது. மசூதி இடிப்புக்குப் பிறகு, ஒரு மாதத்துக்கும் மேலாக காங்கிரசு ஆளும் மாநிலங்களான மராட்டியத்திலும் குஜராத்திலும் ஏன், தலைநகர் டெல்லியிலும் தொடர்ச்சியாக கலவரங்கள் நடந்தபோதும், அம்மாநில அரசுகளைக் கலைப்பதற்குக் கூட மத்திய அரசு தயாராக இல்லை. தமது ஓட்டு வங்கியைத் தக்க வைத்துக் கொள்ள, போலிக் கம்யூனிஸ்டுகளும், தேசிய முன்னணிக் கட்சிகளும் இந்து வெறியர்களுக்கு எதிராக நடத்தும் மதநல்லிணக்கப் பேரணி முதலான சாதாரண இயக்கங்களை நடத்துவதற்குக் கூட காங்கிரசுக் கட்சி முன் வரவில்லை. அயோத்தி மசூதி இடிப்பு பற்றிய அரசின் வெள்ளை அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவையின் ஒப்புதல்கூட பெற முடியாமல் அது கோஷ்டிச் சண்டையில் புதைந்து கிடக்கிறது. இந்த வெள்ளை அறிக்கையும் கூட இந்து வெறியர்களுக்குச் சாதகமாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே முஸ்லீம்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோரின் ஓட்டு வங்கியை இழந்துவிட்ட காங்கிரசு, எஞ்சியிருக்கும் இந்து ஓட்டுக்களைக் கைப்பற்றி இடைத்தேர்தல்களில் வெற்றி பெறலாம் என்று கணக்குப் போடுகிறது. எனவேதான் இந்து வெறியர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதோடு, ''நாங்கள்தான் உண்மையான இந்துத்துவத்தைப் பின்பற்றுகிறோம் என்று வெட்கமின்றி பெருமைப்பட்டுக் கொள்கிறது''.

சுருக்கமாகச் சொன்னால், காங்கிரசுக் கட்சியும் ஆட்சியும் எல்லாத் தகுதிகளையும் இழந்து திவாலாகி, பட்டுப்போன நச்சு மரமாகிவிட்டது. அதனால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாமல் போனதோடு, ஒன்றுபட்டு இந்து வெறியர்களின் சவாலை எதிர்கொள்ளும் என்ற அற்ப நம்பிக்கையையும் இழக்கச் செய்து, கிழிந்த ஓட்டுத் துணியுடன் அரை அம்மணமாக நிற்கிறது. எப்படியாவது பதவியில் நீடிப்பது என்கிற பிழைப்புவாதக் கும்பலாகிவிட்ட காங்கிரசு கட்சி ஐக்கியப்பட்டு நிற்கவோ, ஆட்சியில் நீடிக்கவோ அடிப்படையோ அருகதையோ இல்லாமல் போய்விட்டது. அதன் கையாலாகாத்தனத்தால் இந்து வெறியர்கள் எதிர்ப்பே இல்லாமல் ஆட்சியைப் பிடிக்கும் அபாயமே நிலவுகிறது. போலிக் கம்யூனிஸ்டுகளோ, காங்கிரசில் இன்னமும் முற்போக்கு சக்திகள் இருப்பதாகவும், அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து வகுப்புவாதத்தை முறியடிக்க வேண்டும் என்றும் கழுதை விட்டையில் முன் விட்டை எது, பின் விட்டை எது என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

● குமார்

## சந்தர்ப்பவாத கூட்டணி அரசு: காங்கிரசின் கனவு நொறுங்கியது

எப்படியாவது பதவியில் ஒட்டிக் கொள்ளும் பேராசையில், கூட்டணி அரசு அமைக்கும் ஆலோசனையை பிரதமர் முன்வைத்துள்ளார். ஜனதா தளத்திலிருந்து கட்சிமாறிய அஜித்சிங் தலைமையிலான 2 எம்.பி.க்கள் மற்றும் அ.தி.மு.க.வின் ஆதரவு இருந்தால்தான் பதவியில் நீடிக்க முடியும் என்கிற ஒட்டாண்டி நிலைக்கு காங்கிரசுக் கட்சி தள்ளப்பட்டிருப்பதே இதற்குக் காரணம். இச்சந்தர்ப்பவாத கூட்டணிக்காக சட்ட விரோதமான செயல்களிலும் ராவ் கும்பல் துணிந்து இறங்கிவிட்டது.

இதன்படி, அஜித்சிங் கோஷ்டியை ஜனதா தளம் (ஏ) என்ற பெயரில் தனி 'தேசிய'க் கட்சியாக தேர்தல் கமிஷன் அங்கீகரித்துள்ளது. ஒன்றுபட்ட ஜனதா தளத்தின் தேர்தல் சின்னம் முடக்கப்பட்டு, அஜித்சிங் கோஷ்டிக்கும் வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தளக் கட்சிக்கும் புதிதாக தனித்தனி தேர்தல் சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கட்சி பிளவுபட்டால், பெரும்பான்மையோர் அடங்கிய குழுவுக்கே தாய்க் கட்சியின் தேர்தல் சின்னம் ஒதுக்கப்பட வேண்டும் என்கிற விதிமுறைகளை மீறி ராவ் கும்பலுக்கு விசுவாசமாக தேர்தல் கமிஷன் செயல்பட்டுள்ளது. புதிய சின்னத்தை மக்களிடம் பிரபலப்படுத்தி ஓட்டுக்களைப் பெற வி.பி. சிங் கட்சி பெரும் இடர்பாடுகளை சந்திக்க வேண்டியிருக்கும். வி.பி.சிங் கட்சி செல்வாக்கு பெறுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் திட்டமிட்டே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அஜித்சிங் கோஷ்டியை ஒரு கட்சியாக அங்கீகரிப்பதே சட்ட விரோதமானது. ஏனெனில் தேர்தல் கமிஷனின் விதிமுறைகளின்படி, தவணை முறையில் கட்சியிலிருந்து வெளியேறியவர்களும், வெளியேற்றப் பட்டவர்களும் ஒன்று சேர்ந்து ஒரு கட்சியாவதை அங்கீகரிக்க முடியாது. கடந்த நாடாளுமன்ற கூட்டத் தொடரிலும் இந்த அடிப்படையில்தான் இடைக்காலத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால், இவற்றையெல்லாம் துச்சமாக மதித்து, விதிமுறைகளுக்கே எதிராக அஜித்சிங் கோஷ்டியை ராவ் கும்பல் தனி 'தேசிய' கட்சியாக அங்கீகரித்துள்ளது.

இது தவிர, அஜித் சிங் கட்சி கூண்டோடு காங்கிரசில் சேர்ந்தால், அக்கட்சியினருக்கு மந்திரி பதவி அளிக்கப்படும் என்றும், இதேபோல காங்கிரசு மந்திரியான தினேஷ் சிங்கை தமிழகத்திலிருந்து எம்.பி.யாக தேர்ந்தெடுக்க அ.தி.மு.க. ஒத்துழைத்தால் அக்கட்சியினருக்கு மத்திய அரசில் மந்திரி பதவி தரப்படும் என்றும் சந்தர்ப்பவாத கூட்டணி அரசுக்கான பேரங்கள் நடந்து வருகின்றன. ஆனால், ஜனதா தளத்தை விட்டு விலகுவதாக கையெழுத்துப் போட்ட இரு எம்.பி.க்களின் கையெழுத்து 'போர்ஜரி'யானது என்று இப்போது அம்பலமாகி, காங்கிரசின் கனவு சரியத் தொடங்கிவிட்டது. தமிழக காங்கிரசும் அ.தி.மு.க.வும் கிட்டத்தட்ட கூட்டு முறிந்துவிட்ட நிலையில் நடத்தும் லாவணியால், ராவின் கூட்டணி அரசுத் திட்டமும் நொறுங்கிப் போய்விட்டது.

★★

படிப்பகம்

www.padippakam.com

# ரஷ்யாவில் மீண்டும் கம்யூனிச எழுச்சி

"கம்யூனிசம் செத்துவிட்டது; அதன் வேரைக் கிள்ளியெறிந்து வெந்நீரையும் ஊற்றிவிட்டோம். இனி கம்யூனிச சித்தாந்தத்தை அருங்காட்சியகத்தில்தான் தேட வேண்டியிருக்கும்" என்று எக்காளமிட்டனர் ஏகாதிபத்தியவாதிகள். இங்குள்ள பிற்போக்குவாதிகளும் அதையே எதிரொலித்தனர்.

"கம்யூனிசம் என்றால் சர்வாதிகாரம்; அது ஒரு மாயப் பிசாசு. அதன் வாடைகூட எங்கள் நாட்டில் இருக்கக் கூடாது" என்று ரஷியாவின் முதலாளித்துவ ரௌடிகள், மார்க்சிய ஆசான்களின் சிலைகளை உடைத்தும் செங்கொடிகளை எரித்தும் வெறியோடு கூத்தாடினர். "எந்த நாட்டில் முதன் முதலாக கம்யூனிசம் நிறுவப்பட்டதோ, அந்த நாட்டு மக்களே கம்யூனிசத்தைத் தூக்கியெறிந்து விட்டார்கள்; ஒரு நூற்றாண்டுக்குள் கம்யூனிசம் காலாவதியாகி கல்லறைக்குள் முடங்கிவிட்டது" என்று ஏகாதிபத்திய எடுபிடிகள் பரிகசித்தார்கள்.

ஆனால், ஓராண்டுக்குள் இந்த முதலாளித்துவ முட்டாள்களின் நைலான் கனவுகள் பற்றி எரியத் தொடங்கி விட்டது. எந்த நாட்டில் கம்யூனிசத்துக்குக் கல்லறை கட்டியதாக துள்ளினார்களோ, அதே ரஷிய நாட்டில் மீண்டும் கோடிக்கால் பூதமென கம்யூனிசம் உயிர்த்தெழுந்து அவர்களை அச்சுறுத்தக் கிளம்பிவிட்டது.

அன்று நவம்பர் 7-ம் நாள், போல்ஷ்விக் சோசலிசப் புரட்சியின் 75-வது நிறைவு நாள். தலைநகர் மாஸ்கோவிலுள்ள கிரெம்ளின் சதுக்கத்தில் செங்கொடிகள் விண்ணில் உயர ஏறத்தாழ 2 லட்சம் பேர் திரண்டிருந்தனர். மகத்தான "நவம்பர் புரட்சி நீடூழி வாழ்க! சோசலிசம் நீடூழி வாழ்க!" என்ற முழக்கம் எங்கும் எதிரொலித்தது. இளங்குழந்தைகள் லெனினைப் பற்றிய பாடலை இசைத்துக் கொண்டிருந்தனர்.

கூட்டத்தினரை விலக்கிக் கொண்டு தட்டுத் தடுமாறி மேடையருகே ராணுவ உடையுடன் ஒரு முதியவர் வந்து நின்று கொண்டு உற்சாகமாக நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர், அனடோலி டெரசோவ்; முன்னாள் படைவீரர். பாசிசத்துக்கு எதிரான போரில் பங்கேற்று தனது கால்களை இழந்த இந்த் செஞ்சேனை படைவீரருக்கு வயது 68. கூட்டத்தில் உரையாற்றிய பேச்சாளர்கள் கம்யூனிசத்தின் சாதனைகளைப் பற்றி பெருமையுடன் முழங்கியபோது, அவர் தனது கரங்களை உயர்த்தி ஆர்ப்பரித்தார். அதன் பிறகு பாட்டாளி வர்க்க சர்வதேசிய கீதம் இசைக்கப்பட்ட போது அவரது நெஞ்சம் விம்மித் தணிந்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

மேலை நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் சிலர் அவரிடம் இன்றைய ஆட்சியைப் பற்றி கருத்துக் கேட்ட போது, "யேல்ட்சினுடைய ஜனநாயகத்தை அமெரிக்கா வேண்டுமானால் மெச்சிக் கொள்ளட்டும்; எங்களுக்கு இத்தகைய கேடுகெட்ட ஜனநாயகம் வேண்டாம்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்தான் வேண்டும்; தோழர் ஸ்டாலினுடைய கொள்கைகளை மூன்று மாதம் செயல்படுத்திப் பாருங்கள்; அப்புறம் நிலைமைகள் தலைகீழாக மாறிவிடும்" என்று நம்பிக்கையுடன் கூறினார் அவர். அதன் பிறகு, தோழர் ஸ்டாலின் தனக்கு விருதாக அளித்த வீரப் பதக்கங்களைக் காட்டி எல்லோரிடமும் பெருமையாக விளக்கிக் கொண்டிருந்தார்.

பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் இப்படித்தான் பேசுவார்கள் என்றெண்ணிய பத்திரிகையாளர்கள் புதிய தலைமுறையைச் சேர்ந்த லியோனித் குஸ்டலோவ் எனும் 18 வயதான இளைஞரிடம் பேட்டி கண்டனர். "தற்போதைய யேல்ட்சின் அரசு கிரிமினல் மயமானது; அது எங்கள் நாட்டை சீரழித்துவிட்டது; எமது மக்களை வறுமையில் தள்ளுகிறது; குற்றங்கள் பெருகி விட்டன. இன்றைய ஆட்சியாளர்களுக்கு மக்கள் நலனில் அக்கறை கிடை



லெனின் தலைமையிலான ருஷ்ய புரட்சியின் பயனை சித்தரிக்கும் படத்தை ஊர்வலத்தில் ஏந்திச் செல்பவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



பர் தினத்தன்று கம்யூனிச ஆதரவாளர்கள் நடத்திய ஊர்வலத்தின் ஒரு பகுதி. கீழே: 39-வது நினைவு தினத்தன்று சிறப்பு விருந்தினராக ஸ்டாலினின் பேரன் கலந்து ாலின் ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட ஊர்வலம்.



யாது; மக்கள் தலைவர்களான லெனின் - ஸ்டாலினைப் பற்றியும் தெரியாது. நாங்கள் ஒரு புரட்சிக்காக, அதற்காக ரத்தம் சிந்தவும் தயாராக உள்ளோம்'' என்றார் அவர்.

ஒரு கையில் செங்கொடி ஏந்திக் கொண்டு ஊர்வலத்தில் சென்ற ஒரு மூதாட்டியை அவரது பேரக் குழந்தைகள் மறு கையைப் பற்றிக் கொண்டு அழைத்துச் சென்றனர். தள்ளாத வயதிலும் நவம்பர் புரட்சி நாள் பேரணியில் பங்கேற்ற டுகோவா எனும் அம்மூதாட்டி பென்ஷன் வாங்கும் முன்னாள் அரசு ஊழியர். ''90% மக்கள் வறுமையில் வாடும் போது பத்து சதவீதத்தினரின் நலனுக்காக சீர்திருத்தங்களைச் செய்யும் ஆட்சி யாருக்கு வேண்டும்? இது பத்து சதவீத பணக்காரர்களின் ஆட்சி. முதலாளித்துவ ஆட்சியாளர்கள் பதவியைவிட்டு ஓடட்டும். கம்யூனிஸ்டுள் தலைமையில் எங்களை நாங்களே நிர்வகித்துக் கொள்ள முடியும்'' என்று இடித்துரைத்தார் அவர்.

**முதலாளித்துவ முட்டாள்களின் நைலான் கனவுகள் பற்றி எரியத் தொடங்கிவிட்டன. எந்த நாட்டில் கம்யூனிசத்துக்கு கல்லறை கட்டியதாக துள்ளினார்களோ, அதே ரஷியாவில் மீண்டும் கோடிக்கால் பூதமென கம்யூனிசம் உயிர்த்தெழுந்து அவர்களை அச்சுறுத்த கிளம்பிவிட்டது.**

டுகோவா, குஸ்டலோவ், டெரசோவ் — இவர்கள் முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அல்ல; பழைய சோவியத் ஆட்சியில் சலுகை பெற்றவர்களுமல்ல. ஆனாலும், அவர்கள் கம்யூனிச சித்தாந்தத்தை மதிக்கிறார்கள்; போல்ஷ்விக் புரட்சியை நேசிக்கிறார்கள்.

''நவம்பர் புரட்சி நாள் பேரணி என்பது கம்யூனிஸ்டுகளின் வழக்கமான சடங்கு'' என்று பரிகசித்து மல்லாந்து படுத்துக் கொண்டு எச்சிலைத் துப்பியது முதலாளித்துவ கும்பல். ஆனால், கடந்த ஆண்டை விட இம்முறை நவம்பர் புரட்சி நாளன்று இரு மடங்குக்கும் மேலான மக்கள் செங்கொடிகளுடன் திரளத் தொடங்கியதும் பீதியடைந்து அலறியது. ''எதிர்த் தரப்பினருடன் சேர்ந்து கொண்டு கம்யூனிஸ்டுகள் நாட்டை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப் பார்க்கிறார்கள்'' என்று அரற்றினார் யேல்ட்சின். ''மீண்டும் சிவப்புப் பீதி'', ''இருண்ட சக்திகள் பலமடைகின்றன'' என்று தலைப்பிட்டு ''கார்டியன்'', ''டைம்'' முதலான

படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்தியப் பத்திரிகைகள் கட்டுரை எழுதி யேல்ட்சின் கும்பலை எச்சரித்தன. வேடிக்கை என்னவென்றால், கம்யூனிஸ்டுகளும் யேல்ட்சின் எதிர்ப்பாளர்களும் கூட்டு சேர்ந்து நிறுவியுள்ள ''தேசிய புனரமைப்பு முன்னணி'' எனும் அமைப்புக்கு யேல்ட்சின் கும்பல் விதித்துள்ள தடையை மீறித்தான் நவம்பர் புரட்சி நாள் பேரணி நடந்துள்ளது.

இப்பேரணி மட்டுமல்ல; கடந்த ஈராண்டுகளாக கோர்பி — யேல்ட்சின் கும்பலுக்கு எதிராக நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும் லெனின் - ஸ்டானின் உருவப் படங்களுடன், செங்கொடிகளுடனேயே நடந்துள்ளன. தலைநகர் மாஸ்கோ மட்டுமின்றி, செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் (லெனின் கிராடு), உல்லியனோவ்ஸ், கிராவ், கீவ் முதலான நகரங்களிலும் இத்தகைய ஆர்ப்பாட்டப் போரணிகள் தொடர்கின்றன.

அதிலும் குறிப்பாக, ஏகாதிபத்தியவாதிகளும் திருத்தல்வாதிகளும் தோழர் ஸ்டாலினை அவதூறு செய்து தாக்கிவரும் போது, அவர்களின் முகத்தில் கரிபூசும் வண்ணம் ரஷியப் பாட்டாளிகள் ஸ்டாலின் உருவப் படங்களையும் ஏந்திச் செல்கின்றனர். நவம்பர் புரட்சிநாள் பேரணியில் ஸ்டாலின் உருவப் படத்துடன் சென்ற 16 வயது இளைஞர் ஒருவர், ''அவர் மாபெரும் தேச பக்தர்'' என்றார். ஒரு மூதாட்டி ''அன்று அமெரிக்காவும் பிரிட்டனும் ரஷியாவை மதிக்கும் நிலையில் தலைவர் ஸ்டாலின் வைத்து இருந்தார். ஆனால், இன்றைய ஆட்சியாளர்கள் ரஷியாவை மேற்கு நாடுகளின் கால்களில் மண்டியிடச் செய்து விட்டனர்'' என்று ஆவேசமாகச் சொன்னார்.

மேலே: கால்களை இழந்த படைவீரர் டோலி டெரசோவ். கீழே: ஸ்டாலின் படத்தை ஏந்திச் செல்லும் தொழிலாளி. ஸ்டாலினின் ஆட்சிதான் இன்றைய அவல நிலைக்கு தீர்வு என்கிறார்கள்.



கடந்த ஆண்டு தோழர் ஸ்டாலினது 39-வது நினைவு நாளான மார்ச் 5-ம் தேதியன்று, லெனினது கல்லறை அருகே பெருந்திரளான மக்கள் திரண்டு தோழர் ஸ்டாலினுக்கு சிவப்பஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்ச்சிக்கு ஸ்டாலினது பேரனை தலைமை தாங்கும்படி அழைத்துக் கௌரவித்தனர். ''மனித குலத்தை அடிமைத் தளையிலிருந்து மீட்ட மாவீரன் ஸ்டாலினுக்கு வீரவணக்கம்!'' என்று முழங்கிய அவர்கள், இன்றைய கேடுகெட்ட முதலாளித்துவ ஆட்சியை வீழ்த்தச் சூளுரைத்தனர்.

ரஷியாவில் பொங்கியெழும் சிவப்புப் பேரலையானது, உலகெங்குமுள்ள புரட்சிகர சக்திகளுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் புதிய நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டி வருகிறது. இருப்பினும் புரட்சிகர கம்யூனிஸ்டுகள் ஒரு ஐக்கியப்பட்ட அமைப்பாக இல்லாமல், சிறுசிறு குழுக்களாக சிதறி உள்ளனர். இதுதவிர, சமூக ஏகாதிபத்தியவாதிகளான குருச்சேவ் -பிரஷ்னேவ் கும்பலை ஆதரிக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளும் பல்வேறு குழுக்களாக உள்ளனர். இவ்விரு சக்திகளும் யேல்ட்சினை எதிர்க்கும் தேசிய வாதிகள், முன்னாள் - இந்நாள் இராணுவத்தினர், அரசுத்துறை ஆலை இயக்குனர்கள், தொழிற்சங்கங்கள், இளைஞர் கழகங்கள் ஆகியவற்றுடன் சேர்ந்து ''தேசிய புனரமைப்பு முன்னணி'' எனும் கூட்டமைப்பை நிறுவி, யேல்ட்சினுக்கு எதிராகப் போராடி வருகின்றனர். இந்த முன்னணியை ஆளுங் கும்பல் தடைசெய்துள்ளதால், அவற்றின் திட்டம், செயல்பாடுகள் பற்றி போதிய விவரங்கள் இன்னமும் கிடைக்கவில்லை.

இருப்பினும், இந்த முன்னணிதான் இன்று ரஷியாவின் மிகப் பெரிய எதிர்த்தரப்பாக உள்ளது என்று முதலாளித்துவ வாதிகளே ஒப்புக் கொள்கின்றனர். கேடுகெட்ட முதலாளித்துவ ஜனநாயகத்தின் யோக்கியதையை அனுபவ பூர்வமாக உணர்ந்துள்ள ரஷயப் பாட்டாளிகள், விரைவில் ஐக்கியப்பட்டு நவம்பர் புரட்சி தாயகத்தில் மீண்டும் ஒரு போல்ஷ்விக் புரட்சியை நிச்சயம் சாதிப்பார்கள். அது காடுகள், மலைகளைக் கடந்து உலகெங்கும் எதிரொலிக்கும்; வறண்ட பாலை நிலத்தையும் வளமான மண்ணாக்கும்; ஆலைகளில் எந்திரங்களின் ஓசையாய் எழும்பும்; கலைஞர்களின் மேடைகளில் இசையாய் முழங்கும்; பட்ட மரத்திலும் பசுந்தளிர்கள் முளைவிடும்; பாரெங்கும் செங்கொடி ஓங்கி உயரும்!

**தகவலும் படங்களும்:**
**வாசகர் வட்டம்**
**டென்மார்க்**



படிப்பகம்

www.padippakam.com



*கோவையில் மதக்கலவர் அபாயம்!*

# கரசேவைக் காலிகளுக்கு காவடி தூக்கும் 'ஜெ' போலீசு

பாபர் மசூதி இடிப்புக்குப் பின் கோவை நகரில் பதற்றம் நிலவியது. ஏனெனில் இந்து வெறியர்கள் திட்டமிட்டு மதக் கலவரங்களை நடத்திவரும் பகுதிகளுள் கோவையும் ஒன்று. மசூதி இடிப்புக்கு கண்டனம் தெரிவித்து முஸ்லீம்கள் மங்கலத்தில் பஸ் மறியல் செய்தனர். திருப்பூரில் சில இடங்களில் பேருந்தை ஆவேசம் கொண்ட இளைஞர்கள் தாக்கினர். இவற்றை சாக்கு வைத்து போலீசு முஸ்லீம்கள் மீது பாய்ந்து குதறியது. துப்பாக்கிச் சூடு நடத்தி பலரை காயப்படுத்தியது. கோட்டைமேடு பகுதியில் "சோதனை" என்ற பெயரில் முஸ்லீம்களை வீடுவீடாகப் புகுந்து தாக்கி தொல்லைக்குள்ளாக்கியது போலீசு. அடையாள அட்டையின்றி இப்பகுதிக்குள் யாரும் உள்ளே வரக்கூடாது என காக்கிச் சட்டைகள் காட்டுத் தர்பார் நடத்தின.

கோவை போலீசுத்துறை ஆணையாளர் கணேசன் என்பவர் ஆர்.எஸ்.எஸ்.-ன் விசுவாசி மற்றும் சசிகலா நடராஜனின் அடிவருடியும் ஆவார். அண்மையில் ஒரு வாரப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் "அந்த அம்மா (சசிகலா) தயவில்தான் "போஸ்டிங்" வாங்கினேன். அதனால் என்னால் முடிந்ததையெல்லாம் செய்வேன்" என்று கூறியுள்ளார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். போலீசு துணை ஆணையாளர் இராதாகிருஷ்ணனும் பார்ப்பனீய விசுவாசி. இவர்கள் இருவரது தலைமையில்தான் கோவை போலீசு குறிப்பாக முஸ்லீம்கள் மீது பாய்ந்து குதறுகிறது. இவர்களின் இந்து மதவெறிச் செயலுக்கு கீழ்க் கண்ட சாட்சியே போதுமானது.

பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு கோவையில் நடந்த துப்பாக்கிச் சூட்டிற்குப் பின்பு அமைதிக்குழு ஒன்றை அமைத்தது போலீசு. இதில் அமைதியை கெடுத்த கும்பலைச் சேர்ந்த பா.ஜ.க. மாவட்டச் செயலர் அர்ஜுன் சம்பத்தும் ஒரு உறுப்பினர். சரி, இதையாவது விட்டுத் தள்ளுங்கள்! இதைவிட கேவலம். அதே அமைதிக்குழு உறுப்பினரான ஹாஜிபாஷா பாய் என்பவர் மீதான போலீசின் நடவடிக்கையே! பாஷ பாய்-ஐ முன்னெச்சரிக்கை நடவடிக்கையென 6.12.92 அன்று கைது செய்த போலீசு 10-ந் தேதிவரை பி.7 போலீசு நிலையத்தில் வைத்திருந்தது. ஆனால், 7,8.12.92 ஆகிய நாட்களில் கோவையில் நடந்த வன்முறைகளில் நேரடியாக ஈடுபட்டதாக 13 பிரிவுகளில் பொய் வழக்கு போட்டுள்ளது போலீசு. இது போதாது என்று அண்மையில். தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைத்துள்ளது. அதே சமயம் இந்து வெறியர்களான அர்ஜுன் சம்பத் முதலான பலர் வெளியில் சுதந்திரமாக உலாவுகிறார்கள். இந்து வெறியூட்டும் பிரச்சாரங்களை பல வழிகளில் செய்து வருகிறார்கள்.

இதே போன்றுதான் மக்கள் கலை இலக்கியக் கழகத்தைச் சேர்ந்தோரையும் பிரச்சாரம் செய்ய விடாது தடுத்தும், பா.ஜ.க.வினரை பிரச்சாரம் செய்ய அனுமதித்தும் வருகிறார்கள். கடந்த மாதம் 10.12.92 முதல் ஒருமுறை இருமுறை யல்ல; பல முறை பொதுக்கூட்டம் நடத்த அனுமதிக்க விண்ணப்பித்தும் சட்டம் - ஒழுங்கு நிலையையே சாக்கு கூறி தொடர்ந்து மறுத்து வருகிறது போலீசு. அதே சமயம் அதே நாட்களில்கூட பா.ஜ.க.வினர் பல இடங்களில் பொதுக்கூட்டம் நடத்தியுள்ளனர்.

தெருமுனைக் கூட்டம் நடத்தியதைக் கூட பொறுத்துக்கொள்ளாமல் ம.க.இ.க.வினரை கைது செய்தனர். 1.1.93 அன்று காளீஸ்வரா மில் முன்பு மசூதி இடிப்பைக் கண்டித்து வாயில் கூட்டம் நடத்த முயன்ற போது நசீம் இக்மத் (ம.க.இ.க), சந்திரசேகர் (தொழிலாளர் பிரச்சாரக் குழு) ஆகியோரை கைது செய்து சிறையிலடைத்தது போலீசு. (இதைச் சாக்கிட்டு காளீஸ்வரா ஆலை நிர்வாகம் சந்திரசேகர் மீது நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கும் ஆலையின் பார்ப்பன அதிகாரி சத்யன் என்பவர் தூண்டுகோலாக இருந்து தனது பார்ப்பனத் திமிரை இனங்காட்டியுள்ளார்.) 20.1.93 அன்று இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

இதுவன்றி ம.க.இ.க.வினரின் சுவரொட்டிகளை மட்டும் போலீசு சுரண்டிக் கிழித்து வருகிறது. இந்து வெறியர்களின் சுவரொட்டி மீது கை வைப்பதில்லை. சுவரொட்டி ஒட்டுபவர்களைக்கூட கைது செய்துவதற்கென ம.க.இ.க.வினரை தேடியலைகிறது, கோவை போலீசு.

கரசேவை நடத்திய காலிகள் - தமிழகத்தில் ஜெயலலிதாவின் முந்தானையைப் பிடித்து காலூன்ற முயலும் ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் தமது துணை அமைப்பின் மாநாட்டிற்கு இந்த கோவை மாநகரத்தைத் தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். வருகிற பிப். 21-ந் தேதி இந்து முன்னணி பெயரில் "இந்து விழிப்புணர்வு மாநாடு" நடத்தப் போகிறார்களாம். இதற்காக நகரெங்கும் பிரச்சாரம் செய்து வருவதை போலீசு கைகட்டி வேடிக்கைப் பார்த்து வருகிறது. "இம்மாநாட்டிற்கு பா.ஜ.க.வின் அகில இந்தியத் தலைவர்களும், வருகிறார்கள்" என்ற போர்வையில் அனுமதி பெற்று நடத்த திட்டமிட்டிருக்கும் இந்து வெறியர்களுக்கு துணைபோகிறது 'ஜெ' அரசு! இம்மாநாட்டின் மூலம் மதக்கலவரம் தூண்டப்படக்கூடிய அபாய நிலையே உள்ளது. எனவே இம்மாநாட்டை தடைசெய்யக் கோரி ம.க.இ.க. மற்றும் முஸ்லீம் அமைப்புகள், பிற ஜனநாயக அமைப்புகள் பிரச்சாரம் செய்து வருகின்றன.

## "வீதிக்கு வந்தால்தான் உறைக்கும் உங்களுக்கு" — பெண்கள் ஆவேசம்

திருச்சி - தென்னூர் சவேரியார் கோவில் தெருவில் கழிப்பிடம், சாக்கடை, குடிநீர் முதலான அடிப்படை - சுகாதார வசதி இல்லாததால் பொறுத்துப் பார்த்து பொறுமையிழந்த மக்கள் வீதிக்கு வந்து போராடத் தொடங்கியுள்ளனர். வெகுநாட்களாகியும் போட்ட மனுவிற்கு பயனேதும் இல்லாததால் 7.11.92 அன்று நகராட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். பகுதியிலுள்ள விலைவாசி எதிர்ப்பு பெண்கள் போராட்டக் குழுத் தலைமையில் 50-க்கும் மேற்பட்டோர் திரண்டு போராடினர். போராட்டத்தை அதிகாரிகள் அலட்சியம் செய்ததால் அலுவலக வாசலுக்குள்ளேயே புகுந்து முழக்கமிட்டு தங்கள் கோரிக்கையை வலியுறுத்தினர். உடன் போராட்டக் குழுவைச் சேர்ந்த சிலரை அழைத்து ஆணையாளர், ஒன்றுமே அறியாத அப்பாவி போல், "மனு கொடுத்திருக்கலாமே" என்று கேட்டதற்கு, பெண்கள் ஆவேசமாக தக்க பதில் கொடுத்தனர். பிறகு "ஏரியா எஞ்சினியரை" கூப்பிட்டு ஆணையிட்டு நாடகமாடினார் ஆணையர். அடுத்து பஸ் மறியல்தான் செய்வோம் என போராட்டக் குழுவினர் எச்சரித்துவிட்டு வந்தனர். மறுநாளே தெருவை சுத்தப்படுத்துகிற வேலை நடந்தது, தெரு விளக்கும் போடப்பட்டது. எனினும் கழிப்பிடம், சாக்கடை போன்றவற்றிற்கான வேலை இன்னும் தொடங்கப்படவில்லை. "பிரச்சினை முடியும்வரை எங்கள் போராட்டமும் தொடரும்" என்றனர் போராட்டக் குழுவினர். மேலும், தமது அமைப்பு பெயரை பெண்கள் விடுதலை முன்னணி என்று மாற்றி இனி செயல்படப் போவதாகவும் தெரிவித்தனர்.

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவின் இந்துவெறியும் பாக்.-வங்கதேச எதிர்ப்பும்

டிசம்பர் 6 அன்று அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட செய்தி அறிந்ததுமே பாகிஸ்தான், வங்க தேசம் ஆகிய இரு நாடுகளிலும் நாடு தழுவிய கொந்தளிப்புகள் எழுந்தன. உலகில் மற்ற பகுதிகளிலும் இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. வழிபாட்டுத்தலங்கள் சேதப்படுத்தப்பட்டன.

பாகிஸ்தானில் கிட்டதட்ட 10 நாட்களாக கண்டன ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடைபெற்றன. டிசம்பர் 8-ம் தேதியன்று பாகிஸ்தான் அரசு ஒரு பக்கமும் எதிர்கட்சிகள் இன்னொரு பக்கமும் அறை கூவல் விட்ட பொது வேலை நிறுத்தம் முழுமையாக மக்கள் ஆதரவுடன் நடைபெற்றது. கராச்சியில் இந்திய பாதுகாப்புக்கு இருந்த 3 போலீசார் படுகாயமுற்றனர். நாடெங்கும் இருந்த எதிர்ப்புணர்வைக் கண்டு இந்திய தூதரக ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் 118 பேர் இந்தியா திரும்பினர். இந்த போராட்டங்களில் 120 கோவில்கள் இடிக்கப்பட்டதாக அல்லது சேதப்படுத்தப்பட்டதாக பாகிஸ்தானில் உள்ள மனித உரிமைகள் சங்கத் தலைவர் குறிப்பிட்டுள்ளார். பாக். அரசு கலவரங்களை அடக்க முற்பட்டதில் 12 பேர் கொல்லப்பட்டனர். 200க்கும் மேற்பட்ட இந்திய கடைகள் தாக்கப்பட்டன.

வங்கதேசத்திலோ, பாபர் மசூதித் தகர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து எழுந்த போராட்டங்கள் இன்னும் கூடுதலாக இருந்தன. இதுகாறும் இந்த அளவுக்கு இந்திய எதிர்ப்பு பரவலாகவும் தொடர்ந்தும் இருந்ததில்லை. பாபர் மசூதி தகர்க்கப்பட்ட அன்று இரவே டாக்காவில் இந்திய தூதரகத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் இரண்டு மணி நேரம் கைப்பற்றி வைத்திருந்தனர். மறுநாளே இந்திய ஏர்லைன்ஸ் அலுவலகம், இந்திய தூதரகம், நூலகம் மற்றும் தூதரக கட்டிடங்கள் தாக்கப்பட்டன. 12-க்கும் மேற்பட்ட கோவில்கள் இடிக்கப்பட்டுள்ளன. ஏராளமான இந்துக்களின் வியாபார நிறுவனங்கள் தாக்கப்பட்டன வங்கதேச அரசு இத்தகைய தாக்குதல்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இரண்டு வாரங்களுக்கும் மேலாக ஆனது. 20 ஆண்டுகளுக்கும் மேலாக வங்கதேச மக்கள் இந்தியாவுடன் பாராட்டி வந்த நட்பு நிலை இன்று எதிர்ப்பு உணர்வாக மாறியுள்ளது.

வங்கதேசம், பாகிஸ்தான் இரு நாடுகளிலும் அம்மக்களிடையே எழுந்த கொந்தளிப்பு, இந்தியாவில் அயோத்தி சம்பவத்தை அடுத்து நாடெங்கும் சிறுபான்மை முஸ்லீம்கள் மீது நடத்தப்பட்ட மதக்கலவரங்களிலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டது.

இந்த போராட்டங்கள் இந்தியச் சம்பவங்களுக்கு எதிரலையாக தன்னெழுச்சியாக ஏற்பட்டவை. இது 1983 ஜூலையில் இலங்கை சம்பவங்களைத் தொடர்ந்து தமிழக மக்களிடையே எழுந்த கொந்தளிப்புக்கு ஒப்பானது. இந்தியாவில் நடந்தது போல், திட்டமிட்ட தயாரிப்பு அடிப்படையில், சிறுபான்மை மக்கள் படுகொலை செய்யப்படவில்லை.

இந்திய அரசு தனது நாட்டில் மதக்கலவரங்களை அடக்க இயலவில்லை. இந்து மதவெறிச் சக்திகளின் முன்முயற்சிக்கு விட்டுக் கொடுத்தது. பல்வேறு இடங்களிலும் இந்திய இராணுவமும், போலீசும் ஒத்துழைத்தன. தனது உள்நாட்டு உண்மையான நிலைமைகளை மறைத்துவிட்டு, இதன் பின் விளைவாகத் தோன்றிய பாக்., வங்கதேச மக்களது இந்திய எதிர்ப்பு போராட்டங்களை இந்திய அரசு எதிர்த்து பிரச்சாரம் செய்வதற்கு தொடங்கியது. முஸ்லீம் அடிப்படைவாதிகளின் கைவரிசை என்றும் இவற்றுக்கு பாக்., வங்கதேச அரசுகளே ஏற்பாடு செய்வதாகவும் இந்திய செய்தி நிறுவனங்கள் அவதூறு பரப்பின.

460 ஆண்டுகள் பழமையான பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கும், அதன்பின் ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் கொன்றொழிக்கப்பட்டதற்கும் கொள்ளை கற்பழிப்பு சம்பவங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லாதது போல இந்திய எதிர்ப்பு போராட்டங்கள் பாக்., வங்கதேசத்தில் நடப்பது போல இந்தியா சித்தரிக்கிறது பிற எல்லா நாடுகளிடமும் பாபர் மசூதி இடிப்பு சம்பவத்திற்கு மத்திய அரசு பொறுப்பு அல்ல என்று இந்திய வெளிவிவகார அமைச்சரகம் "விளக்கம்" அளித்தது. அச்சமயத்தில் பாகிஸ்தானும், வங்கதேசமும் சிறிதும் "ஒத்துழைப்பு" தராமல், தமது மக்களை சிறுபான்மையினர் மீது தாக்குதல் தொடுக்க, தூண்டி விடுகின்றன என்று குறிப்பிடுகிறது.

வங்கதேசத்தில் "அயோத்தி செல்வோம், மசூதியை கட்டிக் கொடுக்கச் செய்வோம்" என்று டாக்காவிலிருந்து "நீண்ட பயணம்" ஒன்றை சிலர் தொடங்கினர். கிட்டதட்ட 20,000 பேர் தொடக்கத்தில் கலந்து கொண்டனர். இது இரண்டு நாட்களில் ஒரு லட்சம் பேராக விரிவடைந்தது. வங்கதேச அரசுக்கு மிகுந்த இக்கட்டான நிலையை தோற்றுவித்தது. இந்தியா கடுமையான கண்டனத்தையும் காட்டமான எச்சரிக்கையையும் விடுத்தது. இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றது. வங்கதேச அரசு பெருமுயற்சி எடுத்து, இந்திய எல்லைக்கு 16 கி.மீ. தொலைவிலுள்ள ஹரிதாஸ்பூரில் பேரணியை தடுத்து நிறுத்தி கலைந்து போகச் செய்தது. அப்பேரணியினர் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் பேரணியினர் மீது துப்பாக்கிச் சூடு நடக்கவில்லை யாரோ கிரிமினல்கள் தான் கொல்லப்பட்டனர் என்று இந்தியாவால் அவதூறு செய்யப்படுகிறது.

> "விரிவாக்க எண்ணமும் பிராந்திய ஆதிக்க கண்ணோட்டமும் இதுகாறும் இந்தியாவின் வெளியுறவு கொள்கைகளில் வெளிப்பட்டு வந்திருப்பதுடன் இப்போது இந்து மதவெறியும் சேர்ந்துள்ளது."

வங்கதேச பாராளுமன்றம் ஜனவரி 20-ல் பாபர் மசூதியை அதே இடத்தில் திரும்ப கட்டித்தர வேண்டும்; கலவரங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் உத்திரவாதமும் அளிக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் போட்டது. இந்தியாவோ மிகுந்த ஆரவார, ஆர்ப்பாட்டத்துடன், இந்த தீர்மானம் "முழுக்கவும் ஏற்க இயலாதவை; இந்தியாவின் உள் விவகாரங்களில் தலையிடுபவை" என்று முகப்பிலேயே நிராகரித்தது. இதேபோல பாகிஸ்தான் பாராளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தையும் இந்தியா நிராகரித்தது. இங்கிலாந்து உள்துறை மந்திரி கென்னத் கிளார்க் வந்தபோது, இந்தியா உள்துறை மந்திரி சவான், இங்கிலாந்தில் சமீபத்தில் முஸ்லீம்களால் சேதப்படுத்தப்பட்ட இந்து கோவில்களை பழுது பார்த்துதர வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். சவானின் இந்த கோரிக்கையில் என்ன நியாயம் எழுப்பப்பட்டதோ, அதே உணர்வுதானே வங்கதேச பாராளுமன்ற தீர்மானத்திலும் உள்ளது? இந்தியாவின் இந்து மதவெறிக் கண்ணோட்டத்தையும் அண்டை நாடுகளிடம் கையாளும் ஆணவப்போக்கையும் இதில் காணலாம்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி மக்களைப் பலிகொண்டும், லட்சக்கணக்கான உழைக்கும் மக்களை அகதிகளாக விரட்டியும் பலநாட்கள் நீடித்துவரும் பம்பாய், அகமதாபாத், கான்பூர் மதவெறிக் கலவரங்களுக்கு யார், யார் காரணம் என்பது இப்போது உலகமறிந்த உண்மையாகி விட்டது. சிவசேனா, ஆர்.எஸ்.எஸ். கிரிமினல் குண்டர்களும், இரகசிய உலக கிரிமினல் கும்பல்களும் (மாஃபியா) போலிசுடன் கூட்டுச் சேர்ந்து நடத்தியவைதாம் அவை. இவர்களுடன் காங்கிரசு கோஷ்டிகளின் உள்ளூர் தலைவர்களும் கூட்டுக் சேர்ந்து வீட்டுமனை வர்த்தக (ரியல் எஸ்டேட) முதலாளிகளுக்காக சேரிகளிலும், புறம்போக்கிலும் வாழும் உழைக்கும் மக்களைத் திட்டமிட்டு விரட்டி அந்த இடங்களைக் கைப்பற்றும் சதிநோக்கம் கொண்டவையே அவை. பத்திரிக்கைகள் பலவும் இதை அம்பலப்படுத்தி வருகின்றன. ஆனால் இந்தக் கலவரங்கள் எல்லாம் பாக். உளவாளிகளாலும்,


படிப்பகம்

www.padippakam.com

வங்கதேச அகதிகளாலும் நடத்தப்பட்டவை என இந்து மதவெறி பாசிஸ்டுகள் புளுகி வருகின்றனர். காங்கிரசு ஆட்சியாளர்களாலேயே இக்கருத்து மறைமுகமாகப் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

பஞ்சாப் சீக்கிய தீவிரவாதிகளுக்கும் காஷ்மீர் போராளிகளுக்கும் அடைக்கலம் தந்து, நிதி உதவி, ஆயுத உதவி தந்து, இந்தியாவின் ஒற்றுமை மற்றும் அமைதியை சீர்குலைக்க உதவுவதாக பாகிஸ்தான் மீது இந்தியா குற்றச்சாட்டு வைக்கிறது. இதேபோல பாகிஸ்தானில் சிந்து மாகாண மக்கள் மீது அடக்குமுறை ஏவிவிடப்படுவதாகவும் அவர்களது ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டிருப்பதாகவும் இந்தியா புகார் கூறுகிறது. அதே சமயம் பாகிஸ்தானும் இந்தியா மீது இதேபோன்று புகார்களை எழுப்பி வருகிறது.

அணுஉலை, அணு ஆயுதங்கள் வைத்திருப்பது குறித்து இருநாடுகளும் பரஸ்பரம் குற்றம் சாட்டி வருகின்றன.



வங்கதேசத்தில் முஸ்லீம்களின் கண்டன ஊர்வலம்

விரிவாக்க எண்ணமும் பிராந்திய ஆதிக்க கண்ணோட்டமும் இதுகாறும் இந்தியாவின் வெளியுறவு கொள்கைளில் வெளிப்பட்டு வந்திருப்பதுடன் இப்போது இந்து மதவெறியும் சேர்ந்துள்ளது.

ஆகவே தான் இந்தியாவை எந்த அண்டைநாடு, விமர்சித்தாலும் அதற்கு உரிய பதிலளிக்காமலே, விளக்கமளிக்காமலே அடாவடித்தனமாக உள்விவகாரத்தில் தலையிடாதே என சொல்லி ஆணவப் போக்குடன் நிராகரிக்கிறது.

இந்தியா - பாக் உறவும், இந்தியா - வங்கதேச உறவும் மிகவும் பின்னடைவுக்கு தள்ளப்பட்டுள்ளன. இதற்கு இந்தியாவின் இந்து மதவெறிக் கண்ணோட்டமும் ஆதிக்க மனப்பான்மையுமே அடிப்படையாக இருந்து வருகின்றன.

அயோத்தி சம்பவத்தை அடுத்து, இந்தியா - பாகிஸ்தான் உறவு மிக மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. அதற்கு இரண்டாம் நாளே டிசம்பர் 8-ல், பாகிஸ்தான் தூதரக அதிகாரி முகமது அஷ்டாக் என்பவரை உளவு வேலையில் ஈடுபட்டதாகக் கூறி ஒரே வாரத்தில் இந்தியா வெளியேற உத்திரவிட்டது.

அயோத்தி விசயத்தில், தனது நிலையை விளக்கியபோதெல்லாம், அனைத்து நாடுகளிடமும், பாகிஸ்தான் ''ஒத்துழைப்பு தராததை'' கூடவே இந்தியா குறிப்பிட்டது.

சமமான தூதரக ஊழியர்கள் என்று ஒப்பந்த சரத்துப்படி, கராச்சியில் இருந்த ''அளவுக்கு 'அதிகமான'' இந்திய தூதரக ஊழியர்களை, 60-இலிருந்து 24-ஆக குறைக்க பாகிஸ்தான் கோரியது. இந்தியா உடனடியாக இதனை நிராகரித்தது. அயோத்தி சம்பவங்களைப் பற்றி பாக். இன் நிலைப்பாடுகளால் கடும் விளைவை சந்திக்க வேண்டும் என்று இந்தியா எச்சரித்தது.

இந்திய அரசின் உடமையில் உள்ள ''ஜின்னா இல்லத்''தை தூதரக அலுவலகத்திற்காக தருமாறு பாக். பல வருடங்களாக கோரிவருகிறது. இந்தியா காலம் கடத்தி வந்தது. தற்போது பிப்ரவரியில் மறுத்துவிட்டது. பாகிஸ்தான் உருவாவதற்கு காரணமாக இருந்த ஜின்னா என்பதால், ஜின்னா இல்லத்தை, இந்தியாவில் முஸ்லீம் பாரம்பரியத்திற்கு ஒரு சின்னமாக பாக். உருவாக்கக் கூடும் என்பதுதான் காரணம்.

இந்தியாவில் அயோத்தி சம்பவத்தை ஒட்டி நாடு முழுவதிலும் ஏற்பட்ட ரத்த குளியல்களும், கலவரங்களும், ஒருவகையில் இந்தியாவில் கொள்ளை இலாபம் அடிக்க இறங்கியுள்ள ஐ.எம்.எஃப் - உலக வங்கி - மற்றும் மேல்நிலை வல்லரசுகளுக்கு சாதகமான உள்ளன. எனவே தான் அவை இந்திய அரசின் பொறுப்பில்லாத தட்டிக்கழிக்கும் வாதத்தை ஏற்று ''மதசார்பின்மை''யை தொடர்ந்து பேணுமாறு கேட்டுக் கொண்டன. ஆனால் தெற்காசிய துணைக் கண்டத்திலும் முஸ்லீம் நாடுகளிடையேயும் அதன் வாதம் விலை போகவில்லை. தனிமைப்பட்டு நிற்கிறது.

இதுகாறும் சார்க் எனப்படும் தெற்கு ஆசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பை பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வைக்கவும் அண்டை நாடுகளை தமது செல்வாக்கிற்குக்குள் இருந்தி வைக்கவும் இந்தியா பயன்படுத்தி வந்தது. ஆனால் இதே அமைப்பைக் கொண்டு இந்தியாவை சிக்கவைக்க அயோத்திப் பிரச்சனையைக் கையாள வங்கதேசமும் பாகிஸ்தானும் முனைப்பாக உள்ளன. இலங்கையும் இந்த அளவு இல்லாவிடினும், அவ்விரு நாடுகளுக்கும் ஒத்துப் போவதாகவே உள்ளது.

அயோத்தி மசூதி இடிப்பும், அதைத் தொடர்ந்து நாடு முழுவதும் தலை விரித்தாடும் மதவெறிப் படுகொலைகளும், பாகிஸ்தான் வங்கதேசத்தில் மட்டும் இந்தியா மீதான வெறுப்பு அதிகரிக்கவில்லை. உலக நாடுகள், குறிப்பாக, இசுலாமிய நாடுகளிலும் கூட இந்தியா தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. வளைகுடா கூட்டுறவு சபை, இசுலாமிய நாடுகளின் கூட்டமைப்பு ஆகியவற்றிலும் இந்தியாவின் மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்தியாவுக்கு பெட்ரோலியம் விற்பதை நிறுத்துவதோடு இந்திய சரக்குகளின் இறக்குமதிக்குத் தடைவிதிப்பதைக்கூட இசுலாமிய நாடுகள் பரிசீலித்தன. வங்கதேசத்தில் நடக்க இருந்த ''சார்க்'' மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியப் பிரதமரை அனுமதிப்பதில்லை; விமான நிலையத்தை முற்றுகையிடுவோம் என இசுலாமிய மத அடிப்படைவாதிகள் மிரட்டியதைத் தொடர்ந்து, நரசிம்மராவ் அங்கு கால் வைக்க முடியாத நிலை உருவானது.

எனவேதான் சார்க் அமைப்பை முன்னோக்கவே இந்தியா தயாராக இல்லை. இதோடு இரண்டாவது முறையாக சார்க் கூட்டத்தைத் தள்ளிப்போட்டது. சார்க் அதிகார பூர்வமாக கூடவில்லையென்றாலும் சாதாரண முறையில் இந்தியா இல்லாமலேயே பாக்., வங்கதேசம், இலங்கை ஆகியன தமக்குள் விவாதித்துள்ளன. சார்க் அமைப்பிற்கு இனி தலைமையேற்கவுள்ள வங்கதேச பிரதமர் பேகம் கலிதா ஜியாவும், பாக். பிரதமர் நவாஸ் ஷரீப்பும் ''இந்தியாவிலும் அதன் அண்டை நாடுகளிலும் மத நல்லிணக்கத்தை பராமரிக்க, பாபர் மசூதியை அதே இடத்தில் மீண்டும் கட்டித் தருவது தவிர்க்க இயலாத, அத்தியாவசியமான ஒன்றாகும்'' என்று கூறியுள்ளனர். இலங்கை அதிபர் பிரேமதாசா ''சார்க் உறவுகளை உறுதிகுலைக்கவோ, வலுக்குறையச் செய்யவோ அயோத்தி போன்ற சம்பவங்கள் இடம் தராமல் இருக்க உத்திரவாதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்'' என்றார்.

படிப்பகம்

www.padippakam.com

சார்க் அமைப்பு வருடா வருடம் கூட வேண்டாம், இரண்டு வருடத்திற்கு ஒரு முறை கூடலாம் என்ற யோசனையை இந்தியா முன் வைத்திருப்பதாக கூறப்படுகிறது. இந்தியா தெற்காசிய பிராந்தியத்தில் தனிமைப்பட்டு போயிருக்கும் அவமானத்தை மறைக்கவே, சார்க் நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பை தொடர வேண்டும் என்று தற்போதைய சார்க் தலைவர் பிரேமதாசாவிடம் எடுத்துக் கூறியது.

இந்தியா தனது அண்டை நாடுகளுடனான உறவில் இந்து மதவெறியை பின்பற்றுவது சர்வ தேச ரீதியில் முஸ்லீம் நாடுகளிடமிருந்து தனிமை படுத்துவதோடு, இந்திய துணைக் கண்டத்தில் மதக் கலவரங்கள் தொடரவே வழிவகுக்கும்.

## சங்கராச்சாரிக்கு செருப்படி!

மதுரையில் தமிழக மாணவர் இயக்கம் சார்பாக பார்ப்பன மத வெறியன் சங்கராச்சாரியை செருப்பாலடித்து கொளுத்தும் போராட்டம் 10-2-93 காலை 11 மணி அளவில் தல்லாகுளம் பெரியார் சிலை அருகில் நடந்தது. முதலில் மாணவர்கள் பெரியார் சிலை முன் வந்து கோஷமிட்டு சங்கராச்சாரி கொடும்பாவியைக் கொளுத்தினர். போலீசு பாய்ந்து வந்து பிடித்தது. மாணவர்களுக்கு ஆதரவாக வந்த பா.ம.க., தலித் சிறுத்தைகள் (DPI), தி.க. (ரா) மற்றும் ம.க.இ.க. தோழர்களையும் கைது செய்த போலீசார் ஆபாச வசவுகளைப் பொழிந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை உடனே விடுதலை செய்யக்கோரி ம.க.இ.க., R.S.Y.F., சார்பாகவும், DPI, தமிழக மாணவர் இயக்கம் சார்பாகவும் போலீசைக் கண்டித்தும் இயக்கம் எடுக்கப்பட்டது.

மாலையில் சட்டக் கல்லூரி மாணவர்கள் கல்லூரி முன் சங்கராச்சாரி கொடும்பாவியை செருப்பால் அடித்து, சிறுநீர் அபிசேகம் செய்து கொளுத்தினர். மாணவர்கள் 100-க்கும் அதிகமானோர் திரண்டிருந்ததால் செய்வதறியாமல் போலீசு திகைத்து நின்றது.

அங்கிருந்து ஊர்வலமாகச் சென்ற மாணவர்கள் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக் கோரி தல்லாகுளம் காவல் நிலையத்தின் முன் ஆர்ப்பாட்டம், மறியலில் ஈடுபட்டனர். போலீசு உடனே கைது செய்தவர்களை விடுதலை செய்தது. பின் அனைவரும் பெரியார் சிலை வரை கோஷமிட்டு ஊர்வலமாக வந்து கலைந்து சென்றனர். பார்ப்பன இந்து மதவெறி பாசிசத்தை எதிர்க்க மாணவர்களும், முற்போக்கு சக்திகளும் மதுரையில் வேகமாக அணிதிரண்டு வருவதற்கு இது ஒரு சான்று.



## *பாலஸ்தீனியர் நாடு கடத்தல்:*
# யூதவெறிக்குத் துணைபோகும் ஐ.நா.

இஸ்ரேல் பாதுகாப்பு படையைச் சேர்ந்த மேஜர் நிஸ்ஸின் டோலிடானோ என்பவரை, ஹமாஸ் (Hamas) பாலஸ்தீன மத அடிப்படைவாதக் குழுவினர் கடத்திச் சென்று கொலை செய்ததைக் காரணமாகக் கொண்டு, 415 பாலஸ்தீனர்களை தனது நாட்டிலிருந்து வெளியேற்றியுள்ளது இஸ்ரேல். அவர்கள் அனைவரையும் தனது கட்டுப்பாட்டிலுள்ள தெற்கு லெபனானின் எல்லையோர மலைப்பகுதிக்கு நாடு கடத்தியுள்ளது. உறைபனிக்கும் கீழான குளிர் நிலையில், அவர்கள், போதிய உணவோ, கதகதப்புக்குத் தேவையான எரிபொருளோ, தங்குவதற்கு ஏற்ற கூடார வசதிகளோ இன்றி, 'தங்களை நாட்டினுள் அனுமதிக்கச் சொல்லி' போராடி வருகின்றனர். இஸ்ரேல், 'லெபனான்தான் அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என அடாவடித்தனமாகக் கூறிவருவதுடன், சர்வதேச அமைப்புகள் உணவுப் பொருட்களையும், பிற தேவையான பொருட்களையும் நாடு கடத்தப்பட்டவர்களுக்கு கொண்டு செல்வதை முதலில் தடுத்து நிறுத்திவிட்டது.

லெபனான் 'இன்று 400 என்றால் நாளை 4,000: பின் 40,000' எனக்கூறி, இதில் எவ்விதத்திலும் தலையிட மறுத்துவிட்டது. லெபனான் கூறுவது உண்மைதான். இஸ்ரேல் 1967-லிருந்து 1987 முடிய 1200 பாலஸ்தீனர்களை சட்ட விரோதமாக நாடு கடத்தியுள்ளது. அடுத்தடுத்த சர்வதேச நிர்பந்தகங்கள் காரணமாகவே, ஐ.நா. சபை நாடு கடத்தப்பட்டவர்களை இஸ்ரேல் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் 799-ஐ நிறைவேற்றியுள்ளது. இஸ்ரேலோ, தீர்மானத்தை செயல்படுத்த மறுத்துள்ளதுடன், அதன் பாராளுமன்றமும், நீதி மன்றமும் நாடு கடத்தியது சரிதானென ஏற்றுக் கொண்டுள்ளன. மேலும், அமெரிக்கா தீர்மானத்திற்கு எதிராக தனது ''வீடோ'' உரிமையினைப் பயன்படுத்தும் என்ற நம்பிக்கையினையும் தெரிவித்துள்ளது. நாடு கடத்தப்பட்டவர்கள், இஸ்ரேல் தான் தவறாக வெளியேற்றிய 10 பேரை மட்டும் திரும்ப அழைத்துக் கொள்வதாக கூறியதை ஏற்க மறுத்துள்ளனர். 'ஐ.நா தீர்மானத்தை எவ்வித நிபந்தனையின்றி செயல்படுத்த வேண்டும்' என உறைபனிக் குளிரிலும் உறுதி குன்றாது போராடி வருகின்றனர்.

முன்னாள் யூகோஸ்லேவியக் குடியரசுகளில் ஒன்றான போஸ்னியாவில் நடந்து வரும் உள்நாட்டு கலகத்தில், செர்பியர்கள் ஓர் ஆக்கிரமிப்பு இராணுவம் போன்றே வெறியாட்டம் போட்டு வருகின்றனர். 'போஸ்னியா' முஸ்லீம்களின் மீது இனத் தூய்மை நடவடிக்கையினை ஏவிவிட்டும், குடியிருப்பு பகுதிகளின் மீது தொடர்ச்சியாக குண்டு வீசியும், பொது மக்களின் மீது தாறுமாறாக துப்பாக்கி பிரயோகம் செய்தும் அட்டூழியம் புரிந்து வருகின்றனர். 20,000-க்கும் அதிகமான பெண்களை செர்பிய இராணுவம் கற்பழித்துள்ளது என சர்வதேச பொது மன்னிப்புக் கழகத்தின் அறிக்கை கூறிகின்றது. இதன் காரணமாக, பிறக்கும் குழந்தைகளை அத்தாய்மார்கள் ஏறெடுத்தும் பார்ப்பதில்லையாம். செர்பியர்களின் மீது ஐ.நா. சாதித்துள்ள பொருளாதாரத் தடையும் வான்விலக்குப் பகுதியும் அவர்களின் கால்தூசி மதிப்பைக் கூட பெறவில்லை.

தன்னுடைய இறையாண்மையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஈராக் எடுத்த நடவடிக்கைகளை சிறிது கூட சகித்துக் கொள்ளாது, அந்நாட்டின் மீது பாய்ந்து பிறாண்டிய அமெரிக்க கழுகும், ஐ.நாவும் இவ்விரு நாடுகளுக்கும் எதிராக ஒரு சிறு துரும்பைக் கூட அசைக்கவில்லை. காரணம், இஸ்ரேல் அமெரிக்காவுன் அங்கீகாரம் பெற்ற மேற்காசியாவின், பேட்டை ரௌடி, செர்பியா, அதனின் ஐரோப்பிய இனக் கூட்டாளி.



படிப்பகம்

www.padippakam.com

# இந்துவெறிக்கு எதிராக தெருமுனைப் போர்

## கைது! சிறை! தாக்குதல்!

பாபர் மசூதியை இடித்த கிரிமினல் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படவில்லை. மத்தியில் காங்கிரசும் மாநிலத்தில் 'ஜெ' கும்பலும் அவர்களின் பங்காளிகளாகவே செயல்படுகின்றனர். எனவே தமிழகத்திலுள்ள புரட்சிகர அமைப்புகள் இவற்றை அம்பலப்படுத்துவதோடு இந்து வெறியர்களுக்குப் புரியும் மொழியில் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

திருச்சியில் ரயில்வே ஓர்க்கர்ஸ் யூனியன், தொழிலாளர் பிரச்சாரக்குழு இணைந்து பார்ப்பன ஆதிக்க வெறியன் ராமன் படத்துக்கும் இந்து மதவெறியர்களான அத்வானி, அசோக் சிங்கால், வாஜ்பேயி, சங்கராச்சாரி, இராம.கோபாலன் ஆகியோரின் உருவப் படங்களுக்கும் தீ மூட்டின. டிசம்பர் 28,29 ஆகிய நாட்களில் பொன்மலை, மேலக்கல்கண்டார் கோட்டை, திருவரம்பூர், காட்டூர், BHEL (பெல்) ஆலை வாயில் ஆகிய பகுதிகளில் இப்போராட்டம் நடத்தப்பட்டது. முருகானந்தம், சரவணன் ஆகியோர் தலைமை தாங்கி உரை நிகழ்த்தினர். கல்கண்டார் கோட்டையில் தி.க., தி.மு.க. வைச் சேர்ந்த இளைஞர்களும், பகுதி மக்களும் இதில் கலந்து கொண்டு முழக்கமிட்டனர்; தீ மூட்டினர். அப்போது விவசாயி ஒருவர் ''இந்து வெறியர்களுக்கு உயிரோடு நெருப்பு வைக்கனுமுங்க'' என்று தமது குமுறலை வெளிப்படுத்தினார். திருவரம்பூர் பகுதியில் தி.க. வில் பொறுப்பில் உள்ள ஒருவர் ''நாங்கள் பெரியார் காலத்தில் வாழ்வதைப் போன்ற உணர்வு பெற்றோம். பெரியாருக்குப்பின் அவரது கருத்துக்களை சரியான முறையில் நீங்கள்தான் பிரச்சாரம் செய்கிறீர்கள். தி.க. இனி எப்போதும் பெரியார் கொள்கைகளை பேசாது'' என்று உணர்ச்சி வசப்பட்டு பேசி, தீ மூட்டியவர்களை உற்சாகப்படுத்தினார்.

மேலும் மசூதி இடிப்புக்குப்பின் நாடெங்கும் மதக் கலவரங்களை நடத்தி அப்பாவி மக்களை படுகொலை புரிவதைக் கண்டித்தும் குறிப்பாக பம்பாய், குஜராத்தில் நடக்கும் மதவெறி - இனவெறிப் படுகொலைகளைக் கண்டித்தும் இவ்வமைப்புகள் பிரச்சாரம் மேற்கொண்டன. திருச்சி - பொன்மலை, திருவரம்பூர் பகுதிகளில் 16 இடங்களில் 17, 18-1-93 தேதிகளில் தெருமுனைப் பிரச்சாரம் செய்தனர். பார்ப்பனர்களே இந்துக்கள், பார்ப்பன மதமே இந்து மதம் என்பதை விளக்கியும்; பெரியாரையும், அம்பேத்காரையும் தலைவர்களாக ஏற்றுக் கொள்பவர்கள் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்வது இழிவானது என்பதை விளக்கியும் முருகானந்தம், சரவணன், ராமசாமி ஆகியோர் தமது உரையில் பேசினர். பிரச்சாரத்தைக் கேட்டவர்களுள் ஒரு அ.தி.மு.க. வைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுனர் பேசியவையனைத்தும் சரியென அங்கீகரித்து டீ வாங்கிக் கொடுத்து உபசரித்தது குறிப்பிடத்தக்கது. தி.க. வைச் சேர்ந்த ஒருவர் ''என் உள்ளத்தில் இருந்ததையெல்லாம் உங்கள் வாயால் கேட்டேன்'' என்று பேச்சாளர்களை வாழ்த்தினார். இன்னும் ஒருவர் தான் இந்துமதக் கொடுமையால் கிறித்துவ மதத்திற்கு மாறியதையும் தமது உறவினர்கள் கிராமத்தில் இன்னும் கொடுமைக்குள்ளாவதையும் எடுத்து விளக்கினார்.

மதுரை - உசிலம்பட்டியில் விவசாயிகள் விடுதலை முன்னணியினர் இது போன்ற பிரச்சாரத்தை பொதுக்கூட்டம் வாயிலாக மேற்கொண்டனர். பேரையூர் சாலையில் 24-1-93 அன்று நடந்த ''இந்து மதவெறியர்களுக்கு பாடை கட்டுவோம்'' என்ற பொதுக்கூட்டத்தில் ம.க.இ.க. வைச் சேர்ந்த கதிரவன் சிறப்புரையாற்றினார். பின்னர் ''ராமனின் இரட்டை கொலை வழக்கு'' எனும் ஓரங்க நாடகமும் கலை நிகழ்ச்சியும் நடந்தது. இதற்கு முன்பாக தட்டி, சுவரொட்டி, துண்டு பிரசுரம் வாயிலாக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. பகுதி மக்கள் இப்பிரச்சாரங்களை வரவேற்று ஏராளமாக நன்கொடையளித்தனர். பொதுக் கூட்டத்திதைக் கேட்ட எம்.ராம்குமார் பாரதி என்பவர், ''நாட்டில் நடக்கும் அநீதி பற்றி பேசியதும், நாடகமும் பாடல்களும் என்னைக் கவர்ந்தது. பல இடங்களில் இதுபோன்று நடத்த வேண்டும்'' என்று கருத்து தெரிவித்தார். ''மற்றக் கட்சிகளின் கூட்டம் போல் இல்லாமல் பகுதிப் பிரச்சினை பற்றியும் பேசியது சரியானது'' என்று பா.ஜோதிகுமார் என்பவர் கருத்து கூறினார்.



கோவையில் 4-1-93 அன்று மக்கள் கலை இலக்கியக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பீளமேடு மற்றும் நகரப் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் பார்ப்பன ஆதிக்கச் சின்னமான ராமன் படத்தை தீயிட்டு சாம்பலாக்கினர். இருவரை போலீசு கைது செய்து வழக்கு போட்டு பின்னர் விடுவித்தது. இவ்வாறு தெருமுனைகளில் பார்ப்பன - இந்து வெறியர்களுக்கு எதிரானப் போர் தமிழகமெங்கும் தொடர்ந்து நடந்து வருகிறது.

திருச்சியில் மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினரின் தொடர்ச்சியான இந்து மதவெறி எதிர்ப்பு பிரச்சாரம் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பலை கிலியும் ஆத்திரமும் கொள்ள வைத்திருக்கிறது. 7-2-93 ஞாயிறன்று ம.க.இ., பு.மா.இ.மு.-வின் இந்து மதவெறி எதிர்ப்பு சைக்கிள் ஊர்வலம் புத்தூர் அக்கிரகாரத்தை அடைந்தவுடன் அங்கிருந்த அ.தி.மு.க. கரை வேட்டி கட்டிய பார்ப்பன வெறியனின் தலைமையில் சில பார்ப்பனர்கள் வந்து பிரச்சாரத்தைத் தடுத்தனர். ''பார்ப்பான்' என்று சொல்லக் கூடாது என்று ஆட்சேபித்தனர். அதை மீறியும் எதிர்த்தும் தோழர்கள் பிரச்சாரத்தை தொடர்ந்தனர். 'ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பல்' என்று சொல்வதற்கான காரணங்களை பேசத் தொடங்கினர். இதைச் சகிக்க முடியாத அக்கிரகாரம் உடனே தனது அடியாட்களான போலீசை வரவழைத்தது. டி.எஸ்.பி. தலைமையில் வந்து இழங்கிய போலீசு பட்டாளத்தை சட்டை செய்யாமல் பிரச்சாரம் தொடரவே ஆத்திரத்தில் அறிவிழந்த டி.எஸ்.பி. தரக்குறைவாக தோழர்களைப் பேசினார்; அதே 'மரியாதையுடன்' பதில் கிடைத்தது. தோழர்கள் கைது செய்யப்பட்டு உறையூர் காவல் நிலையத்துக்கக் கொண்டு செல்லப்பட்டனர். இரண்டு தோழர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கித் தனது எசமான விசுவாசத்தைக் காட்டின உறையூர் காவல் நாய்கள்.

ம.க.இ.க. செயலர் முத்து, ரயில்வே தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த முருகானந்தம், பு.மா.இ.மு. செயலர் ஜெகதீசன் உள்ளிட்டு 16 தோழர்கள் மீது 153-A&B, 143, 148, 285 7-1(A) ஆகிய பிரிவுகளின் கீழ் பொய் வழக்கு போடப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

5-2-93 அன்று புத்தூரில் நடைபெற்ற ம.க.இ.க. பொதுக்கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டதையும், ஆதரவளித்ததையும் கண்டு கிலியடைந்த ஆர். எஸ்.எஸ். — டி.எஸ்.பி. கூட்டணி ''கூர்மையான ஆயுதங்களால் தாக்க முயற்சித்ததாக'' பொய்வழக்கு போட்டுள்ளது. அமைதியாக பிரச்சாரம் செய்ததற்கு இப்படி ஒரு பொய்வழக்கு என்றால், கூர்மையான ஆயுதங்களைக் கொண்டு வந்தால் என்ன வழக்கு போடுவார்கள்?

படிப்பகம்

www.padippakam.com

# கிசுகிசு ஏடுகள்: அரசியல் போதை வியாபாரம்

கடந்த டிசம்பர் மாதத்தின் முதல் வாரம்.

''கலைப்பு உறுதி! தேர்தலுக்குத் தயாரா கிறார் ஜெயலலிதா!''

இந்த தலைப்புடன் அட்டைப் படம் கொண்ட ''சத்ரியன்'' வார இதழ் கடைக ளில் தொங்கியதும் ஒரே பரபரப்பு. பத்தி ரிகை வைத்திருப்பவர்களைச் சூழ்ந்து கொண்டு ஆங்காங்கே கூட்டம். ''ஏன் சார் ஆட்சியைக் கலைக்கிறாங்க? எப்ப சார் கலைக்கப் போறாங்க?'' என்று அரசியலில் ஆர்வமுற்ற சிலர் அங்கே கேட்டுக் கொண் டிருந்தார்கள். ''அட போப்பா! ஜெயல லிதா ஒரே குழப்பமாகி யோசனை பண் ணிக்கிட்டு இருங்காங்களாம்! அட்டை யிலே பொய்ச் செய்தியைப் போட்டு, ஏமாத்தி வாங்க வச்சிட்டான். இந்தப் பத்தி கைகாரனுங்களையே நம்பக் கூடாது'' என்று ஆத்திரத்தோடு கூறினார், பத்திரி கையை வாங்கியவர்.

ஆனால் இரண்டு நாட்கள் கூட ஆக வில்லை, அதே நபர் மீண்டும் ஏமாந்தார். ''அ.தி.மு.க. டம் டமார்! அசெம்பிளி அவுட்!'' என்ற அட்டைப் படத்துடன் ''தராசு'' வார இதழ் கடைகளில் தொங்கிய தும் பரபரப்படைந்து பத்திரிகை வாங்கிப் புரட்டினார். தமிழக சட்டசபையைக் கலைத்து மறு தேர்தலை நடத்த ஜெயலலிதா ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார் என்கிற வதந்தியையும் ஊகத்தையும் வைத்து ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அடுத்த சில நாட்களில் இதேபோல் ''கழுகு'' வார இதழ் ''குமரிப்பெண் ஆட்சி கோவிந்தா!'' என்ற தலைப்புடன் வதந்தியும் பரபரப்பும் கொண்ட அட்டைப்படக் கட்டுரையை வெளியிட்டது.

வழக்கமாக பொய்ச் செய்திகளையும், வதந்திகளையும் படித்துப் பழகிப் போன வாசகர்களைவிட, இப்படிப்பட்ட செய்தி கள் வரும்போது இன்னும் கூடுதலான புதிய வாசகர்கள் பலர் தொடர்ந்து ஏமாற் றப் படுகின்றனர். இத்தகைய மஞ்சள் செய்தி மோசடியானது, பரபரப்பு அரசியல் பத்திரிகைகள் அனைத்திலும் எய்ட்ஸ் நோயைப் போல வேகமாகப் பரவி வருகி றது. வதந்தி, பொய், கிசுகிசு, பரபரப்புச் செய்திகள் - இதுதான் இன்றைய தமிழக முதலாளித்துவப் பத்திரிகைகள் பெரும்பா லாவை தமது விற்பனையைப் பெருக்கிக் கொள்ள கடை பிடிக்கும் சுலபமான மலி வான உத்தி.

### வதந்தியே செய்தி மோசடியே மூலதனம்

''அபாயம் அருகில்! ஜெயலலிதா செக்மேட்! ''தமிழக சட்டசபை டபக்! ஜெயாவின் எஸ்கேப் திட்டம்!'' ''கவர்னர் சீட்டு கிழிகிறது! அடுத்த முதல்வர்ரெடி!'' ராவ் கிரீன்சிக்னல்'' ''அம்பேலாகிறது ஆசிட் ஆட்சி!'' ''பாவத்தின் சம்பளம் டிஸ் மிஸ்!'' ''பறிபோகிறது இரட்டை இலை!'' ''டிசம்பர் 24-ல் டிஸ்மிஸ் உறுதி!'' - இவை கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் வெளியான கிசுகிசு வார ஏடுகளின் அட் டைப் படத் தலைப்புகள். இத்தகைய சம்ப வங்கள் ஏதாவது ஒன்றாவது நடந்துள்ளதா என்பதை அதன் வாசகர்கள் சற்று திரும்பிப் பார்த்தாலே இவற்றின் மோசடி புலப்படும்.

ஆதித்தன் குடும்பப் பத்திரிகை தினத் தந்தியும், மாலைமுரசும், ராணியும் தான் முன்பு மஞ்சள் பத்திரிகைகளாக இருந்தன. உண்மைச் செய்திகளோடு பொய்யையும் வதந்தியையும் கலந்து நம்பச் செய்வதில் திறமையானவரான ஆதித்தன், அதிலேயே ஆராய்ச்சி செய்து இலக்கணம் படைத்த வர். அவரது பரிபாலனத்தின் கீழ் மஞ்சள் பத்திரிகை பேரரசு வளர்ந்தது. ஆதித்தனிட மிருந்து கற்றுக் கொண்டு அதே வழியில் தினந்தந்தியோடு போட்டியிடும் அளவுக்கு இன்று ''தினமலர்'' நாளேடு வளர்ந்துவிட் டது.

அரைகுறையாகப் படித்த சாதாரண வாசகர்களை மட்டுமே இத்தகைய பத்திரி கைகள் போதையேற்றி சீரழித்து வந்தன. படித்த அறிவாளிக் கூட்டம் என்று பெருமை பாராட்டிக் கொள்ளும் நடுத்தர வர்க்கத்தினரை இத்தகைய மஞ்சள் காமா லைப் நோய்க்கு பலியாக்கிய சாதனை ''ஜூனியர் விகடன்'' வார இதழையே சாரும். மூன்று ஆண்டுகளில் மூன்று லட்சம் பிரதிகள் விற்குமளவுக்கு ஜூனியர் விகடன் உயர்ந்ததற்குக் காரணம் அதன் கிசுகிசு - மஞ்சள் செய்திகள் தான்!

படித்த வர்க்கத்தினரின் அரசியல் பத் திரிகையாகக் கருதப்படும் ''துக்ளக்'', அரசி யல் செய்திகளையே தனது ஆளும் வர்க்கக் கொள்கைக்கேற்ப திரித்துப் புரட்டுவதில் திறமைசாலி. முன்னாள் அரசு அதிகாரிகள், போலீசு அதிகாரிகளை புனைபெயரில் கட் டுரை எழுதவைப்பது. ''நம்பகமான அதி காரி குறிப்பிட்டார்,'' ''பெயர் குறிப்பட விரும்பாத ஒரு எம்.பி.கூறினார்'', ''டெல்லி வட்டாரத் தகவல் இது'' முதலான பூடகமான வார்த்தைகளுடன் பொய்ச் செய் திகளையும் அவதூறுகளையும் உண்மைச் செய்திகளுடன் கலந்து கடந்த 20 ஆண்டுக் கும் மேலாக வாசகர்களை திறமையாக ஏமாற்றி வருகிறது.

''தராசு'' வார இதழ் குறுகிய காலத்தி லேயே ஒரு லட்சம் பிரதிகள் விற்குமள வுக்கு சாதனை புரிந்தும் இந்த வழியில் தான். கார்ட்டமான கள்ளச் சாராய குடிகாரர் களைச் சுண்டியிழுப்பதுபோல, முற்றிலும் வதந்திகளையே பரபரப்பாக தருவதன் மூலம் வாசகர்களை மீள முடியாத போதை யில் தள்ளுகிறது ''தராசு'' மூணு சீட்டுக்கா ரனைப் போல மூலதனமே இல்லாமல் இப் படி கிசுகிசு பத்திரிகை நடத்தி வெகுசீக்கிரத் திலேயே லாபமீட்டமுடியும் என்பதைப் புரிந்து கொண்டதும் தராசு வழியில் நக்கீ ரன், கழுகு, சத்ரியன், தளபதி, உங்கள் சூரி யன், இளைய சூரியன், ஜூனியர்போஸ்ட், சாணக்யன், போலீஸ் செய்தி என கணக் கற்ற கிசுகிசு பத்திரிகைகள் இன்று புற்றீச லாய் கிளம்பிவிட்டன. கள்ளச்சாராய, கிரி மினல், ரகசிய உலகப் பேர்வழிகள் புதிய வகை முதலாளிகளாக மாறி அரசியலை யும், பொருளாதாரத்தையும் ஆட்டிப் படைப்பதைப் போல, இன்று கிசுகிசு பத்திரி கையாளர்கள் புதியவகை பத்திரிகை அதி பர்களாக வளர்ந்து விட்டார்கள்.

இப்பத்திரிகைகளில் உள்ளூர் செய்திக ளாக வருபவை மட்டும் சில நேரங்களில் உண்மைச் செய்திகளாக இருக்கின்றன. ஏனெனில் இவை பாதிக்கப்பட்ட உள்ளூர் மக்கள் அனுப்பும் செய்திகள் அல்லது உள்





படிப்பகம்

www.padippakam.com

ளூர் நிருபர் சேகரித்து அனுப்பும் செய்திகள். ஆனால் அபூர்வமாக வரும் இத்தகைய உண்மைச் செய்திகளின் ஒளிவெள்ளத்தில் வாசகர்களின் கண்களைக் குருடாக்கி தமது கிசுகிசு மோசடியைத் திறமையாக மறைத்து விடுகின்றன.

**அதேபோல ஓட்டுக்** கட்சிகளுக்கிடை**யிலான குழாயடிச் சண்டையிலும்**, ஆளும் **கட்சிக்குள்ளேயே நடக்கும்** கோஷ்டித் தகராறுகளிலும் ஒருவரையொருவர் கழுத்தை நெறித்துக் கொள்ள எதிர்த்தரப்பினரின் ஊழல் மோசடிகளை இப்பத்திரிகைகளுக்குக் கசியவிட்டு அம்பலப்படுத்திக் கொள்கின்றனர். இதன் மூலம் ஓட்டுப் பொறுக்கிகளின் ஊழல் கொள்ளைகளும் தில்லுமுல்லுகளும் மக்களுக்கு தெரிய வருகின்றன. ஆனால் இவற்றை தாம் ஏதோ சிரமப்பட்டு புலனாய்வு செய்து எழுதுவதைப் போல காட்டிக் கொள்வதோடு, இவற்றையும் பரபரப்பான கிசுகிசு செய்திகளாகவே இப்பத்திரிகைகள் வெளியிடுகின்றன.

### வாசகர்களைப் போதையூட்டி காசு பறிப்பதே லட்சியம்

அரசியல்வாதிகளின் ஊழல் கொள்ளை, அதிகாரிகளின் அடாவடித்தனம், அதிகரித்துவரும் சமூகக் கொடுமைகள் முதலானவற்றைப் பற்றி பரபரப்பாக இப்பத்திரிகைகள் அம்பலப்படுத்துவதைக் கண்டு, இவற்றுக்கு சமூக பொறுப்புணர்வும், லட்சியமும் இருப்பதாக படித்த வர்க்கத்தினர்கூட ஏமாந்து போகிறார்கள். ''ஜூனியர் விகடன்'' பத்திரிகை இளம் நிருபர்களுக்குப் பயிற்சித் திட்டம் நடத்தி, அவர்கள் மூலம் செய்தி சேகரிப்பதையும், ''தராசு'' பத்திரிகை தனது வாசகர்களைக் கொண்டு மன்றங்கள் அமைத்து சமூக சேவையில் ஈடுபடுவதையும் பார்த்து இப்பத்திரிகைகள் சமூகக் கடமையாற்றுவதாகக் கருதுகிறார்கள். குறிப்பாக ஜெயா அரசின் அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல், பல்வேறு இடர்ப்பாடுகளுடன் ''நக்கீரன்'' வார இதழ் செய்தி சேகரித்து வெளியிடுவதாக எண்ணுகிறார்கள்.

ஆனால், வதந்தி, பொய், அவதூறு நிறைந்த அற்பத்தனமான அரசியல் - சமூக - கலாச்சார விஷயங்களில் வாசகர்களின் கவனத்தை மூழ்கடிப்பது; வெறுமனே பரபரப்பு, திகிலூட்டி போதைப் பழக்கத்துக்கு அடிமைப்பட்டவனைப் போல வாசகனை ஏமாற்றி காசு பறிப்பதுதான் இவற்றின் நோக்கமாக உள்ளது. மற்றபடி, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியோ, அவற்றுக்காக மக்கள் நடத்தும் போராட்டங்கள் பற்றியோ இவற்றுக்கு துளியும், அக்கறை கிடையாது. பரபரப்பான கிரிமினல் செய்திகள் தான் இப்பத்திரிகைகளுக்கு சமூகப் பிரச்சினைகள்; ஓட்டுக் கட்சிகளுக்குள்ளே நடக்கும் கோஷ்டி மோதல்களும், பிழைப்பு வாதிகளின் சதிராட்டங்களும் தான் இவற்றின் தலையாய அரசியல் பிரச்சினைகள்!

மவுனச சாமியாரின் மன்மதலீலை - மாணவி கற்பழிப்பு பரிதாபம்!; நடிகை ராணிபத்மினி கொலையில் சிக்கிய அரசி



கதிரை. துரை

# கிசுகிசு நக்கீரனும் கிரிமினல் ஜெயாவும்

**க**டந்த டிசம்பர் 23-ம் தேதியன்று தமிழகத்தின் கிசுகிசு அரசியல் ஏடான நக்கீரன் வார இதழை ஜெயா கும்பலின் உத்திரவுப்படி போலீசார் பறிமுதல் செய்துள்ளனர். ''அன்று இரவு 10 மணியளவில் சென்னை - ராயப்பேட்டையிலுள்ள நக்கீரன் பைண்டிங் செய்யுமிடத்துக்கு 7 ஜீப்புகளில் வந்த போலீசார் சுமார் ஒரு லட்சம் பிரதிகளைப் பறிமுதல் செய்தனர்; போலீசாருடன் 5 கார்களில் வந்த அ.தி.மு.க. குண்டர்கள், பைண்டிங் ஊழியர்களைத் தாக்கி போலீசுக்கு உதவியாகச் செயல்பட்டனர்'' என்று அப்பத்திரிக்கையின் இணையாசிரியர் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

''பறிமுதல் செய்யப்பட்ட நக்கீரன் இதழில் வெளியாகியுள்ள படமும் செய்தியும் எம்.ஜி.ஆரையும் முதல்வர் ஜெயலலிதாவையும் அவதூறு செய்வதோடு, எம்.ஜி.ஆர். ரசிகர்களிடம் ஆத்திரமூட்டுவதாக அமைந்துள்ளது. எம்.ஜி.ஆரின் புதுப்பிக்கப்பட்ட சமாதி திறக்கப்படும் நேரத்தில் இப்பத்திரிகை வெளிவந்தால் மிகப் பெரிய வன்முறை நிகழும் அபாயம் உள்ளது. அதைத் தடுக்கவே நக்கீரன் பத்திரிகை பறிமுதல் செய்யப்பட்டது'' என்று போலீசார் விளக்கமளித்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட நக்கீரன் இதழின் அட்டையில் ''எம்.ஜி.ஆர். சாக 'ஜெ' நடத்திய யாகம் - முகத்திரையைக் கிழிக்கும் போட்டோ ஆதார ரிப்போர்ட்'' என்ற தலைப்புடன் இரண்டு புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. சற்றே இளைமையான தோற்றத்துடன் ஜெயா அப்படங்களில் காணப்படுகிறார். எனவே இப்புகைப்படம் சுமார் 5,6 வருடங்களுக்கு முந்தையதாகத்தான் இருக்க முடியும். ஒரு படத்தில் ஜெயலலிதா செங்கல் முன் அமர்ந்து சிமெண்ட் கலவை எடுப்பது போல் உள்ளது. மற்றொன்றில் செங்கற்கள் அருகே வெற்றிலை பாக்குடன் ஜெயா அமர்ந்திருக்கிறார். ஏதோ வீடுகட்ட பூசை போட்ட போது எடுக்கப்பட்ட பழைய புகைப்படங்களைப் போட்டு, யாகம் நடப்பது போல் பரபரப்பூட்டி அப்பட்டமான பொய்ச் செய்தியை வெளியிட்டு வாசகர்களை நக்கீரன் மோசடி செய்திருக்கிறது. அதிலும், எம்.ஜி.ஆர் நினைவு நாளன்று இப்படியொரு கட்டுரையை திட்டமிட்டே வெளியிட்டு, அதன் மூலம் விற்பனையை உயர்த்தலாம் என்கிற கீழ்த்தரமான நோக்கத்துடனேயே அவ்வாறு செய்துள்ளது.

எம்.ஜி.ஆர் மரணப் படுக்கையில் வீழ்ந்துவிட்ட போது, ஜெயா கும்பல் ஆட்சியைக் கைப்பற்ற செய்த சூழ்ச்சிகள் யாவரும் அறிந்ததுதான். ஐந்தாண்டுகளுக்கு முந்தைய ஆறிப்போன பழங்கஞ்சியான விவகாரத்தைத்தான் இப்போது நக்கீரன் பரபரப்பாக வெளியிட்டுள்ளது. ஆனால் அதைக் கூட ஆதார பூர்வமாக நிரூபிக்கும் வகையில் புகைப்படங்களோ, செய்தியோ நக்கீரனில் இல்லை.

இருப்பினும் இத்தகைய அற்பத்தனமான கிசுகிசு செய்தியைக் கூட தாங்கிக் கொள்ள முடியாமல் பாசிச ஜெயா கும்பல் வெறிபிடித்து ஆட்டம் போட்டுள்ளது. எதிர்தரப்பு பத்திரிகைகள் மீதும் குறிப்பாக, நக்கீரன் வார இதழ் மீதும் ஜெயா கும்பல் அடுத்தடுத்து தாக்குதல்களை நடத்தி வருகிறது. அண்மையில் நக்கீரனின் செய்தியாளர் கதிரை துரை என்பவர் ஆளும் கட்சி குண்டர்களால் மிருகத்தனமாக தாக்கப்பட்டு மருத்துவமனையில் கால் முறிந்து கிடக்கிறார்.

இதன் காரணமாக, ஜெயா கும்பலை எதிர்த்து நக்கீரன் தொடர்ந்து போராடுவதாக அதன் வாசகர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தனது கிசுகிசு - மோசடிகளால் அதற்கான அடிப்படையையும் அருகதையையும் நக்கீரன் ஏற்கனவே இழந்துவிட்டது.

www.padippakam.com




யல் புள்ளிகள்; இளையராஜாவை அறைந்த இளம் இயக்குனர் - இப்படி கவர்ச்சியும் பரபரப்பும் நிறைந்த கிரிமினல் செய்திகள் தான் இப்பத்திரிகைகளின் சமூகப் பிரச்சினைகளாக உள்ளன.

ஆட்சியைக் காப்பாற்ற மத்திய மந்திரிக்கு ஜெயா வைத்த 'குட்டி' விருந்து; தி.மு.கவை விட்டு வெளியேறுகிறார் வை.கோ; காங்கிரசுக்கு ஓட்டம் பிடிக்கும் 5 அ.தி.மு.க. எம்.பிக்கள்; அ.தி.மு.க. அதிருப்தியாளர்களின் புதியகட்சி - 50 பேர் கொண்ட பட்டியல் அம்பலம்; ஜெயலலிதா தற்கொலை முயற்சி; அ.தி.மு.க. — காங்கிரஸ் இணைப்பு - அம்பலமாகும் 50 கோடி பேரம்; அ.தி.மு.க. இளைஞரணி செயலாளராகிறார் டி.ராஜேந்தர்; இப்படி திண்ணையில், பேருந்தில், ரயிலில், அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு வெறுமனே வம்பளக்கும் அளவு அற்பத்தனமான விஷயங்களே இவற்றின் பரபரப்பான அரசியல் செய்திகள்.

இளவரசி டயானா - சார்லஸ் விவாகரத்து, இளவரசி சாராவின் கள்ளக் காதல்; காதலுனுடன் நிர்வாண நீச்சல், மடோனாவில் செக்ஸ் புரட்சி; குழந்தைகளைக் கொன்ற ருஷ்ய சைகோ கொலைகாரன்; இப்படி பரபரப்பான, வக்கிரமான விஷயங்கள்தான் இவற்றின் வெளிநாட்டுச் செய்திகள்.

இப்படி வதந்தி, பரபரப்பு, ஆபாசம், வக்கிரம் நிறைந்த கிரிமினல் செய்திகள் தான் இன்றைய அரசியல் நடப்பு என்றும் அதையே நாடிப் போகும்படி வாசகர்களின் மூளையை மழுங்கடிப்பதும்தான் இம்மஞ்சள் பத்திரிகைகளின் வேலையாக உள்ளது பெருகிவரும் பொறுக்கி கிரிமினல் அரசியலையும், அரசியல் சீரழிவையும் நியாயப்படுத்துவது, நாட்டையும் மக்களையும் பாதிக்கும் மையமான அரசியல் பிரச்சினைகளிலிருந்து மக்களை திசை திருப்புவது, அந்தத் திசையில் வாசர்களை இழுத்துச் செல்வது தான் இப்பத்திரிகைகளின் நோக்கமாக உள்ளது.

அமைச்சர் எஸ்.டி.சோமசுந்தரம் ஜெயாவின் போயஸ் தோட்ட வீட்டுக்குச் சென்றபோது, அவர் மீது ஜெயாவின் நாய் பாய்ந்து விட்டதாம்! இதை தமிழகத்தின் தலையாய அரசியல் பிரச்சினையாக, ''அமைச்சரை அரைநிர்வாணமாக்கிய போயஸ் தோட்டத்து நாய்!'' என்று பரபரப்பூட்டி அட்டைப்படக் கட்டுரையாக ''நக்கீரன்'' வெளியிட்டது.

பதவிக்கு வருவதற்கு முன்பு ஜெயலலிதாவுக்கும் ராஜீவுக்கும், ரகசிய உறவு இருந்ததாம். இந்த விவகாரம் சோனியாவுக்குத் தெரிந்ததும் ஆத்திரமடைந்தாராம். இப்போது, அ.தி.மு.க.வின் வெற்றிக்கு ராஜீவ் சாவினால் ஏற்பட்ட அனுதாப அலை காரணமல்ல என்று ஜெயா பேசத் தொடங்கியதும். 'உன்னை ஒழிக்காமல் விடமாட்டேன்' என்று சோனியா சபதமேற்றுள்ளாராம்! - இது ''தராசு'' இதழில் வெளியான பரபரப்பான அரசியல் கட்டுரை.

அறிவுத் தாகம் கொண்ட இளைஞர்களின் பத்திரிகை என்று சுய விளம்பரம் செய்து கொள்ளும் ''ஜுனியர் போஸ்ட்'' எனும் வார இதழ், தனது விற்பனையை உயர்த்த கடைசி பக்கத்தில் அரை நிர்வாணப் படங்களை வண்ணத்தில் வெளியிட்டு வாலிப - வயோதிகர்களைச் சுண்டியிழுத்தது. இதன் மூலம் விற்பனையை சற்றே நிலைப்படுத்திக் கொண்டதும். பத்தினி வேடம் போட ஆரம்பித்தது. காட்டமான கள்ளச் சாராயத்தை திருட்டுத்தனமாக விற்பதற்குப் பதிலாக; அரசாங்க அனுமதியுடன் ஜெயா சாராயத்தை விற்பதைப் போல, அப்பட்டமான மஞ்சள் பத்திரிகையின் செய்திகளையே ஜுனியர் விகடனும், ஜுனியர் போஸ்ட்டும் செய்கின்றன. ஜுனியர் விகடனின் ''ராத்திரி ரவுண்ட் அப்'' போகும் 'ஆந்தை'யின் கண்களுக்கு எங்கே விபச்சாரம் நடக்கிறது. எங்கே போதை மருந்து கிடைக்கும் என்பவைதான் தெரியும். வக்கிரமான உணர்வுகளைத் தூண்டி வாசகர்களைக் கவர்ந்திழுத்து காசு பறிப்பதுதான் அதன் நோக்கமாக உள்ளது. அதன் 'கழுகு' தரும் அரசியல் கிசுகிசு செய்திகள் அனைத்தும் போலீசு தரும் அறிக்கைகள். அவற்றுக்கு கண் - காது மூக்கு வைத்து பிரமிப்பூட்டுவதே அதன் பணியாக உள்ளது.

அறிவுத் தாகம் கொண்ட இளைஞர்களின் பத்திரிகையான 'ஜுனியர் போஸ்ட்' இதழில், ''என்று தணியும் இந்த குஷ்பு மோகம்? கனவுக்கன்னிகள் - ஓர் ஆராய்ச்சி; ''கவர்ச்சிக் கன்னிகளின் கதை'' என்று குஷ்பு படத்துடன் சிறப்புக் கட்டுரை வெளியிட்டது. கூடவே, கனவுக் கன்னிகளால் மனநோய் ஏற்படும் என்று ஒரு மருத்துவரின் பேட்டியையும் பெட்டிச் செய்தியாக வெளியிட்டது. வேடிக்கை என்னவென்றால் இந்தக் கட்டுரையை எழுதிய ஞாநி என்பவர், தீபாவளியன்று சென்னை தொலைக்காட்சி நிலையம் ஒளிபரப்பிய குஷ்பு சிறப்பு நிகழ்ச்சியில் பேட்டி காண்பவராகச் செயல்பட்டார். இப்பத்திரிகையின் லட்சிய நாடகத்துக்கு இது ஒன்றே போதுமானது.

அடுத்தடுத்து ஜெயா அரசின் தாக்குதலுக்கு ஆளாகி வரும் ''நக்கீரன்'' இதழை. லட்சிய நோக்கம் கொண்ட எதிர்த்தரப்பு அரசியல் பத்திரிகையாக பலர் கருதுகின்றனர். இதே ''நக்கீரன்'' ஈராண்டுகளுக்கு முன்பு ''உதயம்'' என்றொரு 'குடும்ப' பத்திரிகை நடத்தியது. சமந்தா ஃபாக்ஸ்-ன் கவர்ச்சிப் படங்கள். நடிகை சித்தாராவின் தற்கொலை முயற்சி பற்றிய கிசுகிசு. உங்கள் ராசி பலன் முதலான மஞ்சள் பத்திரிகைக்கே உரிய லட்சியங்களுடன் வெளிவந்த இப்பத்திரிகை, எம்.ஜி.ஆர். படங்களைக் கொண்ட காலண்டரையும் வெளியிட்டது. விற்பனை படுத்துவிட்டதால் நக்கீரன் குடும்பம் உதயத்தை நிறுத்தி விட்டது.

அன்று எம்.ஜி.ஆர். படக்காலண்டர் வெளியிட்ட நக்கீரன் குடும்பம், இன்று ''ரஜினி ரசிகன்'' எனும் சினிமா பத்திரிகை நடத்தி ரஜினி படக் காலண்டரை வெளியிடுகிறது. அன்று எம்.ஜி.ஆர். ரசிகர்களிடம் காசு பறிக்க எம்.ஜி.ஆர். காலண்டர்; இன்று ரஜினி ரசிகர்களை சினிமா போதையில் ஆழ்த்த ஒரு பத்திரிகை; அதனுள் சூப்பர் ஸ்டாரின் இதுவரை வெளிவராத ப்ளோ - அப் படங்கள்! நல்ல வியாபாரம்தான்!

29.10.92 தேதியிட்ட ''நக்கீரன்'' இதழில் 'தீ பரவட்டும்' என்ற தலையங்கம். அதில் தீபாவளிப் பண்டிகையைப் பற்றி வடக்கேயிருந்து வந்த திருவிழா என்று விமர்சித்து, தமிழனுக்கு எதிரான அந்நியப்பட்ட விழா என்று பாரதிதாசன் கவிதையுடன் அம்பலப்படுத்துகிறது. அதே இதழின் பின் அட்டையில், ''நக்கீரன்'' குடும்பத்திலிருந்து வெளிவரும் ''ரஜினி ரசிகன்'' எனும் சினிமா பத்திரிகையின் தீபாவளிமலர் விளம்பரம். சரவெடிகளுடன் ரஜினி நிற்பதுபோல் ''உல்டா'' செய்து, ரஜினியின் தீபாவளி ஸ்பெஷல் போஸ், HAPPY DEEPAVALI என்று வெளியிட்டுள்ளது. தமிழின உணர்வு கொண்ட வாசகர்களைத் திருப்திபடுத்தி காசு பறிக்க நக்கீரனில் தீபாவளி எதிர்ப்பு தலையங்கம்! தமிழின இளைஞர்களை சினிமா போதையிலும், ரஜினி கவர்ச்சியிலும் தள்ளி காசு பிடுங்க தீபாவளி மலர்! இது அப்பட்டமான பித்தலாட்டமின்றி வேறென்ன?

படிப்பகம்

www.padippakam.com

### கிசுகிசு பத்திரிகைகளின் தமிழ்க் கொலை

அரசியல், சினிமாவுக்கு அடுத்தபடியாக இன்று இந்தப் பத்திரிகைகள்தான் சீரழிவை விதைப்பதில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளன. அரசியல், கலாச்சார சீரழிவுகளை பரபரப்பும் கவர்ச்சியும் கொண்ட செய்திகளாக மாற்றி வாசகர்களை மூளைச் சலவை செய்வதோடு அவை நின்று விடுவதில்லை. பொறுக்கி கலாச்சாரத்தின் வெளிப்பாடாக அவை புதிய வகை மொழியையும் நடையையும் உருவாக்கி, தமிழையே கொலை செய்யக் கிளம்பியுள்ளன.

எலெக்ட்ரிக் ட்ரெயின், பாப்கார்ன், ஸ்பீடு போஸ்ட், டீ டைம், டெலக்ஸ் பை அலெக்ஸ், நாக் அவுட், ஜூ.வி.ஷோ. இவை சினிமா, அரசியல் துணுக்குச் செய்திகளுக்கு இப்பத்திரிகைகள் கொடுத்துள்ள தலைப்புகள். சில நேரங்களில் சினிமாப் பாடல்களின் முதல் வரிகளே கட்டுரைகளின் தலைப்புகளாகிவிடும். அலை பாயுதே கண்ணா, ஒரு தாய் வயிற்றில் பிறந்த உடன்பிறப்பில், வாழவைக்கும் காதலுக்கும் ஜே!, நீ உன்னை அறிந்தால், சின்னச் சின்ன ஆசை, போவோமா ஊர்கோலம் - இப்படி விதவிதமான தலைப்புகள். ''தராசு'' வார இதழ் இன்னும் ஒருபடி மேலே போய் இத்தகைய தலைப்புகளுக்கு எழுத்தாலேயே பின்னணி இசை சேர்த்து பரபரப்பூட்டுகிறது. ''ஜெயாவுக்கு டிசம்பரில் ஜன்னி'' - பி.ஜே.பி. உறவு பப்பாய்ங்; ''ஜெயாவின் ஊட்டி எஸ்டேட் ஊழல்ஸ் - முழுத்தகவல்கள் ஜலக்.. ஜலக்!'' ''மந்திரி அழகு திருநாவுக்கரசு ஐந்து கோடி ஏவ்வ்!'' - இவை ''தராசு'' வார இதழின் அண்மைக் கால அட்டைப்பட தலைப்புகள்.

கிசுகிசு அரசியல் கட்டுரைகளை மேலும் பரபரப்பூட்டுவதற்காக உணர்ச்சி பொங்க இப்பத்திரிகைகள் தரும் துணைத் தலைப்புகள் அலாதியானது. மந்திரிகள், அதிகாரிகளின் காமக் களிவெறியாட்டத்தைப் பற்றிய கிசுகிசு கட்டுரைக்கு - ஒரு கிளுகிளு ரிப்போர்ட்; கர்நாடகத்திலிருந்து தமிழர்கள் அகதிகளாக ஓடிவந்தபோது - ஒரு அவல ரிப்போர்ட்; சாதிக் கலவரம் பற்றி செய்தியானால் - ஒரு ஷாக் ரிப்போர்ட்; இப்படி பதட்ட ரிப்போர்ட், ஸ்பாட் ரிப்போர்ட், மிஸ்ஸிங் ரிப்போர்ட், சென்சேஷனல் ரிப்போர்ட், அபாய ரிப்போர்ட், பிளாஷ்பேக் ரிப்போர்ட் என்று ஆங்கிலத்திலான கணக்கற்ற தலைப்புகள.

இதேபோல் விறுவிறுப்பும் வேகமும் கூட்டுதற்காக, டெல்லி டெர்ரர்; த்ரில் பேட்டி - திடுக் ரகசியங்கள்; தி கிரேட் என்கொயரி; அதிரடி ஸ்டேட்மென்ஸ்; அல்ட்ரா அலசல்; சூப்பர் எக்ஸ்போஸ்; சீக்ரெட் இன்வெஸ்டிகேஷன் - என்று ஆங்கிலத்தில் தலைப்புகள்.

தலைப்புகள் மட்டுமல்ல; இவற்றில் எழுதப்படும் கட்டுரைகளே பாதிக்குமேல் அரைவேக்காடு ஆங்கில வார்த்தைகள் கலந்தே எழுதப்படுகின்றன. இப்படி எழுதுவதுதான் மேதாவித்தனமானது, நாகரீகமானது என்று அவை கருதுவதோடு, இப்படி ஆங்கிலம் கலந்து எழுதினால் படித்த முட்டாள்களையும் ஏய்க்க முடியும் என்ற நம்பிக்கையோடு எழுதுகின்றன. சினிமா கிசுகிசு செய்திகளை ''லைட்ஸ் ஆன்'' என்று தலைப்பிட்டு, ஒவ்வொரு செய்திக்கும் முத்தாய்ப்பாக நேரடியாக ஆங்கிலத்தில் எழுதுவதை ''குமுதம்'' எனும் கழிசடைப் பத்திரிகை துவக்கி வைத்தது. அதே பாணியில், ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் கட்டுரையானூடே கலந்து எழுதுவதை கிசுகிசு அரசியல் பத்திரிகைகள் மரபாக்கிக் கொண்டுள்ளன.

> அரசியல்வாதியின், அதிகாரியின் ஊழல், அடாவடித்தனத்தையும் அதிகரித்துவரும் சமூகக் கொடுமைகளையும் பற்றி பரபரப்பாக கிசுகிசு பத்திரிக்கைகள் அம்பலப்படுத்துவதைக் கண்டு இவற்றுக்கு சமூக பொறுப்புணர்வும் லட்சியமும் இருப்பதாக படித்த வர்க்கத்தினர்கூட ஏமாந்து போகிறார்கள்.

ஒரு கத்தை ''தராசு'' பத்திரிகையில் உருவி எடுத்த ஒரு இதழில் பின்வருமாறு எழுதியுள்ளனர். ''சிக்கிக் கொண்டார் ஜெயலலிதா! அ.தி.மு.க. டம்டமார்! அசெம்பிளி அவுட்!'' என்பது அட்டைப்படக் கட்டுரையின் தலைப்பு. ''ஓல்ட் டெஸ்டமெண்ட்; நியூடெஸ்டமெண்ட்'' என்பவை அக்கட்டுரையினூடே வரும் உப தலைப்புகள். '' மத்திய உளவு நிறுவனம் ஜெயலலிதாவின் சுருட்டல் மகாத்மியத்தை சென்டிமீட்டர் பை சென்டி மீட்டராக ஆராய்ந்து; ... இந்த சர்ந்தர்ப்பத்தில்தான் பல கோடி ரூபாய்ககளை 'லபக்' செய்துவிட்டு, 'ஸ்பிக்' பங்குகளை மாற்றித்தர ஜெயலலிதா வற்புறுத்த ... ஜெயா மாமியை 'ரூட்-அவுட்' செய்ய தமிழகம் வந்தார், சாமி ... ஜெயலலிதா தனிப்பட்ட முறையில் பிரமரைச் சந்தித்து உரையாடப் பலமுறை அப்பாயின்மெண்ட் கேட்டது உண்மை... பிரதமர் மிகவும் 'கூலாக' நடந்து கொண்டார்... தமிழக முதல்வர் மூடு அவுட்!... மெஜாரிட்டி இந்து ஒப்பீனியனை மதித்து நட! - என்ற குண்டைத் தூக்கிப் போட்டார். ...ராவ்ஜியை 'அலர்ட்' செய்துவிட்டது ... ராவ் - சாமி காண்பினேஷனின் இந்தத் 'தடாலடி' திட்டத்தை ... மந்திரிப் பிரதானிகளிடம் 'சிக்னல்' கொடுத்து விட்டார்... இது சுவாமியின் ஐடியா!'' இப்படி மூன்று பக்க கட்டுரை முழுக்கவும் வரிக்கு வரி ஆங்கில வார்த்தைகள்.

> சென்னை நகருக்கே உரித்தான பொறுக்கிகளின் ஆபாச, வக்கிர வார்த்தைகளும் கலந்து கிசுகிசு கட்டுரையை மெருகூட்டுவதென்பது இப்பத்திரிகைகளின் எழுத்து நடையாக உள்ளது.

இவை மட்டும் போதாதென்று, சென்னை நகருக்கே உரித்தான பொறுக்கிகளின் ஆபாச, வக்கிர வார்த்தைகளும் கலந்து கிசுகிசு கட்டுரையை மெருகூட்டுவதென்பது இப்பத்திரிகைகளின் எழுத்து நடையாக உள்ளது. பலான, கில்லாடி, உதார், தூள் பரத்தினார், ஜகா வாங்கினார், டுபாங்கூர், மால், குடாக்கு - என அருஞ்சொற்களுடன் வெளிவராத கிசுகிசு பத்திரிகையே இல்லை.

### சீரழிவைத் தாங்கி நிற்கும் தூண்கள்

நீதித்துறை, நாடாளுமன்ற - சட்டமன்ற அமைப்புகள், அதிகார வர்க்க நிர்வாக எந்திரம், பத்திரிகைகள் ஆகிய நான்கும் ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள் என்று முதலாளித்துவ வர்க்கத்தினரால் சித்தரிக்கப்படுகிறது. அவை ஒன்றையொன்று சோதித்தறிந்து தவறு நேரா வண்ணம் ஜனநாயகத்தை வழி நடத்திச் செல்லும் என்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு துறையும் தமது சுயநலத்தில் மூழ்கி சீரழிந்து கிடப்பதோடு, முதலாளிகளால் நடத்தப்படும் பத்திரிகைகள் சமூகத்தை வழிநடத்துவதற்குப் பதிலாக, இன்னுமொரு லாப மீட்டக் கூடிய தொழில் துறையாகவே இருந்து வருகிறது.

தொழிலாளர்களைச் சுரண்டி, உற்பத்திப்பொருட்களை வாங்குவோரை மோசடி செய்து முதலாளிகள் கொள்ளை லாபம் அடிப்பதைப் போலவே, பத்திரிகை ஊழியர்களைச் சுரண்டி, வாசகர்களை ஏமாற்றி இந்த கிசுகிசு மஞ்சள் பத்திரிகைகள் கொள்ளையடிக்கின்றன. அதிலும் மோசமாக, விபச்சாரத்தனம் செய்து வாசகர்களைச் சீரழித்து, கழிசடை விஷயங்களால் பக்கங்களை நிரப்புகின்றன.

பெருகிவரும் அரசியல் - சமூக - கலாச்சார சீரழிவுகளின் இன்னுமொரு வெளிப்பாடுதான் இத்தகைய கிசுகிசு - மஞ்சள் பத்திரிகைகள். எனவே அரசியல் - சமூக சீரழிவுகளுக்கு எதிராகவும், இத்தகைய கிசுகிசு பத்திரிகைகளின் மோசடிக்கு எதிராகவும் உழைக்கும் மக்கள் தொடுக்கும் போராட்டங்களால் மட்டுமே இவற்றுக்குப் பதிலடி கொடுக்க முடியும். சீரழிந்துவிட்ட நாடாளுமன்ற பொறுக்கி அரசியலுக்கு எதிராக புரட்சிகர அரசியல் பத்திரிகைகளும், சமுதாய சீரழிவுக்கு எதிரான மக்கள் கலாச்சார இயக்கங்களும் மட்டுமே இவற்றுக்கு மாற்றாக இருக்கமுடியும்.

● மனோகரன்

www.padippakam.com




● *இந்தியாவில் தேசிய இன விடுதலை கோருபவர்கள், ஜனநாயகப் புரட்சியோடு இணைந்த விடுதலையை முன்வைப்பவர்களின் கோட்பாட்டை ஏற்க முடியுமா? முடியாதா? முடியாது எனில் விளக்கமளிக்கவும்.*

—ஜீவா, சேலம் - 8.

☆ ''தேசிய இனவிடுதலையைக் கோருபவர்கள்'' என்கிறபோது, அதை மட்டுமே தனது முழுத் திட்டமாக வைத்துள்ள தேசிய இன அமைப்புகளையும் ''ஜனநாயகப் புரட்சியோடு இணைந்த விடுதலையை முன்வைப்பவர்கள்'' என்கிறபோது, தேசிய சுயநிர்ணய உரிமையை புதிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு பகுதியாக கொண்டுள்ள மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்களையும் வாசகர் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறோம். இவ்விரு பிரிவினருடைய கோட்பாடும் அடிப்படையில் வேறுவேறானவை. ஆகவே ஒரு பிரிவினரின் கோட்பாடை மற்றவர் ஏற்கமுடியாது. ஆனால் தேசிய சுயநிர்ணய உரிமையை மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் ஏற்கிறார்கள், அதற்காகப் போராடுகிறார்கள் என்கிற அடிப்படையில் இவர்களுடன் தேசிய இன அமைப்புகள் கூட்டுச்சேர்ந்து தேசிய இன ஒடுக்கு முறையாளர்களான ஆளும் வர்க்கத்தை எதிர்த்துப் போராட முடியும். அதேபோல தேசிய இன விடுதலை என்பது ஒரு ஜனநாயகக் கோரிக்கையாக இருப்பதால் அதற்காக உண்மையில் போராடும் அமைப்புகளுடன் கூட்டுச் சேரவும் முடியும். ஆனால், இவ்விரு பிரிவுகளிலுமே போலிகளும், பிழைப்பு வாதிகளுமாக உள்ள சில குழுக்கள் இருப்பதையும் அத்தகையவற்றுடன் கூட்டுச் சேர்ந்து போராடுவது சரியல்ல என்பதையும் உணர வேண்டும்.

● *பெரியாரைப் பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன?*

-நடேசன், திருச்சி.

● *பெரியார் படத்தைக் கொளுத்துவதாக இந்து முன்னணித் தலைவர் ராம. கோபாலன் சொன்னதைக் கண்டித்து புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் சுவரெழுத்தை மதுரையில் கண்டேன். அதில் 'பெரியார் கொள்கை காப்போம்' என்ற முழக்கமும் இருந்தது. நீங்கள் மார்க்சிய - லெனினியவாதிகள் தானே? தங்களுக்கு பெரியார் கொள்கையைக் காக்கவேண்டிய அவசியம் என்ன? இது சீர்திருத்தவாதத்தை தூக்கிப் பிடிப்பதாகாதா?*

- சீத்தாராமன், சென்னை - 44.

☆ இந்த நூற்றாண்டின், தமிழகத்தின் தலைசிறந்த சீர்திருத்தவாதி பெரியார் ஈ.வே.ரா. சுய சிந்தனையாளரும், அறிஞரும் ஆவார். பார்ப்பன சனாதன வருணாசிரம, சாதிய அமைப்புக்கும், பெண்ணடிமைத்தனம், தீண்டாமை ஆகிய கொடுமைகளுக்கும் எதிராக அவரது பகுத்தறிவு, சுயமரியாதை இயக்கங்கள் மகத்தானவை; சமூகப் பண்பாட்டுத் துறைகளில் அவரது புரட்சிகரமான பங்களிப்புகளை ஏற்கிறோம். அதே சமயம் நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய எதிர்ப்பில் அவரது தவறான அரசியல், பொருளாதார நிலைப்பாடுகளை விமர்சித்து நிராகரிக்கிறோம். ஆனால் இன்று பெரியாரின் வாரிசுகள் என உரிமை பாராட்டுவோர் அனைவரும் கூறிக்கொள்வது போல இந்த மண்ணுக்கேற்ற மார்க்சியம், உழைக்கும் மக்களின் சித்தாந்தம் தான் ''பெரியாரியம்'' என்பதையும், பெரியார் ஈ.வெ.ரா. மார்க்சை போன்ற ஒரு புரட்சிகர சித்தாந்தவாதி என்பதையும் ஏற்கமுடியாது. ''பெரியாரியம்'' என்பது முதலாளித்துவ சித்தாந்தத்தின் புரட்சிகரமான பிரிவைச் சேர்ந்ததாகவே கருத முடியும்.

அரசியல் புரட்சியின்றியே, இடஒதுக்கீடு போன்ற சீர்திருத்தங்கள் மூலமாகவே சமூக, பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வந்துவிட முடியும்; சமூகப் புரட்சி அரசியல் புரட்சிக்கு முன்நிபந்தனை என்பது தான் பெரியாரியத்தின் சித்தாந்தம். இதை நாம் ஏற்கவில்லை. பெரியாரியத்தின் இந்தச் சீர்த்திருத்தவாதக் கண்ணோட்டத்துக்கு மாறாக, நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய எதிர்ப்பு புதிய ஜனநாயகப் புரட்சியை நமது திட்டமாக நாம் கொண்டிருக்கிறோம். நாட்டுக்கும் மக்களுக்கும் பேராபத்தாக வளர்ந்து வரும் இந்து மதவெறி பாசிசத்துக்கு எதிராக பரந்துபட்ட மக்களை அணி திரட்டுவது இந்தப் புதிய ஜனநாயகப் புரட்சியின் இன்றைய செயல்தந்திர அரசியல் பணியாக உள்ளது. நாடு முழுவதும் மதவெறிப் படுகொலைகளை நடத்தி அரசியல் ஆதாயம் தேடும் இந்து மதவெறி சக்திகள் தமிழ்நாட்டில் பெரும் சக்தியாக வளரமுடியாமல் இருப்பதற்குப் பெரியார் ஈ.வெ.ரா நடத்திய பகுத்தறிவு, சுயமரியாதை இயக்கங்கள் ஏற்படுத்தியிருக்கும் சமூக, பண்பாட்டு விழிப்புணர்வுதான் காரணம். ஆகவேதான் அதைக் குறிவைத்துத் தாக்குவதன் மூலம் தமிழ்நாட்டில் வேரூன்றுவதற்கு இந்து மதவெறி பாசிச சக்திகள் முயலுகின்றன. இதை முறியடிப்பதற்காக ''பெரியாரின் கொள்கை காப்போம்'' என்று முழங்குவது அவசியமாக உள்ளது. அதாவது நமக்கு உடன்பாடான பெரியாரின் கொள்கைகளை உயர்த்திப் பிடித்து இந்து மதவெறி பாசிச சக்திகளை முறியடிக்க முனைகிறோம்; ஆகவே இது சீர்திருத்தவாதமோ, மார்க்சிய - லெனினிய அணுகுமுறைக்கு மாறானதோ அல்ல.

> ''ஒருபுறம் நம்மைப் பார்ப்பனத் தலைமை என்று அவதூறு செய்யும் அதே போலிகள்தான் மறுபுறம் பெரியாரை, தி.க.வை வால்பிடித்துப் போவதாகவும் நம்மை அவதூறு செய்கிறார்கள்.''

● *ம.க.இ.க. வினர் ராமன் படத்தை எரிக்கிறார்களே, இதுசரியா இவ்வாறு செய்வது வர்க்க நிலைப்பாட்டை விட்டுப் பெரியாரின் நாத்திகவாதத்தின் பின்னால் ஓடுவதாகாதா? பார்ப்பன ஆதிக்கம் பார்ப்பன ஆதிக்கம் என்று நீங்கள் எழுதுகிறீர்கள்; இது சாதியக் குறுகிய பார்வை அல்லவா? அல்லாவையோ, கிருஸ்துவையோ நீங்கள் எரிக்கவில்லை; முல்லாக்களின், பாதிரிகளின் ஆதிக்கத்தைப் பற்றி நீங்கள் வாயைத் திறப்பதில்லையே, ஏன்?*

-நடேசன், திருச்சி

☆ ராமன் படத்தைக் கொளுத்துவது சரிதான். இது வர்க்க நிலைப்பாட்டை விட்டுப் பெரியாரின் நாத்திகவாதத்தின் பின் ஓடுவது அல்ல. ''இந்துமதம்'' என்பது இசுலாம், கிறித்துவம், பௌத்தப் போன்ற மதம் அல்ல. அந்த மதங்கள் ''ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிப்பது'' என்கிற அம்சத்தை முன்னிறுத்தி அவர்களின் எதிர்ப்புக் குரலைப் பிரதிபலிப்பதாகத் தோன்றின. அவை அனைத்துப் காலப் போக்கில் நிறுவனமயமாக்கப்பட்டு ஒடுக்கும் வர்க்கங்களின் கருவியாக மாற்றப்பட்டன. இருந்தபோதும் அம்மதங்களைப் பின்பற்றும் மக்களின் ஆன்மீக விடுதலைக்கானவையாக அவர்கள் இன்னமும் நம்பும்படி செய்கின்றன. அதற்கு ஆதாரமாக, அம்மதங்களின் நிறுவனர்களான கிறித்துவும், நபியும், புத்தரும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக நிகழ்த்திய அற்புதங்கள், சாகசங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்கள், கலகங்கள், அவற்றின் வெற்றிக் கதைகள் பிரச்சாரம் செய்யப்படுகின்றன.

ஆனால் ''இந்து மதம்'' என்பது ஒரு மதத்துக்குரிய தன்மைகளைக் கொண்டதல்ல. அதற்கு ஒரு மதம் என்கிற தகுதியே காலனிவாதிகளால் ஏற்படுத்தப்பட்டது தான். உண்மையில் ''இந்துமதம்'' என்றழைக்கப்படுவது பார்ப்

படிப்பகம்

www.padippakam.com

ணீய சனாதன தருமம்தான். பொதுவில் சமுதாயத்தையே வெவ்வேறு வருண - சாதி அடுக்குகளாகப் பிரித்து ஆதிக்கம் செலுத்துவதற்கான சூழ்ச்சி நிறைந்ததுதான் இந்த வருணாசிரம, சனாதன தர்மம். சூத்திரன், பஞ்சமன், சண்டாளன் என்று உழைக்கும் மக்களை இழிநிலையில் வைத்து, அவர்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு, மொழி, மத உரிமையை மறுத்து அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதற்காகவே தோன்றியதுதான் வருணாசிரம - சாதி அடிப்படையிலான சனாதன தருமம். ''இந்து மதாச்சாரியார்''களே இதை ஒப்புக்கொள்வதோடு, ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிகளினாலும், பூலே, பெரியார், அம்பேத்கார் போன்றவர்களின் சீர்த்திருத்த இயக்கங்களாலும், காலப்போக்கில் இந்த வருணாசிரம - சாதிய முறையில் ஏற்பட்டுள்ள சில மாற்றங்களைக் கூட தடுத்து, ஒழித்துவிட்டுப் பழைய சனாதன தருமமே நிலை நாட்டப்பட வேண்டும் என்று கூறுகிறார்கள். மற்ற மதங்களைப் போலன்றி ''இந்துமதக்'' கடவுளர்கள், அவதாரங்கள் எல்லாம் இந்த நாட்டின் பூர்வகுடிகளான திராவிடர்களை அரக்கர்கள், அசுரர்கள் என இழிவுபடுத்தி ஆரியர்கள் ஒடுக்கியதையும், வருனாசிரம - சாதிய முறையைக் காப்பதற்காக நிகழ்த்திய வீரதீர சாகசங்களையும், அவர்களின் வெற்றிக் கதைகளையுமே ''இந்துமத''த்தினர் பிரச்சாரமாகவும் வழிபாட்டுக்குரியதாகவும் செய்கின்றனர். ராமன் இத்தகையதொரு அவதாரம்தான்!

நாம் மேற்கொண்டுள்ள புதிய ஜனநாயகப் புரட்சியின் மிக முக்கிய அங்கமாகிய சமூக மாற்றம் என்பது இந்த வருணாசிரம - சாதிய முறையைத் தகர்ப்பது என்பது பார்ப்பணீய சனாதன தருமத்தை முறியடிக்காமல் இயலாது. அதுமட்டுமல்ல. இன்று நாட்டுக்கும் மக்களுக்கும் பேராபத்தாக சூழ்ந்து வரும் இந்து மதவெறி பாசிசத்தின், இந்து ராஷ்டிரத்தின் சாராம்சமே பார்ப்பனீய சனாதன தருமமும், வருணாசிரம - சாதிய மீட்புவாத்மும் தான்! இதை அவர்கள் பகிரங்கமாகக் கூறி வருகின்றனர். இட்லரின் நாஜி சின்னமாக ஆரிய வழிபாட்டுச் சின்னம் ''ஸ்வஸ் திக்'' அமைந்ததைப்போல இந்து ராஷ்டிரத்தின் சின்னமாக ராமனை வைத்துக் கொண்டுள்ளனர். ராமனைக் கொளுத்துவதன் மூலம் இந்து ராஷ்டிரம் - சனாதன தருமம், அதன் வருணாசிரம சாதியம், இந்து மதவெறி பாசிசம் அனைத்துக்கும் எதிரான நமது எதிர்ப்பைக் குறிக்கிறோம். இப்படிப்பட்ட அவசியம் எதுவும் இல்லாதபோது உருவமில்லாதவர் என்று கூறப்படும் அல்லாவையும் கிறித்துவையும் எரிக்க வேண்டியதில்லை.

முல்லாக்களின், பாதிரிகளின் ஆதிக்கத்தைப் பற்றி நாம் வாய் திறப்பதில்லை என்பதும் தவறானது. நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக அமைப்பு முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் அவர்கள் இல்லை. மற்றபடி அவர்களின் பழைமை வாதங்களையும், தவறுகளையும் குறிப்பிட்ட பிரச்சினைகளை ஒட்டிச் சாடி வந்திருக்கிறோம். ''ஷாரியத்'' - இஸ்லாமிய மணமுறைச் சட்டம், சல்மான் ருஸ்டி நூலுக்குத் தடை, திருவனந்தபுரம் ஜமாத் அட்டூழியம் ஆகியவற்றை நாம் எதிர்க்கவில்லையா? கல்வி நிறுவனங்களில் பாதிரியார்களின் அட்டூழியங்கள், வக்கிரங்களையும், அவர்களது ஏகாதிபத்திய ஊழியங்களையும் நாம் அம்பலப்படுத்தவில்லையா? அதே சமயம் பார்ப்பன ஆதிக்கம் என்கிற வரையறுப்பு வர்க்க கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்டதல்ல. எல்லா சமயங்களிலும், எல்லா நாட்டிலும் ஆளும் வர்க்கங்களின் ஒன்றுபட்ட - கூட்டு அதிகாரம், ஆதிக்கம்தான் இருக்கும் என்பது வறட்டுத்தனமான அணுகுமுறை. ஆளும் வர்க்கங்களுக்குள்ளாகவே ஒரு பிரிவினரின் அதிகாரமும் ஆதிக்கமும் மட்டும் நிலவக்கூடும். அவ்வாறு இருக்கும் அந்த ஒரு பிரிவினரைத் தனிமைப்படுத்திக் குறிவைத்துத் தாக்கும் செயல் தந்திரம் அவசியமாகும். அப்படிப்பட்ட பார்ப்பனக் கும்பலின் ஆதிக்கம் இங்கே நிலவுகிறது. மத்திய, மாநில அரசு அமைப்பிலும், காங்கிரசு, பா.ஜ.க., சிவசேனா, அ.தி.மு.க போன்றவற்றின் மூலம் ஆட்சி அமைப்பிலும், பணியாக்களுடன் கூட்டுச் சேர்ந்து தொழிற்துறையிலும் பார்ப்பன ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. இந்து மதவெறி பாசிசத்தின் தலைமையாக அது இருக்கிறது. ஆகவேதான் பார்ப்பன ஆதிக்கம், பார்ப்பன ஆதிக்கம் என்று கூறுகிறோம். இறுதியாக ஒன்றையும் சொல்கிறோம் ஒருபுறம் நம்மைப் பார்ப்பனத் தலைமை என்று அவதூறு செய்யும் அதே போலிகள் தான் மறுபுறம் பெரியாரை, தி.க.வை வால்பிடித்துப் போவதாகவும் நம்மை அவதூறு செய்கிறார்கள்.


*வெளி வந்துவிட்டது!*




# அசுர கானம்

**மக்கள் கலை இலக்கியக் கழகத்தின்**
**புதிய பாடல் ஒலிப்பேழை**

பார்ப்பன இந்து மதவெறிக்கு
எதிரான போர் முழக்கம்

- ''எனக்கு அரிசன் என்று பேரு வைக்க யாரடா நாயே!'' என்று முழங்கும் கலகக் குரல்
- ''சம்புகனின் உயிர் குடித்த ராமன் எங்கே வாடா'' என்று குமுறும் வெஞ்சினம்
- ''சின்னவாளு, பெரியவாளு அத்தனையும் அவாளு'' என சங்கராச்சாரியின் இந்து முகமூடியை கிழிக்கும் கேலி
- ''இடித்து விட்டான் மசூதியை இது சரிதானா?'' என்று உங்கள் மனசாட்சியை உசுப்பிவிடும் கேள்விக்கணை
- ''அக்கிரகாரமின்னு வச்சிருக்கிறவன் யாரடா அனந்தராமய்யரா இல்லை அப்துல் காதரா?'' பாரதீய ஜனதாவின் முஸ்லீம் எதிர்ப்பு பிரச்சாரத்திற்கு செருப்படி
- ''நாமக்கட்டி ஆளப்போவுது'' என்று இந்து மதவெறி பாசிசத்தின் உண்மை முகத்தைக் காட்டும் நையாண்டி
- ''கங்கை ஆறோடு ரத்தம் கலந்தோடுதே'' என்று நெஞ்சைப் பிழியும் சோகம்
- ''போர் முரசே ஓய்வினி எதற்கு?
வாளெடுத்து வா என முழங்கு'' என்று தட்டியெழுப்பும் போர் முழக்கம்

*60 நிமிட ஒலிப்பேழை இந்து மதவெறியை எதிர்ப்போரின் ஆயுதம் அசுர கானம்*

விலை: ரூ.30.00 பதிவு அஞ்சல் கட்டணம்: ரூ.12.00

பணம் அனுப்ப வேண்டிய முகவரி:
**ஆர்.சீனிவாசன், 45, செங்குன்றம் சாலை,**
**வில்லிவாக்கம், சென்னை-600 049**


படிப்பகம்

www.padippakam.com





அருகிலிருக்கும் இரு படங்களையும் பாருங்கள். ஒருவர் எல்.கே. அத்வானி. பம்பாய் கலவரத்தில் தீக்காயங்களால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளவருக்கு ஆறுதல் கூறுகிறார். மற்றொருவர் பால் தாக்கரே. அதே கலவரத்தில் பம்பாய் போலீசின் துப்பாக்கி சூட்டில் தனது இரு மகன்களையும் இழந்துவிட்ட பெண்மணியைத் தேற்றுகிறார்.


இருவருமே, இந்து மத வெறியைத் தங்களின் அரசியல் ஆயுதமாகத் தரித்திருப்பவர்கள்; மதச் சிறுபான்மையினரான முஸ்லீம்களின் உயிரையும், உடமைகளையும் சூறையாடும் புதிய நாஜிப்'படையின் தளபதிகள். அத்வானி, மத, இன, மொழி வேறுபாடுகளையெல்லாம் மறுத்து இந்து ராஷ்டிரம் அமைக்கத் துடிப்பவர். தாக்கரே, 'மராட்டியம் மராட்டியர்களுக்கே' என பிராந்திய வெறியூட்டி பி.ஜே.பி.-யுடன் கை கோர்த்து திரிபவர். பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கி இன்று வரையும், நவகாளி முதல் பம்பாய் வரையிலும், பல்வேறு யாத்திரைகைகள், கரசேவை என்ற பெயரிலும், மக்கள் சாதாரணமாக கொண்டாட விரும்பும் மத விழாக்களைக்கூட தங்கள் சுயநல அரசியல் நோக்குடன் முஸ்லீம்களுக்கு எதிரான மதவெறியூட்டும் பிரச்சார மேடையாகப் பயன்படுத்தியும் இரு மதத்தைச் சேர்ந்த மக்களின் ஒற்றுமையைத் தகர்த்தெறிந்து அப்பாவி மக்களின் ரத்தத்தைச் சுவைக்கத் துடிக்கும் காட்டேரிகள்.

இரண்டே மாதத்தில், இவர்கள் நாடு முழுவதும் இரண்டாயிரம் மக்களின் உயிர்களைப் பறித்து கோரத் தாண்டவமாடியுள்

# இதுதான் இன்றைய இந்தியா

ளனா. ஆயிரக்கணக்கான போலீசாரு
இராணுவத்தினரும் கலவரப் பகுதிகளுக்கு
அனுப்பப்பட்டும் கூட, நிலைமையைக் கட
டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிய
வில்லை. அரசு இயந்திரத்தின் கேந்திரமான
துறைகளிலெல்லாம் தங்களின் ஆதரவிற்
கான அடித்தளத்தை உருவாக்கி வைத்துள்
ளனர். கலவரம் ஓரளவு அடங்கி, பிரதம
பார்வையிட்டுச் சென்ற பின்னரும் கூட
மீண்டும் கலவரத்தைத் தூண்டிவிட்டு, தாங்
கள் தான் இதன் போக்கினை தீர்மானிப்ப
வர்களும், வழிநடத்துபவர்களும் என்ப
தனை செய்தியாக அறிவிக்கின்றனர். கலவ
ரத்திற்கு காரணமான இவ்வமைப்பின் சட்ட
மன்ற உறுப்பினர்களை ஆயுதங்களுடன்
கைது செய்தவுடனேயே, மதவெறியூட்டப்
பட்ட மக்களைத் திரட்டி, ஆர்ப்பாட்டங்கள்
நடத்தி தங்களின் வலிமையை நிரூபிக்கின்
றனர். தாங்களே ஏற்றுக் கொண்டுள்ள சட்ட
நெறிமுறைகள், ஒழுக்க விதிகளைக்கூட
தூக்கி எறிந்து, மதச் சிறுபான்மையினரை
மட்டுமின்றி, மொழிச் சிறுபான்மையினரை
யும், தங்களை எதிர்க்கும் இன்ன பிறரையும்
மிருகத்தனமாக தாக்கி பயபீதியூட்டுகின்ற
னர்.

அமைச்சர்களுக்கு இணையாகவே
தங்களது படை பரிவாரங்களுடன், உரிய
பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும், இம்மத
வெறியர்கள் கிஞ்சித்தும் மன உளைச்சல்க
ளின்றி, கலவரப் பகுதிகளை பார்வையிடு
கின்றனர். இந்த தைரியம் இவர்களுக்கு எங்
கிருந்து வந்தது? காரணம், இன்று நிலவும்
சமுதாய அமைப்பும், அரசும், அதன் அதி
காரமும் தங்களை எதுவும் செய்துவிட முடி
யாது என்பதுடன், ஆள்வோருக்கும் தங்க
ளின் தயவு தேவை என்பதை அறிந்து
கொண்டிருப்பதால்தான். இந்த ஆணவத்
தால்தான், இன்னும் வெளிப்படையாகவே
நாட்டில் உலாவருகின்றனர்; ஆறுதல்கூறி,
நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். என்ன நெஞ்
சழுத்தம்? கலவரத்திற்கு காரணமானவர்
களே பாதிக்கப்பட்டவர்களை பார்வையிடு
வதற்கு! இந்த ஆணவத்தையும், இறுமாப்
பையும், நயவஞ்சகத்தையும், அவமதிப்
பையும் இன்னும் எத்தனை நாட்கள்
பொறுத்துக் கொள்வது?



படிப்பகம்